# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 118 பங்குனி 10ஆம் நாள் சனிக்கிழமை 24 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28


## தேசியக் கட்சிகளினது வளர்ச்சி தமிழ் மக்களுக்குப் பின்னடைவு

### எனவே உரிமைக்காகப் போராடும் கட்சிகளை ஒன்றுபடவும் யாழ். வணிகர் கழகம் அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 24
கடந்த தேர்தலில் வடமாகாணத்தில் உரிமைக்காகப் போராடும் கட்சிகளுக்கு அப்பால் தேசியக் கட்சிகள் கணிசமான வாக்குகளைப் பெற்றிருப்பது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். தேசியக் கட்சிகளின் வளர்ச்சி தமிழ் மக்களின் 70 ஆண்டு கால உரிமைப் போராட்டத்துக்கு பெரும் » 06

## வடக்கு ஆளுநராக தமிழர் நியமனம்

### ஏனைய மாகாண ஆளுநர்களுக்கும் இடமாற்றம்

கொழும்பு, மார்ச்,24
வடக்கு மாகாணத்துக்குத் தமிழ் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். இது தொடர்பான உத்தரவு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால், அவர் பாகிஸ்தான் புறப்படுவதற்கு முன்னதாகப் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. மேல்மாகாண ஆளுநராக கடமையாற் றிய கே.சி.லோகேஸ்வரனே வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப் படவுள்ளார்.
வடக்குக்கு மட்டுமன்றி 9 மாகா » 23

### சீனா – அமெ. வர்த்தகப் போர்

சீனப் பொருள்களுக்கு வருடத்துக்கு 10 லட்சம் கோடி ரூபா அளவுக்கு வரி விதிக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இதையடுத்து நேற்று அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் சூடான வார்த்தைப் பரிமாற்றங்களுடன் 'வர்த்தகப்போர்' இடம்பெற்றது.
அமெரிக்கப் பொருள்களுக்கு சீனாவில் 25 சத வீதம் வரி விதிக்கப்படுகிறது. ஆனால் சீனப் பொருள்களுக்கு அமெரிக்காவில் 2.5 வீத வரியே விதிக்கப்படுகிறது. ஆனால் சீன பொருள்களுக்கு அமெரிக்காவில் 2.5 வீத வரியே விதிக்கப்படுகிறது. இது நியாமான வர்த்தகம் அல்ல என்று ட்ரம்ப் தெரிவித்தார். இதையடுத்தே சீன பொருள்களுக்கான வரி அமெரிக்காவில் உயர்த்தப்பட்டது.
(விரிவு. பக். 18)

### புலி இலச்சினையுடன் உடுப்பிட்டியில் நோட்டீஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 24
தமிழீழ விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் உடுப்பிட்டியில் சில நாள்களாக ஒட்டப்பட்டுள்ளன. அது தொடர்பில் நீதிமன்றுக்குப் பொலிஸார் அறிக்கையிட்டுள்ளனர்.
உடுப்பிட்டியின் ஒரு சில இடங்களில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
அதில், புலம்பெயர் நாட்டில் வசிக்கும் ஒருவரது பெயர் குறிப்பிடப்பட்டு அவர் பலாலியில் உள்ள அகதிகள் முகாமில் தேவையற்ற தலையீடுகளை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அவருக்கு விடுதலைப் புலிகளால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் நாட்டை விட்டுத் தப்பியோடியிருந்தவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
அவர் தனது சமூக விரோதச் செயலுக்காக நீதித்துறையினரைப் பயன்படுத்துகிறார் என்ற பொருள்படக் குற்றஞ் சாட்டு வசனங்கள் காணப்ப » 23



### வவுனியாவிலும் எச்சரிக்கை

வவுனியா, மார்ச். 24
தவறு செய்வதை நிறுத்தாது விடின் தாங்க இயலாத தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று எழுதப்பட்ட பதாகையால் வவுனியாவில் நேற்றுப் பரபரப்பு ஏற்பட்டது.
வீஸ்மார்கள் என்று உரிமை கோரப்பட்டு எச்சரிக்கை விடுக்கும் வகையில் சிவப்பு நிறத்தில் குறித்த பதாகை வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்தது.
அந்த பதாகையை அவதானித்த பலரிடமும் ஒருவித அச்சத்தை » 06

### சுதாகரனை விடுவிக்குமாறு எம்.பிக்களும் கோருவர்

கொழும்பு, மார்ச் 24
ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியான கிளிநொச்சியைச் சேர்ந்த சச்சிதானந்தன் ஆனந்தசுதாகருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யக் கோரி, தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கையெழுத்துப் பெறப்படும் என்று குழுக்களின் » 06

### தமது தொலைக்காட்சித் தொடரினால் யாழ். பொது நூலகம் உலகப் புகழ் பெறுமாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
தெற்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகவும் சுவடிக் காப்பகமாகவும் இருந்ததும் 1981ஆம் ஆண்டு எரித்து அழிக்கப்பட்டதன் மூலம் உலக வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றுக் கொண்டதுமான யாழ்ப்பாணம் பொது நூல » 06

### தகவலைக் கோரும் நபரது அ.அட்டையைக் கோர முடியாது

#### ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவுரை

யாழ்ப்பாணம், மார்ச் 24
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரும் நபரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும்படி கோர முடியாது என்று ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளது தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு. » 06



### யாழ். பொது நூலகத்தில் அத்துமீறிய நடிகர் ஆர்யா

யாழ்ப்பாணம் மார்ச் 24
யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அத்துமீறிய நடிகர் ஆர்யா மற்றும் அவரது படப்பிடிப்புக் குழுவினரால் வாசகர்கள் மற்றும் சுற்றுலாவிகள் விசனமும் குழப்பமும் அடைந்தனர். நூலகத்தின் பணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் அதன் வெளிப்புறத்தில் படப்பிடிப்பு நடத்துவதற்கே » 06

### ரூ. 80 லட்சம் பணம் மாயம் ஐவருக்கும் தொடர் மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளுக்கென எடுத்து வரப்பட்ட 80 இலட்சம் ரூபா பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐவரையும் எதிர்வரும் ஆறாம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
அநுராதபுரம் பகுதியில் இயங்குகின்ற தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்று யாழ்ப் » 06

### களவாகப் பனை தறித்தால் இனி சிறையும் தண்டமும்

#### அபிவிருத்திச் சபை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24
சட்டத்துக்குப் புறம்பாகப் பனைமரங்களைத் தறிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பொதுமக்களுக்கு யாழ்ப்பா » 23

### யாழ். பல்கலை. ஊழியர்கள் சம்பளம் பெறுவதில் இழுபறி

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டத்தால் கல்விசார் ஊழியர்களும் மார்ச் மாதச் சம்பளத்தைப் பெறுவதில் நேற்று இழுபறி நிலை ஏற்பட்டதா » 06

### சாவ. பேருந்து நிலையத்தில் இளைஞருக்குக் கத்திக்குத்து

சாவகச்சேரி, மார்ச் 24
நீதிமன்ற வழக்கு முடிந்து நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்த இளைஞர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்கானார். இந்தச் சம்பவம் நேற்றுச் சாவகச்சேரிப் பேருந்து நிலையத்தில் நடந்துள்ளது.
பருத்தித்துறை » 06

### ஏப். 4ஆம் திகதிக்குப் பின் அரசியலில் பெரும் மாற்றம்

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்குமாயின் ரணிலை எதிர்த்தவர்கள் மகிந்த பக்கம் தாவுவர்

### அமைச்சரவையிலும் மாற்றம்வரும்

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியோ அல்லது தோல்வியோ அடையும் பட்சத்தில் தெற்கு அரசியல் களத்தில் பெரும் மாற்றங்கள் நிகழக்கூடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
தலைமை அமைச்சருக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் 4ஆம் திகதி » 06

# எம் அப்பாவை விடுவிக்கச் சொல்லி உங்கள் அப்பாவிடம் சொல்லுங்கோ

## அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் மகள் மைத்திரி மகளுக்கு உருக்கமான கடிதம்

**கொழும்பு,**
**ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியான சச்சிதானந்தன் ஆனந்தசுதாகரின் 10 வயது மகளான சங்கீதா, தனது அப்பாவை மன்னித்து விடுதலைசெய்யக் கோரி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகளான சத்துரிகாவுக்கு உருக்கமான கடிதமொன்றை எழுதியுள்ளார்.**

அதில் உள்ளதாவது:
அன்புடன் சத்துரிகா அக்காவுக்கு!
அம்மாவையும் இழந்து அப்பாவையும் பிரிந்து நானும் அண்ணாவும் அநாதையாய் இருக்கின்றோம். நான் அம்மாவின் வயிற்றில் இருந்தபோதே அப்பா கைதுசெய்யப்பட்டார்.
எனக்கு இன்று பத்து வயது. இதுவரைக்கும் அப்பாவுடன் பாசமாகப் பழகியதில்லை. அம்மாவின் செத்த வீட்டில்தான் அப்பாவின் மடியில் இருக்கக் கிடைத்தது. அதுவும் கொஞ்ச நேரமே.
அம்மா இல்லாத இந்த வீட்டில் நானும் அண்ணாவும் அப்பாவுடன் இருக்க ஆசையாய் இருக்கு. அக்கா உங்களுக்குத் தெரியும் அப்பாவின் பாசமும் அருமையும். நீங்கள் கருணை வைத்து உங்கட அப்பாவுக்குக் கொஞ்சம் சொல்லி எங்கட அப்பாவை மன்னித்துவிடச் சொல்லுங்கோ.
அக்கா, நான் இப்ப கடவுளை விட உங்கட அப்பாவைதான் நம்புறன். இந்த உலகத்தில் அவரால் மட்டும் தான் எங்கட அப்பாவை விடுவிக்க முடியும். இது நடக்க நீங்களும் உங்கட அப்பாவிடம் சொல்லுங்கோ. அன்புள்ள அக்கா, அம்மாவும் அப்பாவும் இல்லாத இந்த வீட்டில் எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை.
அக்கா, என்னை உங்கள் தங்கையாக நினைத்து எனது அப்பாவை விடுதலைசெய்ய நீங்களும் உதவுங்கள்.
நன்றி
இப்படிக்கு
அன்புள்ள உங்கள் தங்கையாக
ஆ.சங்கீதா
என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இலஞ்சம் பெற்ற அதிபருக்கு 5 வருட சிறைத் தண்டனை

கொழும்பு, மார்ச் 24
2014 ஆம் ஆண்டு பாட்சாலையில் மாணவன் ஒருவனை சேர்ப்பதற்காக இலஞ்சம் பெற்ற அதிபர் ஒருவருக்கு 5 வருட கடூழியசிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.
மாத்தளை பகுதியைச் சேர்ந்த பெண் அதிபர் ஒருவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனையை கொழும்புமேல்நீதிமன்றம் நேற்று விதித்துள்ளது.
தரம் ஒன்றுக்கு மாணவன் ஒருவனை சேர்ப்பதற்காக ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டமைக்காகவே இந்தத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. (ற-ரி5)

# ரூ.ஒரு கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 24
ஒரு கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பத்துலுஓயப் பகுதியிலேயே இவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.
மதுரங்குளியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சிற்றூர்ந்து ஒன்று சோதனை செய்தபோதே போதைப் பொருள்கள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்வதுடன் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# நீராடச் சென்றவர் மாயம்

கொழும்பு, மார்ச் 24
ஹிக்கடுவ கடற் பரப்பில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று காணாமல் போயுள்ளார்.
ஹிக்கடுவைபிரதேசத்தில் கிரிக்கட் போட்டி ஒன்றில் விளையாடுவதற்கு வந்துள்ள இளைஞர்கள் சிலர், கடற் பரப்பில் நீராடச் சென்றனர் என்றும் அவர்களில் இரு இளைஞர்கள் அலையில் சிக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
அவர்களில் ஒருவர் பிரதேச மக்களால் காப்பற்றப்பட்டு பலபிடிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
மற்றைய இளைஞர் காணாமல் போயுள்ள நிலையில் அவரைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 24
வெல்லவாய ரன்தெனிய பிரதேசத்தில் தாயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ரி 56 ரக துப்பாக்கியின் ரவைகளுடன் நேற்று முன்தினம் 2 பேர் கைது செய்யப்பட்டனர்.
பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
சந்தேக நபர்கள் வெல்லவாயப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 41 வயதுடையவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# ஒரே இரவில் 5 கடைகளில் திருட்டு

கொழும்பு.மார்ச்.24
வெல்லவா்ய நகரில் கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் மற்றும் பணம் திருடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. இனந்தெரியாத சிலர் நேற்று அதிகாலை அப் பகுதியிலுள்ள ஐந்து கடைகளை உடைத்துத் திருடியுள்ளனர்.
ஒரு கடையிலிருந்து 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகக் கடை உரிமையாளர் தெரிவித்தார்.
வெல்லவாய நகரைச் சுற்றிய பிரதேசங்களில் பொலிஸ் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற வேளையிலும் இவ்வாறு கடைகள் கொள்ளையிடப்பட்டிருப்பது கவலையளிப்பதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.
இதற்கு முன்னரும் அப் பகுதியில் ஒரே தடவையில் 9 கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டதன் பின்னர் அங்கு பொலிஸ் காவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

# ஹெரோயினுடன் இருவர் கைது

கொழும்பின், மார்ச் 24
கொழும்பின் வெவ்வேறு பகுதிகளில் ஹெரோயினுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வாழைத்தோட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்பார் தோட்டம் மற்றும் பேர வீதி சந்தியில் வைத்து வாழைத்தோட்ட பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து 2 கிராம் 110 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபர் நேற்று மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.
நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.
வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளியாவத்தை பகுதியிலும் வத்தளை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து 10 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபர் வத்தளை நீதிவான் மன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ற-ரி5)

# மாத்தறையில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

மாத்தறை, மார்ச் 24
மாத்தறை, தெய்யன்தர, பரபாமுல்லயில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோர்தியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்று நடந்த.
இந்த விபத்தில் ஒருவர் அருகில் இருந்த வாய்க்காலில் விழுந்து உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் காயமடைந்தவர்கள் கம்புறுபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# மைத்திரி திரும்பிய கையோடு கூடுகின்றது சு.க. மத்திய குழு

## கூட்டரசு குறித்தும் காத்திரமான முடிவு

கொழும்பு, மார்ச் 24
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆராய்ந்து முடிவொன்றை ஏடுப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் விரைவில் கூடவுள்ளது.
பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சுதந்திரக் கட்சித் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும் இந்தக் கூட்டம் நடைபெறும் என்று சு.க. வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.
பிரதமருக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சுதந்திரக் கட்சிக்குள் இருவேறு கருத்துக்கள் நிலவிவருகின்றன.
பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டுமென ஒருதரப்பும், கூட்டரசுக்குள் இருந்துகொண்டு அவ்வாறு செயற்படமுடியாது என்று மற்றுமொரு தரப்பும் வலியுறுத்தி வருவதால் மைத்திரி அணி இரண்டுபட்டுள்ளது.
இந்தப் பின்னணியில் மத்திய செயற்குழு கூடவுள்ளது. அதில் எடுக்கப்படும் முடிவுக்கு கட்சி உறுப்பினர்கள் கட்டுப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 2015 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 95 ஆசனங்களைக் கைப்பற்றியது. அதில் 55 பேர் கூட்டு எதிரணியுடன் இருக்கின்றனர். எஞ்சியுள்ள 40 பேரில் நால்வர் பிரேரணைக்கு ஆதரவளித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களைக் கைப்பற்றியது. கூட்டரசிலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 144 ஆக இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியி லுள்ள 95 பேரும் பிரதமரை எதிர்க்கும் முடிவை எடுத்தாலும், ஜே.வி.பியும் ஆதரவளித்தாலும் 101 வாக்குகளே கிடைக்கும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளே தீர்மானிக்கும் சக்தியாக அமையும் எனக் கருதப்படுகின்றது. கூட்டமைப்பு வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இருந்தாலும் அது ஐ.தே.கவுக்கு பின்னடைவாக அமையும் எனக் கருதப்படு கின்றது. (ற)

# சிறுநீரக நோயால் 1,534 பேர் பாதிப்பு

பதுளை,மார்ச் 24
மொனராகலை மாவட்டத்தில் இந்த ஆண்டின் இதுவரையிலான காலப்பகுதியில் ஆயிரத்து 534 பேர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்துவர் பாலித்த திலீப் குமார தெரிவித்தார்.
நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது;
மொனராகலையில் 102 பேர் வெள்ளவாயாவில் 271 பேர் புத்தலையில் 229 பேர் படல்கும்பறவில் 90 பேர் செவனகலையில் 150 பேர் கதிர்காமத்தில் 18 பேர் மெதகமையில் 64 பேர் சியாம்பலாண்டுவையில் 186 பேர் மடுல்லையில் 43 பேர் தனமல்விலையில் 274 பேர் பிபிலையில் 105 பேர் என்ற வகையில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுத்தமான குடி தண்ணீர் பாவனை இன்மையே இந்த நோய் ஏற்படக் காரணம். ஆகவே இதுவிடயத்தில் அதிகூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். என்றார். (ற.ரி4)

# உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சித்தேர்தலில் வெற்றிபெற்ற பூநகரிப் பிரதே சசபையின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை வரவேற்றும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் பூநகரிப் பிரதேச சபைக்குத் தெரிவாகிய தவிசாளர், உபதவிசாளர், மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் வரவேற்கப்பட்டனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அருணாசலம் ஐயம்பிள்ளை பூநகரி பிரதேச சபையினுடைய தவிசாளராகவும், பூநகரி பிரதேசத்தில்போட்டியிட்டு வெற்றிபெற்ற முழங்காவில் தேசிய பாடசாலையின் பதில் அதிபரான சிவகுமாரன் சிறிரஞ்சன் உபதவிசாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-6)

# கஞ்சாவுடன் இளைஞர் பண்ணாகத்தில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24

வட்டுக்கோட்டை, பண்ணாகத்தில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரிடம் இருந்து ஒரு கிலோ 506 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கபட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபருக்கு கைது செய்யப்பட்டார் என்றும், சந்தேகநபருக்கு 19 வயது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும், அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்

# முஜிபுர் ரஹ்மானுக்கு கொலை அச்சுறுத்தல்!

கொழும்பு, மார்ச் 24

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவ்ரது முகப்புத்தகப் பக்கத்தில் அவரால் பதிவேற்றம் செய்யப்பட்ட தொலைக்காட்சி விவாதக் காணொளியொன்றுக்கு பின்னூட்டமாக இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. நபர் ஒருவர் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அவருக்கு கொலை அச்சுறுத்தலும் விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றுமொரு பின்னூட்டத்தில் அல்லாஹ்வை நிந்திக்கும் அளவிலான வார்த்தைப் பிரயோகங்களையும் இந்த நபர் பாவித்துள்ளார். அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவாத வன்முறைகள் தொடர்பாகவும், அதனைத் தடுக்க அரசு தவறியமை தொடர்பாகவும் முஜிபுர் ரஹ்மான் நாடாளுமன்றத்தில் ஆற்றிய காரசாரமான உரையை வைத்து இனவாதிகள் இவ்வாறு எதிர்வினையாற்றி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# லசந்த கொலை விசாரணைக்காக ஹன்சார்ட்டை கோரும் பொலிஸார்

கொழும்பு, மார்ச் 24

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படு கொலை தொடர்பில் விசாரணை செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழு, நாடாளுமன்றில் லசந்தவின் கொலை தொடர்பில் பேசப்பட்ட சில ஹன்சார்ட் அறிக்கைகளை மேலதிக விசாரணைகளுக்காகக் கோரியுள்ளது.

இது தொடர்பில் கல்கிசை நீதிவான் மொஹம்மட் மிஹாலிடம் இடையீட்டு மனுவூடாக குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

லசந்த விக்ரமதுங்க பயன்படுத்திய வங்கிக் கணக்குகள் தொடர்பிலான விவரங்களை அந்தந்த வங்கிகள் ஊடாகவும், அவர் தொடர்புகளை முன்னெடுத்த தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில், தொலைபேசி சேவை வழங்குநர் நிறுவனங்கள் ஊடாகவும் குற்றப் புலனயவுப் பிரிவு அறிக்கை கோரியுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட கல்கிசை நீதிவான் நீதிமன்றம், ஹன்சார்ட் அறிக்கை, தொலைபேசி தொடர்பில் விவரமான அறிக்கை மற்றும் வங்கிக்கணக்குகள் தொடர்பான அறிக்கைகளை குற்றப் புலனயவுப் பிரிவின் கூட்டுக் கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவுக்குக் கையளிக்க, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், முகாமையாளர்களுக்கு தனித்தனியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திடிய பகுதியில் வைத்து தனது காரில் பயணித்துக் கொண்டிருந்த போது லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பில் 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் சிறப்பு விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, மூத்த பொலிஸ் அத்தியட்சர் சுதத் நாகஹமுல்ல ஆகியோரின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சர் திஸேராவின் கீழ் பொலிஸ் பரிசோதகர்களான நிசாந்த சில்வா மற்றும் சுதத் குமார ஆகியோர் அடங்கிய சிறப்புக் குழு முன்னெடுத்துள்ளது.

லசந்த சுட்டுக் கொல்லப்படவில்லை என்பதையும், அவர் கூரிய ஆயுதம் ஒன்றால் தலையில் பலமாகத் தாக்கப்பட்டே உயிரிழந்தார் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகள் ஊடாக நிரூபித்துள்ளது.

இது தொடர்பில் முன்னாள் இராணுவப் புலனாய்வு சார்ஜன்ட் மேஜர் தர அதிகாரியான பிரேமானந்த உடலாகம என்பவரையும் பொலிஸார் கைது செய்த நிலையில் பின்னர் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

லசந்த கொலையின் சாட்சியாளர் ஒருவரை கடத்தியமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

லசந்த கொலை தொடர்பில் சாட்சியங்களை மாற்றியமை, அழித்தமை தொடர்பில் முன்னாள் கல்கிசை குற்றவியல் பிரிவுப் பொறுப்பதிகாரி சுகந்தபாலவும், மேல் மாகாணத்தின் தெற்குக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவும் கைது செய்யப்பட்டு தற்போதும் விளக்கமறியலில் உள்ளனர். (ற-71)



# கட்டடம் அமைக்க கோரி ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, மார்ச்.24

கிண்ணியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட குறிஞ்சாகோனி கோட்டத்தில் அமைந்துள்ள கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆரம்பப் பிரிவு ஆசிரியர் கட்டடம் அமைத்துத் தரக் கோரியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். கிண்ணியா பிரதேசத்தில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் இதுவரை இவ்வாறான பாடசாலை குறைகள் நிவர்த்தி செய்யப்படாததையிட்டு தாம் கவலை கொள்வதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ற.ரி2)

# ஜானக பெரேரா கொலை வழக்கு சந்தேகநபருக்கு விளக்கமறியல்

அனுராதபுரம்,மார்ச்.24

குண்டுத் தாக்குதல் மேற்கொண்டு பலரைக் கொலை செய்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட உமர் ஹபிதாபியை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 31 பேரை குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு கொலை செய்து, மேலும் 60 பேரை காயமடையச் செய்த சம்பவம் தொடர்பிலையே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு, நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம், எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தது.

வழக்குத் தாக்கல் செய்த தரப்பும் மற்றும் பிரதிவாதிகள் தரப்பும் வழக்கு விசாரணை செய்யப்படும் தினத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் அறிவித்தது. (ற.ரி2)

# உள்ளூராட்சி அமர்வு திகதி அறிவிப்பு

திருகோணமலை,மார்ச்.24

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் தலைமையில் சபையின் முதலாவது அமர்வு இடம் பெறுவதற்கான திகதிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்டன.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காத சபைகளுக்கான அமர்வுத் திகதிகளே அறிவிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேசசபை மற்றும் திருகோணமலை நகரசபையில் அமர்வு இடம் பெற்று தலைவர் உப தலைவர்களை தெரிவு செய்யவுள்ளதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள தகவல் தெரிவிக்கின்றது.

ஏப்ரல் 10 ஆம் திகதி சேருவில பிரதேசசபை மற்றும் மூதூர் பிரதேசசபையில் அமர்வு இடம் பெறவுள்ளது.

ஏப்ரல் 11 ஆம் திகதி கிண்ணியா நகரசபை மற்றும் கிண்ணியா பிரதேச சபையில் அமர்வு இடம் பெறவுள்ளது.

ஏப்ரல் 12 ஆம் திகதி கந்தளாய் பிரதேசசபை மற்றும் தம்பலகாமம் பிரதேச சபையிலும், ஏப்ரல் 16 ஆம் திகதி மொரவெள பிரதேசசபை மற்றும் பட்டிணமும் சூழலும் (உப்புவெளி) சபையிலும் அமர்வு இடம் பெறவுள்ளது. (ற.ரி2,40)

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை.மார்ச்.24

அம்பாறை, பொத்துவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில இ.பிரதிக்குமார் (வயது37) என்பவரே உயிரிழந்தவராவார். மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மின் கம்பத்தில் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.மரண வீடொன்றுக்குச் சென்று, திரும்பிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளே மோதியுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

# ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள்



திருகோணமலை.மார்ச்.24

திருகோணமலை மாவட்ட உறுப்பினர்கள் நேற்றுத் தமது பதவி பிரமாணக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர். நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட திருகோணமலை மாவட்ட அனைத்து சபைகளுக்கான ஐக்கிய தேசியக் கட்சியில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான ஸ்ரீகொத்தவில் வைத்து மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் முன்னிலையில் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். (ற.ரி2)


# அரச காணியில் அத்துமீறி குடியிருந்த குடும்பம் அகற்றம்

## வீடில்லாது நடுத்தெருவில் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

**யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அரச காணியில் குடியிருந்த குடும்பம் ஒன்று நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் நேற்றுக் காணியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.**

குருநகர் ஜே/67 திருநகர் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட அரச காணியில் குடியிருந்த குடுபத்தினரை யாழ்ப்பாண நீதிவான் மன்றம் 6 மாத கால அவகாசத்தை வழங்கி காணியை விட்டு வெளியேறு மாறு பணித்திருந்தது. வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்த நிலையில் காணியை விட்டு அவர்கள் வெளியேறாமையினால் நீதி மன்றால் அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.



இது தொடர்பில் குடுத்பத்தினர் தெரிவித்ததாவது.

5 வருடங்களுக்கு மேலாக நாம் இங்கு வசித்து வருகின்றோம். இங்கே உள்ள 50 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நாவற்குழியில் வசிப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. எமக்கும் அங்கு காணிகள் வழங்குவதாகத் தெரிவித்து எமது குடும்ப பங்கீட்டு அட்டைகள் அங்கே உள்ள பிரதேச செயலக பிரிவின் கீழ் பெயர் மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது. பின்னர் காணிகள் அங்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. நாம் இப்போது காணியை விட்டு வெளியேறி நடுத்தெருவில் நிறகின்றோம் என்றனர். இது தொடர்பில் ஜே/67 கிராம அலுவலரைத் தொடர்பு கொண்டுகேட்டபோது, கல்லுண்டாய் பகுதியில் இவர்கள் காணியொன்றை அடையாளப்படுத்தி குடியமர வேண்டும். வீட்டுத் திட்டம் வரும்போது முன்னுரிமை அடிப்படையில் இவர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்து தருவதாக கூறியிருந்தேன். அவர்கள் தங்களுக்கும் நாவற்குழி பகுதியில் வீடு வேண்டும் என்றார்கள் என்றார். (4-7)



## வணிகர் கழகத்தால் 22 பேருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.23

யாழ்ப்பாண வணிகர் கழகத்தால் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 22 பேருக்கு வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேசசெயலகங்களூடாக எடுக்கப்பட்ட தரவினடிப்படையில் 22 பேரை தெரிவு செய்து, 3 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகையில் இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பயனாளிகளுக்கு விறகு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் சுயதொழிலை மேற்கொள்வதற்கான பொருள்களும், பணமும் வழங்கி வைக்கப்பட்டன. (112)

## .வலி.கிழக்கு பிரதேச சபை கோப்பாய் மத்திய சந்தை காணிக்கு 150இலட்சம் ஒதுக்கீடு

அச்சுவேலி , மார்ச் 24

கோப்பாய் பகுதியில் மத்திய சந்தை ஒன்றை அமைப்பதற்கு உரிய காணியை கொள்வனவு செய்வதற்கு வலி.கிழக்கு பிரதேச சபை 150 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் யுகராசா ஜெஸீபன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பகுதியில் மத்திய சந்தை ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்ற போதும் அதற்கு பொருத்தமான காணி இல்லை. காணியைக் கொள்வனவு செய்தே சந்தைக்கான கட்டடத்தை கட்ட வேண்டியுள்ளது.

காணியைக் கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைப்புக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் காணியைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சந்தை அமைப்பது தொடர்பாரில் வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில், கோப்பாயில் சந்தை இல்லாதது பெரும் குறைபாடாகவும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கான வசதியீனமாகவும் உள்ளது. சந்தைக்கான பொதுக்காணி இல்லாமல் இருப்பதால் புதிதாக பொருத்தமான அமைவிடத்தில் காணியைக் கொள்வனவுசெய்யவேண்டியுள்ளது.

சந்தைக்கான காணியைக் கொள்வனவு செய்வதற்கு வருடாந்த அபிவிருத்தி ஒதுக்க நிதி ஏற்பாட்டின் கீழ் 150 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருத்தமான காணி கொள்வனவு செய்யப்பட்டதும் கட்டுமான வேலைகள் நடைபெறும் - என்றார். (11)

## ஸ்ரீராம நவமி நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்.24

சத்தியசாயி சேவாநிலையத்தின் ஸ்ரீராம நவமி நிகழ்வானது யாழ்ப்பாண சத்தியசாயி சேவாநிலையத்தில் (இராமநாதன் வீதி) நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப .4.30 தொடக்கம் 6.30 மணிவரை நடைபெறவுள்ளது .இந்த நிகழ்வில் யாழ்ப்பாண கம்பன் கழக தலைவரும் ,யாழ் மாநகர சபை ஆணையாளருமான தனபாலசிங்கம் ஜெயசீலனின சிறப்புரை இடம்பெறவுள்ளது அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## 48ஆவது நினைவுதினம்

சாவகச்சேரி, மார்ச்24

தமிழரசுக் கட்சியின் தென்மராட்சிப் பிரதேச முக்கிய உறுப்பினரும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கவாதியுமான அமரர் கொடிகாமம் ஐயா என அழைக்கப்பட்ட சி.வேலு என்பவரின் 48 ஆவது நினைவுதினம் கொடிகாமம் பிரதான சந்தியில் அண்மையில் செ.சற்குணநாதன் தலைமையில் நடைபெற்றது. இவர் 1970ஆம் கொடிகாமம் பேருந்து நிலையத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்தார். கொடிகாமம் சந்தியில் அன்னாரின் உருவப்படம் வைக்கப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவு கூரப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்விற்கு முன்னாள் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் தனது வாழ்வில் தமிழரசுக் கட்சிக்காக அயராது பாடுபட்ட உத்தமர். அன்றைய .... சாவகச்சேரி தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வ.ந.நவரத்தினத்துக்கு விசுவாசமாக இருந்து செயற்பட்டவர். இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதியாக இருந்து பொது மக்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்தவர். இவர் மறக்கமுடியாதவர்-மக்கள் மனங்களில் மிகவும் கவரப்பட்டவராக விளங்கியவர். மக்களால் மதிக்கப்பட்டவர். மிகவும் நேர்மையானவர். கொடிகாமம் ஐயா அண்ணன் என்றால் எல்லோரும் திரும்பிப் பார்க்கும் நிலையில் மதிக்கப்பட்டார் என தெரிவித்தார். இந்த நிகழ்வில் பொதுமக்கள் அவரது பிள்ளைகள், உறவினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கலந்துகொண்டவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (131)

## திருடர்களால் தாக்கப்பட்ட இருவர் மருத்துவமனையில்

கரணவாய் மார்ச் 24

இமையாணன் பகுதியிலுள்ள வீடொன்றில் உள்நுழைந்த திருடர் குழு வீட்டில் உள்ளவர்களை கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியதுடன் கையில் அகப்பட்ட பொருள்களுடன் தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை2 மணியளவில் இமையாணன் கலைமகள் வீதியிலுள்ள. ஒய்வு பெற்ற வங்கி ஊழியர் சி.நவரத்தினம் என்பவருடைய வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்து திருட முயற்சித்த போது வீட்டில் உள்ளவர்கள் விழிப்படைந்து திருடர்களை மடக்கி பிடிக்க முயற்சித்த போது அவர்களை சரமாரியகத் தாக்கி காயப்படுத்தியதுடன் கையில் அகப்பட்ட ஒரு சோடி காப்புடன் தப்பிச் சென்றுள்ளனர். திருடர்களின் தாக்குதலில் வீட்டு உரிமையாரான சி.நவரத்தினம் அவரது மருமகனான உ.ரகுபதி ஆகிய இருவரும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(108)

## தண்ணீர் பரிசோதனை நடவடிக்கையில் பரிசோதகர்கள்

யாழ்ப்பாணம். மார்ச்.24

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட உணவு உற்பத்தி நிலையங்களின் தண்ணீரை பரிசோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது.

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட உணவகம்,குளிர்பான நிலையங்கள்,ஹோட்டல்கள் ஆகியவற்றின் தண்ணீர் மாதிரிகள் பரிசோதனைக்காக பெறப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையங்களால் உணவுகள், பானங்களை உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் தண்ணீர் பாவனைக்கு உகந்ததா இல்லையா என்பது தொடர்பிலான பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது .

நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள 3 குளிர்பான நிலையங்கள் ,ஒரு ஹோட்டல் ஆகியவற்றின் நீர் மாதிரிகள் பெறப்பட்டன.இவை நீர் வளச் சபையின் ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக உட்படுத்தப்படவுள்ளன.

அதன் பின்னர் நீரின் பயன்படுத்தல் தன்மை தொடர்பில் உரிமையாளர்க்ளுக்கு அறியத்தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (7)

## உணவு நிலையங்களில் திடீர் பரிசோதனை

தென்மராட்சி மார்ச் 24

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வரணி மந்துவில் ஆகிய பகுதிகளில் உள்ள உணவு நிலையங்களில் நேற்றுமுன்தினம் திடீர் பரிசோதனை நடத்தினர்.

பரிசோதனையில் சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்பட்ட உணவு கையாளும் நிலையங்களுக்கு குறைபாடு களை நிவர்த்தி செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த காலப் பகுதிக்குள் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாவிடின் கடை உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்தல் வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. பரிசோதனையின்போது திகதி காலாவதியான பொருள்களை வைத்திருந்த பலசரக்கு கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதி மன்றில் வழக்கத் தாக்கல் செய்யப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## இசை நிகழ்வு பிற்போடல்

யாழ்ப்பாணம்.மார்ச்.24

நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்வானது தவிர்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் என்.சுகிர்தராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்.தெல்லிப்பளை.புற்றுநோய் மருத்துவமனையில் நோயாளிகளுடன் உதவிக்காக தங்குவோரிற்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு நிதிசேகரிக்கும் முகமாக நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவிருந்த இசை நிகழ்வானது எதிர் வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 4.30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.



சங்கானை அ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண பவன் கலந்து கொண்டார். (29)

# சிறப்புத் தேவையுடைய மாணவருக்கு வடமராட்சியில் பாடசாலை வரும்

## கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது

வடமராட்சி, மார்ச் 24

வடமராட்சி பிரதேசதத்தில் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்குகென தனியாக பாடசாலை ஒன்றை அமைக்க வேண்டும். அந்த மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் நீக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது இணைத்தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிதியைப் பெறுவது சிரமமானதாக இருந்தாலும் முயற்சிக்கப்படும் என்றும் இணைத்தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் விடுக்கட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிதணைப்புக்குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரன் இ.அங்கஜன் ஆகியோரின் இணைத் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அதில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

வடமராட்சி வலயத்தில் முன்று பாடசாலைகளில்சிறப்புத் தேவையுடைய 76 மாணவர்கள் கற்று வருகின்றார்கள். அவர்களுக்கு வசதிக்குறைவுகள் இருக்கின்றன. மிகுந்த வேதனைப்பட வேண்டியுள்ளது.

இவர்களைவிட வேறு பல மாணவர்கள் சிவபூமி பாடசாலையிலும் கைதடி நவீல்ட் பாடசாலையிலும் கற்கின்றனர். வடமராட்சியில் இருந்து சிவபூமி செல்லும் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு சிவபூமி நிறுவனம் பேருந்து சேவையை ஏற்படுத்தி உள்ளது. அவர்களின் பணி பாராட்டத்தக்கது. கைதடி நவீல்ட் பாடசாலைக்குச் சென்று வரும் குறித்த மாணவர்களுக்கு அவ்வாறான போக்குவரத்து வசதிகள் இல்லை.

அவர்களுக்குத் தனியான பாடசாலை ஒன்று வடமராட்சியில் வேண்டும். கல்வித் திணைக்களத்துக்கு சொந்தமான காணி நெல்லியடியில் உண்டு. கசல வசதிகளுடன் கூடிய பாடசாலை ஒன்றை அதில் அமைத்துத்தர வேண்டும். தனியான பாடசாலை ஒன்று அமையுமானால் வடமராட்சியைச் சேர்ந்த குறித்த மாணவர்கள் பயன்பெறுவர். அது காலத்தின் தேவை என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இணைத்தலைவர்கள் குறித்த பாடசாலை அமைக்க 50 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகும். ஒரே அமைச்சில் இருந்து நிதியைப் பெறமுடியாது. மீள்குடியேற்ற அமைச்சிடமிருந்து 15 மில்லியன் ரூபாவும் ஏனைய அமைச்சுக்கள் சில வற்றிலும் நிதி கோரி பாடசாலை அமைக்க நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்தனர்.

வடமராட்சி பிரதேசத்தில் புதிய மாணவர்கள் அனுமதி வீதம் வீழ்ச்சிகண்டு வருகிறது. சில வருடத்திற்கு முன்னர் 1,800 மாணவர்கள் பாடசாலைகளில் அனுமதிக்கபட்டனர். இடம் பெயர்ந்து வடமராட்சியில் வசித்த காங்கேசன் துறை, மயிலிட்டி மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிக்கொண்டிருப்பதால் அடுத்த ஆண்டு புதிய அனுமதிக்கான மாணவர்கள் எண்ணிக்கை பெரிதும் வீழ்ச்சியடையும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். கரவெட்டி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அதை ஏற்றுக்கொண்டதுடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் கருத்தடை, இடப்பெயர்வு, பிந்திய திருமணம் இவற்றுக்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டினார். (4-173)

## உப பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மார்ச் 24

தமிழ் உப பொலிஸ் பரிசோதகர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் உப பொலிஸ் பரிசோதகர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகள் இதில் இணைந்து கொள்ளலாம் எனவும் அவ்வாறு இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இணைந்து கொள்பவர்களுக்கான வயதெல்லை வயது 18 தொடக்கம் 28வரை ஆகும். விண்ணப்பப் படிவங்களை வருகின்ற 2ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும். 'பணிப்பாளர் ஆட்சேர்ப்பு, பொலிஸ் ஆட்சேர்ப்பு பிரிவு, இல 375 ஸ்ரீசம்புத்தவ ஜயந்தி மாவத்தை கொழும்பு 6' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (எ-6)

## கோப்பாய் மீன்சந்தைக் கட்டடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

நவீன வசதிகளைக் கொண்ட மீன்சந்தைக் கட்டிடம் ஒன்று கோப்பாய் சந்தியில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் ஜெலிபன் தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது. மேற்படிசந்தைக்கட்டடம், கல்விஅமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் ஆகியோரின் பங்கு பற்றலுடன் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன்அவர்களால் வைபவரீதியாகத்திறந்து கையளிக்கப்படவுள்ளது.

## பொருளாதார அ.உத்தியோகத்தர்கள் 33 பேருக்கு கோப்பாயில் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றி வந்த பொருளாதார அபிவிருத்தி அலுவலகர்கள் 33 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டள்ளனர் என்று பிரதேச செயலகத்தினர் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

'யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் வழிப்படுத்தலுக்கு அமைய பிரதேச செயலக பிரிவின் உள்ளே உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் 31 அலுவலர்கள் தமது கடமை நிலையங்களில் கடமைப்பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர். இருவர் மட்டும் கடமையேற்காமல் இருந்து வருவதாக கூறப்படுகிறது. (4.11)

## தும்பளை அறநெறி பெற்ற ஆக்கத்திறன் விருது

யாழ்ப்பாணம், மார்ச்.24

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் தும்பளை நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பெற்ற விருதுகள் விபரங்கள் வருமாறு வி.ஜதுஷன் எழுத்தாற்றல் போட்டியில் முதலாம் இடத்தையும்,பேச்சாற்றல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஸ்ரீ.வேணுகா எழுத்தாற்றல் போட்டியில் முதலாம் இடத்தையும் பேச்சாற்றல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். ர.சாரங்கி எழுத்தாற்றல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார் மேலும் இந்தப் பாடசாலை மாணவர்களின் 'நல்லதைச் சொல்லி, நல்லதைக் கேட்டு நல்லதையே செய்வோம்' (நெறியாள்கை சிவமலர் சுப்பிரமணியம்) நாடகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளதாக தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தலைவர் தெரிவித்துள்ளார்.

## சிறுநீரகம் பாதிப்படைந்த முன்னாள் போராளி உயிரிழப்பு

வவுனியா மார்ச் 24

வவுனியா ஓமந்தைப்பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளி ஒருவர் சிறுநீரகம் பாதிப்படைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் உயிரி ழந்துள்ளார் என்று பொலிசார் தெரிவித்த னர்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது: வவுனியா ஓமந்தை மாதர்பனிக்கர்குளம் பகுதியில் வசித்து வந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியான இராசையா இராசகுமாரன் 42வயதுடையவர் 6 பிள்ளைகளின் தந்தை சிறுநீரகம் பாதிப்படைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவசாலைக்கு மாற்றப் பட்டார். சிகிச்சைப் பயனின்றி இங்கு கடந்த 20ஆம் திகதி இரவு உயிரிழந்தார்.

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 24

தென்மராட்சி பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று மு.ப.9 மணிக்கு மீசாலை பழமுதிர்ச் சோலை விற்பனை நிலைய மண்டபத்தில் நடைபெறுமெனவும் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்த கொள்ளுமாறும் சங்கத் தவைர் செ.நாகேந்திரன் அறிவித்துள்ளார். (21.9)



யாழ்ப்பாணம் பனிப்புலம் அம்பாள் முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் பாலர் விளையாட்டு விழா முன்பள்ளி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## யாழ் பொது...

கம் தனது 'எங்கவீட்டு மாப்பிள்ளை' திரைப்படத்தின் மூலம் உலகப் புகழ் பெறப் போகின்றது என்று தெரிவித்தார் அந்தத் தொலைக்காட்சித் தொடரின் இயக்குநர்.

யாழ். பொது நூலகத்தில் வாசகர்கள் நேரத்தில் அத்துமீறிப் படப்பிடிப்பு நடத்திய அவரும் அவரது குழுவினரும் நூலக ஊழியர்கள் சிலரின் உதவியுடன் வாசகர்களையும் சுற்றுலாவிகளையும் நூலகத்திற்குள் நுழைய விடாமல் சுமார் அரை மணி நேரம் தடுத்து நிறுத்தினர்.

இது குறித்துச் செய்தி சேகரிக்கச் சென்ற உதயன் பத்திரிகையின் செய்தியாளரிடமே தொலைக்காட்சித் தொடரின் இயக்குநர் இவ்வாறு தம்பட்டம் அடித்துக்கொண்டார். வாசகர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி இந்த வகையில் எப்படிப் படப்பிடிப்பு நடத்த அனுமதிக்க முடியுமாம் என்று நூலக அலுவலர்களிடம் எமது செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அப்போது அங்கு வந்து தன்னை தொடரின் இயக்குநர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டவர், "இந்தத் தொடரில் யாழ்ப்பாணம் நூலகத்தைக் காட்டுவதன் மூலம் அது உலகப் புகழ் பெறப் போகின்றது" என்றார்.

அவரது கருத்தைக் கேட்டுக்கொண்டு அங்கு நின்றிருந்த வாசகர் ஒருவர், "உலகம் முழுவதும் இந்தத் தொடரைப் பார்க்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள். அவர்கள் எல்லோருக்கும் இந்தப் பொது நூலகம் பற்றியும் அதன் பெருமைகள் குறித்தும் நன்கு தெரியும். ஒரு இனப்படுகொலையின் ஆரம்ப அடையாளமாகவரலாற்றில் நிலைத்திருக்கும் இந்த நூலகத்தை ஒரு தொலைக்காட்சித் தொடர்தான் புலம்பெயர் தமிழர்களுக்கு அடையாளம் காட்டவேண்டும் என்பதில்லை" என்று தெரிவித்தார். (உ-114)

## சாவ...

அல்வாயைச் சேர்ந்த சிறிரங்க நாதன் மயூரன் (வயது-25) என்பவரே காயமடைந்தார். மார்பிலும், வயிற்றிலும் அவருக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. கத்தியால் குத்தியவர் எனக் கூறப்படுபவர் கத்திக்குத்துக்கு இலக்கானவரை மருத்துவமனையில் சேர்ப்பித்துவிட்டு பொலிஸில் சரணடைந்துள்ளார். வவுனியாவைச் சேர்ந்த சிவநாதன் சதீஸ் (வயது-27) என்பவரே பொலிஸில் சரணடைந்துள்ளார். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினையே கத்திக் குத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

## ரூ. 80 லட்சம்...

பாணத்திலுள்ள வங்கிகளின் ஏ.ரி.எம். நிலையங்களுக்கு பணத்தைக் கொண்டு சென்று விநியோகம் செய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

இம்மாதம் 9ஆம் திகதி அநுராதபுரத்திலிருந்து 11 கோடியே 74 இலட்சம் ரூபா பணத்தை 05 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் இந்த நிறுவனம் அனுப்பி வைத்துள்ளது.

உடுவில் பகுதிக்கு வந்து பணத்தை சரி பார்த்தபோது அதில் 80 இலட்சம் ரூபா பணம் குறைவடைந்திருந்தது. இதனையடுத்து வாகனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தாம் தேநீர் அருந்துவதற்கு இறங்கிய நேரத்தில் பணப் பைகளை யாராவது திருடியிருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்திருந்தன. அதேபோன்று அரச வங்கி ஒன்றுக்காக எடுத்து வரப்பட்ட பணமே சூறையாடப்பட்டது என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தன. ஆனால் இரு தனியார் வங்கிகளுக்காக எடுதுவரப்பட்ட பணமே திருடப்பட்டதாகப் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கையிட்டுள்ளனர். (உ-103)

## நம்பிக்கையில்லாப்...

நாடாளுமன்றத்தில் முற்பகல் 9.30 மணிமுதல் இரவு 9.30 மணிவரை 12 மணிநேரம் விவாதம் நடைபெறவுள்ளது. அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும். வாக்கெடுப்பின் போது குறித்த பிரேரணை வெற்றிபெறுவதற்குரிய சாத்தியக்கூறுகள் பிரகாசமாகத் தென்படவில்லை என்றும், தோல்வியடைவதற்குரிய அறிகுறிகளே அதிகம் தென்படுகின்றன என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு பிரேரணை தோல்வியடையும் பட்சத்தில் தலைமை அமைச்சருக்கு எதிராக வாக்களித்த கூட்டரசிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மகிந்த அணியுடன் சங்கமிப்பதற்காக எதிரணிக்குச் சென்றுவிடுவர். இதனால், அமைச்சரவையில் மாற்றம் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் இரண்டாம் கட்ட அமைச்சரவை மாற்றத்தை அரச தலைவர் ஒத்திவைத்துள்ளார் என அறியமுடிகின்றது. 55 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஆளுந்தரப்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நால்வரும் கையொப்பமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்த விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்னவென்பது தொடர்பில் இன்னும் அறிவிக்கப்படவில்லை. அதேவேளை, தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெறும் பட்சத்தில் புதிய தலைமை அமைச்சர் உட்பட அமைச்சரவையும் முழுமையாக மாற்றியமைக்கப்படவேண்டும். எனவேதான், தலைமை அமைச்சர்வெற்றியடைந்தாலோ அல்லது தோல்வியடையும் பட்சத்திலோ தெற்கு அரசியலில் பெரும் மாற்றம் ஏற்படக்கூடும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கிடையில் தலைமை அமைச்சருக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பம் திரட்டப்பட்டுள்ளபோதிலும் அதிருப்தி நிலையில் இருக்கும் உறுப்பினர்களுடன் மகிந்த அணி இரகசிய சந்திப்புகளை நடத்துவதற்கு முயற்சிக்கின்றது. (சி-21)

## யாழ். பல்கலைக்கழக...

கத் தெரிவிக்கப்பட்டது.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து

ஊழியர் சங்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைக் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து அதே கோரிக்கையை முன்வைத்துப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கமும் போராட்டத்தை ஆரம்பித்தது. இந்தப் போராட்டங்கள் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் இடம் பெற்று வருகின்றன.

கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால் மார்ச் மாதச் சம்பளத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதில்லை என்று நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் அறிவித்திருந்தது. அதன்படி சம்பளம் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. ஆனால் சங்கங்களில் அங்கத்துவமில்லாத ஒருவரின் உதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சம்பளப் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

அந்தப் பட்டியலில் கையொப்பம் இடவேண்டிய கணக்காளர் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கத்தில் அங்கத்தவராக இருப்பதால் அவர் கையொப்பமிட அக்கறை காட்டவில்லை என்று ஊழியர் சங்கங்கள் கூறுகின்றன.

இருப்பினும் சம்பளப் பட்டியலில் துணைவேந்தர் கையெழுத்திட்டபடி அது வங்கிக்கு வழங்கப்பட்டதாக ஊழியர் சங்கம் தெரிவித்தது. அடுத்த திங்கட்கிழமை கணக்காளரது கையொப்பம் இடப்படும் என்று கூறி சம்பளப் பணத்தை வழங்குவதற்கான சம்மதம் வங்கியிடமிருந்து பெறப்பட்டதாகவும் சங்கம் தெரிவித்தது.

இந்த நடைமுறைக்குத் தாம் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்தும் கணக்காளர் கையொப்பமிடாது பணம் விடுவிப்பது எந்த முறையில் சாத்தியம் என்று கேள்வியெழுப்பியதை அடுத்தும் சம்பளப் பணத்தை விடுவிப்பதை வங்கி நிறுத்தியது என்றும் சங்கம் தெரிவித்தது. இதையடுத்து அதனால் கணக்காளருக்கு பல வழிகளில் நெருக்குதல் கொடுக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் நேற்றுப் பிற்பகல் கணக்காளரின் கையெழுத்துப் பெறப்பட்டதாகவும் சங்கம் தெரிவித்தது. இவை குறித்து பல்கலைக்கழகக் கணக்காளரதும் துணைவேந்த ரதும் கருத்துக்களைப் பெற முடியவில்லை. (உ-4)

## சுதாகரனை...

பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துடனான கடிதம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படும் என்றும் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

"2008ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனுக்கு கடந்த வருடம் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. அவரது மனைவி அண்மையில் இயற்கை எய்தினார். ஆனந்தசுதாகரருக்கு 10 மற்றும் 12 வயதில் ஆண், பெண் பிள்ளைகள் உள்ளனர். தாயை இழந்த குறித்த இரு பிள்ளைகளும் இன்று நிர்க்கதி யான நிலையில் உள்ளனர். எனவே, அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனுக்கு பொதுமன்னிப்பின் அடிப்படையில் அரச தலைவர் விடுதலை வழங்கவேண்டும்.

அதனை வலியுறுத்தி தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்துகள் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் விடுதலையை விரும்பும் பெரும்பான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கையெழுத்துகளைப் பெற்று அரச தலைவரிடம் கையளிக்கவுள்ளோம்" - என்றார் அவர். இதே வேளை சுதாகரனை விடுவிக்கக் கோரி கிளிநொச்சியில் நேற்றுக் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை மும்முரமாக இடம்பெற் றது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக இந்த நடவடிக்கை இடம்பெற்றது. ஏராளமான பொதுமக்கள் அங்கு சென்று கையெழுத்துக்களை இட்டுச் சென்றனர். (உ-21,35)

## யாழ்...

அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதும், அத்துமீறி நூலகக் கட்டடத்தின் உள்ளே படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் க.ஜெயசீலன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார். இது குறித்து தன்னிடம் முறையிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

படப்பிடிப்புக் குழுவினர் அத்துமீறி நடந்துகொண்டனர் என்று ஆணையாளர் தெரிவித்தபோதும் பொது நூலக ஊழியர்கள் சிலர் படப்பிடிப்புக் குழுவினருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வாசகர்கள் உள்ளே நுழைவதையும் சுற்றுலாவிகள் நூலகத்தைப் பார்வையிடுவதையும் தடுத்து நிறுத்தினர் என்று வாசகர்கள் சிலர் உதயன் பத்திரிகையிடம் விசனம் தெரிவித்தனர். சுமார் அரை மணி நேரம் இந்தக் குழப்பம் நீடித்தது. அதற்கிடையில் நடிகர் ஆர்யாவின் படப்பிடிப்பு பொது நூலகத்தில் நடைபெறுகிறது என்று கேள்விப்பட்ட அவரது ரசிகர்கள் சிலர் நூலகத்துக்கு வந்து அவருடன் 'செல்பி' எடுத்துக்கொண்டனர்.

நடிகர் ஆர்யாவுக்கு மணப்பெண் தேடும் எங்கவீட்டு மாப்பிள்ளை என்கிற தொலைக்காட்சித் தொடருக்கான படிப்பிடிப்பே இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

"படப்பிடிப்புக்குழு இங்கு வருகைதருவதற்கு முதலில் எம்முடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டனர். அது சம்பந்தமாக மாநகர ஆணையாளரிடமே தொடர்புகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தேன். பின்னர் மாநகர ஆணையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் படப்பிடிப்புக்குழு வருகை தந்தது. அந்தக் கடிதத்தில் நூலகத்தின் வெளிப்புறம் திறந்தவெளிப் ப்குதியில் படப்பிடிப்பு மேற்கொள்ளப்பட அனுமதிக்கப்படுவதாக இருந்தது. எனினும் வாகனத்தில் உள்ளே வருவது போன்ற காட்சி படமாக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு அனுமதித்தோம். ஆனால் அவர்கள் பின்பு நூலகத்தின் உட்புறமும் அத்துமீறி படப்பிடிப்பை மேற்கொண்டனர்" என்றார் நூலகர். (உ-114)

## வவுனியாவிலும்...

ஏற்படுத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கணேசபுரம் முதன்மை வீதிச் சந்தியில் நேற்று இந்தப் பாதாகை காணப்பட்டது. (உ-21)

## தேசியக்...

பின்னடைவுகளை ஏற்படுத்தும். தமிழ் மக்களுக்கு நல்லதோர் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் கட்சிகள் ஒன்றாகச் செயற்படுவதே எமக்குரிய தீர்வு கிடைப்பதற்கு வழிவகுக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தெரிவித்தது.

வணிகர் கழகம் ஊடகங்களுக்கு நேற்று அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஓரிரு சபைகளைவிட மற்றைய எந்தச் சபையிலும் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலையிலே, கூடிய உறுப்பினர்களைப் பெற்ற கட்சி ஆட்சி அமைக்க, ஏனைய கட்சிகள் தங்கள் ஆரதவை நல்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

நாம் இது சம்பந்தமாக தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தியிருந்தோம். இந்த அடிப்படையில் அவர்கள் செயற்படுவார்கள் என நாம் நம்புகிறோம். எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் நாம் அதை வரவேற்கிறோம். ஆனால் ஆட்சி அமைக்கும்போது, இன்னோர் கட்சியின் முழு ஆதரவையும் பெற்று, ஆட்சி அமைப்பதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதை விடுத்து ஒரு கட்சியை உடைத்து, அதில் சில உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைப்பது ஆரோக்கியமான விடயமல்ல. அவ்வாறு அமைக்கப்படும் ஆட்சி ஒருபோதும் பலமான, நிலையான ஆட்சியாக அமையப்பெறுவதும் இல்லை. இதனால் பாதிக்கப்படப் போவது சம்பந்தப்பட்ட கட்சிகளைவிடத் தமிழ் மக்களே.

உள்ளூராட்சி சபைகள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும், நீதியான, நேர்மையான ஆட்சியை நடத்துவதற்கும் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒருபுறம் தமக்குரிய உரிமைக்காகப் போராடுவதற்கு ஆதரவு வழங்குவதுடன், மறுபுறம் தங்களுடை வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றையும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். இதை கடந்த காலங்களின் பல தமிழ்க் கட்சிகள் செய்யத் தவறியுள்ளன. வேலை வாய்ப்புக்காகவும், வாழ்வாதாரத்துக்காகவும் தமிழ் மக்கள் தேசியக் கட்சிகளை ஆதரிப்பதைக் கடந்த தேர்தலின் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆகையால் எதிர்காலத்தில் தமிழ்க் கட்சிகள் மக்களுடைய உரிமைக்காகப் போராடுவதுடன், அவர்களுடைய வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, பொருளாதார அபிவிருத்திகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம் என்றுள்ளது. (உ-21)

## தகவலைக்...

தகவல் கோரிக்கைக்கு பதில் வழங்குவதாயின் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டின் பிரதியை உறுதிப்படுத்தித்தருமாறு உதயன் செய்தியாளரைப் பாதுகாப்பு அமைச்சு கோரியிருந்தது. அதை எதிர்த்து உதயன் செய்த மேன்முறையீட்டிலேயே ஆணைக்குழு படைத் தரப்பினருக்கு இந்த அறிவுறுத்தலை உறுதியாகத் தெரிவித்தது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து சில தகவல்களை உதயன் செய்தியாளர் கேட்டிருந்தார். அந்தத் தகவல்களை வழங்குவதற்குக் கோரிக்கையாளர் இலங்கைக் குடியுரிமையாளர் என்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு பதிலளித்திருந்தது. தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் பிரதியை கிராம அலுவலரிடம் உறுதிப்படுத்தி பிரதேச செயலரிடமும் உறுதிப்படுத்தி வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி அத்தகைய தகவல்களைக் கோர முடியாது என்பதால் அதற்கெதிராக உதயன் ஆணைக்குழுவில் முறையிட்டது. இது தொடர்பான விசாரணை கொழும்பிலுள்ள ஆணைக்குவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. பாதுகாப்பு அமைச்சின் சார்பில் சட்ட அலுவலர்கள் இருவரும் இராணுவப் போச்சாளர் சுமித் அத்தப்பத்துவும் முன்னிலையாகியிருந்தனர்.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் விண்ணப்பிக்கும் ஒருவர் விண்ணப்பப் படிவத்தில் "நீங்கள் இலங்கைப் பிரஜையா?" என்ற கேள்விக்கு "ஆம்" என்று பதில் வழங்கியிருந்தால் அதுவே அவரது குடியுரிமையை உறுதிப்படுத்தப் போதுமானது என்று ஆணைக்குழு விளக்கமளித்தது. தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டுப் பிரதியை உறுதிப்படுத்தித் தருமாறு கோரவேண்டியதில்லை அவ்வாறு கோருவது தவறான முன் உதாரணம் என்றும் சுட்டிக்காட்டியது.

மேலும் விண்ணப்பிப்பவர் மீது சந்தேகம் இருந்தால் என்ன அடிப்படையிலான சந்தேகம் என்பதைக் குறிப்பிட்டு மட்டுமே அவர் இலங்கை குடியுரிமையாளரா என்பதை உறுதிப்படுத்தக்கோர முடியும் என்றும் தெரிவித்தது.

"இலங்கை இராணுவத்தினரின் நற்பெயருக்கு பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் களங்கம் விளைவிக்கப்படுகின்றது. விண்ணபதாரி கேட்டிருந்த தகவல்கள் அதனுடன் தொடர்புடையவை போன்று இருந்ததால் விண்ணப்பதாரியின் குடியுரிமையை உறுதிப்படுத்தக் கோரினோம்" என்றார்.

இறுதியில் உதயன் கோரிய தகவல்கள் அனைத்தையும் வழங்க பாதுகாப்பு அமைச்சும் இராணுவமும் இணங்கின. (உ-5)

# பாகிஸ்தான் பயணத்தை புறக்கணித்த எம்.பிக்கள்

## எதிர்ப்புக்கள் வலுத்ததால் அழைப்பை நிராகரித்தனர்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பாகிஸ்தானுக்குச் செல்லவிருந்த தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்த விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், கிராமிய அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எஸ். அமீர் அலி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் இறுதிநேரத்தில் அந்தப் பயணத்தில் இணைந்துகொள்ளவில்லை.

முன்னர் இந்தப் பயணத் தூதுக்குழுவில் அவர்களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன. அண்மையில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி நிலைநாட்டப்படாத சூழ்நிலையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச பயணத்தில் இணைவது தொடர்பில் விமர்சனங்கள் எழுந்திருந்தன .

இந்தப் பின்னணியிலேயே மேற்படி மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாகிஸ்தான் செல்லாதிருக்கத் தீர்மானித்தனர் எனத் தெரியவந்தது. இவர்களைப் பயணத்தில் இணைத்துக்கொள்ள அரச தலைவரின் தரப்பு இறுதிநேர முயற்சிகளை எடுத்தபோதும் அது கைகூடவில்லை.

"நாட்டில் அண்மையில் இடம்பெற்றுவந்த முஸ்லிம்களுக்கு எதிரான அசம்பாவிதச் சம்பவங்களை நேரில் சென்று பார்வையிட்டு மனமுடைந்திருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பாகிஸ்தான் பயணம் மேற்கொள்வதை நான் விரும்பவில்லை" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மையில் அம்பாறை மற்றும் கண்டி மாவட்டங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது அவற்றை நிறுத்துவதற்கு அரசு மேற்கொண்ட வழிமுறைகளும், சட்ட நடவடிக்கைகளும் என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இறுதி நேரத்தில் சட்டநடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருந்தாலும் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்த தருணத்தில் அவற்றை நிறுத்துவதற்கு அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகள் நியாயமானதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாது, அங்கு இடம்பெற்ற அசம்பாவிதங்கள் வலுவடைந்த பின்னரும், நாங்களும் பல அழுத்தங்களைக் கொடுத்ததன் பின்னரே சட்டநடவடிக்கைகளையும், கைதுசெய்யும் பணிகளையும் அரசதரப்பினர் மேற்கொண்டனர். இவ்வாறான நிலையில் முழு நாட்டு முஸ்லிம்களும் அதிருப்தியடைந்திருக்கின்ற இந்தக் கால சூழ்நிலையில் ஜனாதிபதியுடன் பாகிஸ்தான் செல்வதைப் புறக்கணித்துள்ளேன்" - என்றார். (ற)

## பொன்சேகா சீருடை அணியலாம் ஆனால் அதிகாரம் செய்யமுடியாது



கொழும்பு, மார்ச் 24

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு இராணுவச் செயற்பாட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதற்குரிய அதிகாரம் இல்லை என்று அரசு நேற்றுத் தெரிவித்தது.

இராணுவத்தில் அதியுயர் பதவியாகவே பீல்ட் மார்ஷல் பதவி கருதப்படுகின்றது. இலங்கையில் அந்தப் பதவியை வகிக்கும் முதலாவது இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா கருதப்படுகின்றார். அந்தப் பதவியை வகிப்பவருக்குப் பல சிறப்புரிமைகள் வழங்கப்படும். அரச நிகழ்வுகளில் இராணுவச் சீருடையுடன் பங்கேற்கலாம்.

இந்த விவகாரம் தொடர்பில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார, பிரதமரிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார். அவற்றுக்குப் பிரதமரின் சார்பில் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக பதிலளித்தார்.

கேள்வி: அமைச்சர் சரத் பொன்சேகா பீல்ட் மார்ஷல் என்றவகையில் தற்போதும் இலங்கை இராணுவத்துடன் இணைக்கப்பட்டுள்ளாரா?

பதில்: இல்லை.

கேள்வி: இவர் பங்குபற்றக்கூடிய இராணுவச் செயற்பாட்டு நடவடிக்கைகள் யாவை?

பதில்: இராணுவச் செயற்பாடுகளில் ஈடுபடும் அதிகாரம் கிடையாது.

கேள்வி: இவர் இராணுவச் சீருடையில் பங்கேற்கக்கூடிய நடவடிக்கைகள் எவை?

பதில்: அழைப்பு விடுக்கப்படும் நிகழ்வுகளுக்கு அவர் உத்தியோகபூர்வ ஆடையில் செல்லலாம்.

கேள்வி: இராணுவ நடவடிக்கைகளின்போது அவருக்குக் கிடைக்கின்ற அல்லது கிடைக்கக்கூடிய அதிகாரங்கள் எவை?

பதில்: இராணுவச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை.

கேள்வி: இராணுவ அலுவலர் என்றவகையில் இவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியுமா?

பதில்: இராணுவத்திலிருந்து அவர் ஓய்வுபெற்றுவிட்டார். எனவே, கேள்வி ஏற்புடையதாகாது.

கேள்வி: நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு உறுப்பினர்களுக்கென ஆடை நடைமுறை இருக்கின்றது. எனவே, நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் இராணுவச் சீருடையில் இவர் பங்கேற்கலாமா?

பதில்: இதுபற்றி சபாநாயகரிடம்தான் கேட்கவேண்டும்.

இதன்போது குறுக்கிட்டு பதிலளித்த சபாநாயகர், இது பற்றி ஆராய்ந்து பார்த்து அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார். (ற)

## ஐ.தே.க. கைப்பற்றிய 2 சபைகளில் அரியணையேறியது மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 24

காலி, நீர்கொழும்பு மாநகர சபைகளில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றியபோதும் அந்தச் சபைகளின் முதல்வர் பதவிக்கான தேர்தல்களில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவிடம் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைச் சந்தித்துள்ளது.

காலி, நீர்கொழும்பு மாநகர சபைகளின் மேயர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்புகள் நேற்று அந்தந்த சபைகளில் இடம்பெற்றன.

காலி மாநகர சபையில் ஐ.தே.க. 14 ஆசனங்களையும், சிறிலங்கா பொதுஜன பெரமுன 13 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 3 ஆசனங்களையும் கைப்பற்றியிருந்தன. ஜே.வி.பி. 3 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி ஒரு ஆசனத்தையும், சுயேச்சைக்குழு ஒரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

> சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தயான் லான்சாவுக்கு 25 வாக்குகளும், ஐ.தே.க. நிறுத்திய விஜித பெர்னாண்டோவுக்கு 19 வாக்குகளும் கிடைத்தன. சுயேச்சைக் குழுக்களின் ஆதரவுடன் இங்கு பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

நேற்று நடந்த காலி மாநகர சபையின் மேயர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக பிரியந்த சஹபந்து கொடகே 20 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். 14 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த ஐ.தே.க. நிறுத்திய மேயர் வேட்பாளர் ஜிலித் நிஷாந்தவுக்கு 11 வாக்குகளே கிடைத்தன.

இதேபோன்று நீர்கொழும்பு மாநகர சபையிலும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மேயர் வேட்பாளராக தயான் லான்சாவே வெற்றிபெற்றார்.

நீர்கொழும்பு மாநகர சபையில் அதிகப்படியாக 19 ஆசனங்களை ஐ.தே.க. கைப்பற்றியிருந்தது. 16 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த சிறிலங்கா பொதுஜன பெரமுன நிறுத்திய மேயர் வேட்பாளரே வெற்றி பெற்றுள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தயான் லான்சாவுக்கு 25 வாக்குகளும், ஐ.தே.க. நிறுத்திய விஜித பெர்னாண்டோவுக்கு 19 வாக்குகளும் கிடைத்தன. சுயேச்சைக் குழுக்களின் ஆதரவுடன் இங்கு பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

"மகிந்த அணிக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இந்த வெற்றியானது, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை செயற்படத்தொடங்கியுள்ளது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. ஐ.தே.க. உறுப்பினர்களும் எமது அணிக்கு ஆதரவளித்துள்ளனர். தாமரை மொட்டு புரட்சி வெடிக்க ஆரம்பித்துள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (ற)

## பாகிஸ்தான் குடியரசு விழாவில் முதன்மை விருந்தினர் மைத்திரி

கொழும்பு, மார்ச் 24

பாகிஸ்தானின் குடியரசு தின விழா நேற்று முற்பகல் பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராக இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்குபற்றினார்.

விழாவுக்குச் சென்ற அரச தலைவர் மைத்திரியை பாகிஸ்தான் தலைமை அமைச்சர் சஹீட் கான் அப்பாசி வரவேற்றார். அங்கு அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மேடைக்கு மைத்திரிபால அழைத்துச்செல்லப்பட்டார். பாகிஸ்தான் அரச தலைவர் மம்னூன் ஹூசைன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பாகிஸ்தான் தலைமை அமைச்சர், பாகிஸ்தான் சபாநாயகர் மற்றும் அந்த நாட்டின் முப்படைகளின் தளபதிகள் மேடையில் அமர்ந்திருந்தனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வருகையுடன் விழா நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இரண்டு நாடுகளினதும் அரச தலைவர்கள் உள்ளிட்ட அதிதிகள் இராணுவ அணிவகுப்பு மரியாதை மற்றும் விமானப்படையினரின் சாகசங்களைப் பார்வையிட்டனர்.

இந்த விமான சாகசங்களில் பாகிஸ்தான் இராணுவத்தினருடன் பஹ்ரெய்ன், ஜோர்தான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளின் இராணுவத்தினரும் ஈடுபட்டனர். மூன்று மணி நேரமாக இடம்பெற்ற இந்தக் குடியரசு தின விழாவில் பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரச தலைவர் மம்னூன் ஹூசைன் விழாவில் உரையாற்றினார். இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான நட்புறவை எடுத்துக்காட்டும் வகையில் தனது உத்தியோகபூர்வ அழைப்பையேற்று பாகிஸ்தானின் குடியரசு தின விழாவில் பங்குபற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குப் பாகிஸ்தான் அரச தலைவர் தனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்தார்.

சீரமைப்புச் செய்யப்பட்டிருந்த இஸ்லாமாபாத் சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தை நேற்று பிற்பகல் அரச தலைவர் மைத்திரி திறந்தார். அதைத் தொடர்ந்து அரச தலைவர் மைத்திரிக்கும் பாகிஸ்தான் தலைமை அமைச்சருக்கும் இடையே இருதரப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ற)

## வன்முறைக் கருத்துக்கள் பதிவிட்டோருக்கு மறியல்

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் அவசர காலச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது, இனவாத உணர்வுகளைத் தூண்டும் விதமாக இன, மத ரீதியில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் வன்முறை களைத் தூண்டிக் கருத்துக்களைச் சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பரப்புரை செய்தனர் என்று கூறப்படும் கொழும்பின் இரு பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கும் மூன்று மாணவர்களை எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரை தொடர்ந்து மாகொல சிறுவர் தடுப்பு இல்லத்தில் தடுத்து வைக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே குறித்த மூன்று மாணவர்களுக்கும் பிணை வழங்க முடியாது என மறுத்த நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த மூவரும் நாட்டில் வன்முறையுடன் கூடிய சூழல் நிலவிய சமயம், நாட்டில் சமூக வலைத்தளங்கள் தடை செய்யப்பட்டிருந்த காலப்பகுதியில் இந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளனர். இந்த மூன்று மாணவர்களும் 256 மாணவர்கள் அங்கத்தவர்களாக இருக்கும் சிங்ஹலயே அபி எனும் பெயரில் வட்ஸ் அப் குறூப் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அதனூடாக இனங்களிடையே உணர்வுகள் தூண்டப்படும் வகையில் கருத்துக்களைப் பரப்புரை செய்துள்ளனர் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானுக்குத் தெரிவித்தனர்.

முதல் பீ அறிக்கை மற்றும் மேலதிக விசாரணை அறிக்கையை ஆராயும்போது 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பிலான் சர்வதேச இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் கீழ் பிரகாரம் குற்றமொன்று நிக்ழ்ந்துள்ளமை தெளிவாகிறது, என்று தெரிவித்து, வழக்கை எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்தி வைத்தார். (ற71)

# ஆமர் வீதிச் துப்பாக்கிச் சூடு சூத்திரதாரி மாகந்துரே மதூஷ்

## பொலிஸ் விசாரணையில் தகவல்

கொழும்பு, மார்ச் 24

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆமர் வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மாகந்துரே மதூஷின் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனது சகாக்கள் ஊடாக மதூஷ் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளமை தொடர்பிலும் அதன் இலக்கு கொல்லப்பட்ட 42 வயதான இனசமுத்து என்டனி ராஜே என்பது தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று விசாரணைகளுக்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாகந்துரே மதூஷின் சகாக்களைத் தேடி கண்காணிப்புக் கமரா ஆதாரங்கள் மற்றும் அறிவியல் தடயங்கள் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த உயர் பொலிஸ் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 42 வயதான இனசமுத்து என்டனி ராஜ் என்பவர் முன்னர் மாகந்துரே மதூஷின் போதைப் பொருளை விற்பனைச் செய்யும் வலையமைப்பில் முக்கிய வர்த்தகத்தை முன்னெடுத்தவர் என்றும், பின்னர் அதில் இருந்து விலகி தனியாக வர்த்தகம் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பழி வாங்கும் நோக்குடன் அவர் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கடந்த 19ஆம் திகதி முற்பகல் 10.45 மணியளவில் மெசஞ்சர் வீதிக்குள் நுழைந்த சிவப்பு நிற பி.ஏ.எஸ்.8088 எனும் காரில் பயணித்த கணவன் மனைவி மீது, மோட்டார் சைக்கிளில் முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிந்து வந்த அடையாளம் தெரியாதோர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். படு காயமடைந்த கணவன் மனைவி இருவரும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் கணவன் உயிரிழந்தார். மனைவி தொடர்ந்து அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெறுகின்றார்.

சம்பவம் தொடர்பில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பத்தின்நாயக்கவின் மேற்பார்வையில் கொழும்பு வடக்கு மூத்த பொலிஸ் அத்தியட்சர் லயனல் குணதிலகவின் ஆலோசனைக்கு அமைவாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மஹிந்த கருணாரத்ன தலைமையிலான பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த சொய்ஸாவின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வாவின் கீழ் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் சிறப்புக் குழுவும் மேலதிக விசாரணைகளை தொடர்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-71)

# ஐ.நா. அமர்வால் அழுத்தம் இல்லை

## அமைச்சர் பைசர் கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 24

மனித உரிமைகள் சபையின் 37ஆவது அமர்வால் இலங்கைக்கு எவ்வித மான அழுத்தங்கள் ஏற்படப்போவதில்லை. கண்டி கலவரம் தொடர்பான மனித உரிமைகள் சபையின் கேள்விக்கு அரசு விசேட சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் உறுதியளித்துள்ளது என்று தெரிவித்தார் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா.

மனித உரிமைகள் சபையின் அமர்வுகளில் பங்கேற்பதற்காக ஜெனிவா சென்றுள்ள அமைச்சர் பைசர் முஸ்தபா அங்கிருந்து கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 37 ஆவது அமர்வு ஜெனிவா நகரில் இடம்பெற்று வருகின்றது. அதில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஆய்வுகள் இடம்பெற்றுவருகின்றன. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் பல்வேறு கேள்விகளை இலங்கை தொடர்பில் முன்வைத்திருந்தார்.

இலங்கை 2015ஆம் ஆண்டிலிருந்து முன்னேற்றகரமான பாதையில் சென்றுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இலங்கையில் தேசிய சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு அரசு பல்வேறான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. அவ்வாறே நீதியை நிலைநாட்டுவதற்கான முன்னேற்றகரமான பணிகளையும் அரசு மேற்கொண்டுவருகின்றது என்பதை சர்வதேச சமூகங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் 37ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான பெரும் அழுத்தங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. அதேபோன்று மனித உரிமைகள் சபையால் இலங்கைக்குப் பிரச்சினைகள் ஏற்படபோவதில்லை.

மனித உரிமைகள் சபையின் முன்னைய அமர்வுகளின்போது இலங்கை பெரும் அழுத்தத்தைச் சந்தித்திருந்தது. அவ்வாறே இந்தமுறை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அமர்வில் மனித உரிமைகள் சபை ஆணையாளர் அண்மையில் இடம்பெற்ற கண்டி கலவரம் தொடர்பிலும் கேள்வி எழுப்பியிருந்தார்.

கண்டி கலவரம் தொடர்பிலான நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படும், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது விடப்படும் தவறுகள் குறித்து அரசு பொறுப்புடன் செயற்படும். சர்வதேசத்துக்கு எம்மால் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதியை கருத்திற் கொண்டு நாட்டில் இனவாதத்தைத் துண்டுபவர்களுக்கும் நாட்டின் அமைதியைச் சீர்குலைப்பவர்களுக்கும் அரசின் அனுசரணை கிடைக்கப்போவதில்லை. தொடர்ந்து சட்ட விரோதச் செயற்பாடுகள் தொடர்பாகக் கடுமையான சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள்சபையை மையமாகக் கொண்டே நாட்டில்கலவரநிலைதூண்டி விடப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசேட விசாரணைகளை மேற்கொள்வதன்மூலம்வெற்றிகரமான நகர்வுகளை உருவாக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது -என்றார். (ற-9.31)

# 11 பேர் கடத்தப்பட்ட வழக்கில் நீதிமன்ற உத்தரவில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 24

ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் வெள்ளை வானில் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகளுக்காக, கடற்படையின் ரியர் அட்மிரல் ஆனந்த குருகேவை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்க வேண்டும் என்று கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன கடற்படைக்கு விடுத்த உத்தரவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ரியர் அட்மிரல் ஆனந்த குருகே சார்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றில் இடையீட்டு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டு, அதனூடாக எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி ரியர் அட்மிரல் ஆனந்தகுருகேவிசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகவுள்ளார்.

இதனிடையே 5 மாணவர் உள்ளிட்ட 11 பேர் கடத்தல் விவகாரத்தில் பிரதான சந்தேக நபர்களில் ஒருவராக கருதப்பட்டு தேடப்பட்டு வரும், லெப்டினன் கொமாண்டர் ஹெட்டி ஆரச்சியின் கீழ் சேவையாற்றியோரின் விவரங்களை குற்றப் புலனாய் வுப் பிரிவு கடற்படையிடம் கோரியுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு கோட்டை நீதிவானுக்கு அறிவித்தது.

இந்தப் பெயர் பட்டியல் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை எனவும் அந்த பட்டியல் கிடைத்ததும், உடனடியாக மேலதிக நடவடிக்கைகளை ஆராய்ந்து இந்த விவகாரத்தில் கைது செய்யப்படவேண்டியவர்கள் தொடர்பில் தெளிவான முடிவை அறிவிக்க முடியும் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிவானுக்கு மேலும் தெரிவித்தது.

5 மாணவர் உள்ளிட்ட 11 பேரின் கடத்தல் தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே விசாரணைக் குழுவின் அதிகாரி நீதவானுக்கு இதனை அறிவித்தார். நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு வந்த போது, நீதிமன்ற அறிவித்தல் பிரகாரம் விளக்கமறியலில் உள்ள இரு சந்தேக நபர்களான கஸ்தூரிகே காமினி, அருண துஷார மெண்டிஸ் ஆகியோர் சிறை அதிகாரிகளால் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதுவரை குற்றப் புலனயவுப் பிரிவு முன்னெடுத்த விசாரணைகளின் அறிக்கையை சட்ட மா அதிபருக்கு சமர்ப்பித்துள்ளனர் என்றும் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அடுத்த கட்டம் தொடர்பில் தீர்மானிக்க தயார் எனவும் இதன்போது குற்றப்

இது குறித்த விசாரணைகளை எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதிவான், அதுவரை விளக்கமறியல் சந்தேக நபர்கள் இருவரின் விளக்கமறியல் காலத்தையும் நீடித்தார். (ற71)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயம் தோற்கடிக்கப்படும்

## அமைச்சர் சுஜீவ தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 24

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். கட்சி பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் பெரும் பிரச்சினை ஏற்படும் இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையின் புதிய மேயராக நேற்றுமுன்தினம் பதவி ஏற்றுக்கொண்ட ரோஸி சேனாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவிக்க வந்த இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இதற்கு முன்னரும் பல தடவைகள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒன்றும் இடம்பெறவில்லை. அதனால் கூட்டு எதிரணி அவ்வாறு நம்பிக்கையில்லாபிரேரணையை கொண்டுவந்தால் கட்சி என்ற வகையில் பிரேரணையை தோற்கடிக்க நடவடிக்கை எடுப்போம்.

ஐக்கிய தேசிய கட்சி நாட்டில் இருக்கும் மிகவும் பழைமை வாய்ந்த கட்சியாகும். கட்சிக்கு என்று கொள்கை இருக்கின்றது. அதைப் பேணிப்பாதுகாத்துக் கொண்டு முன்னுக்கு செல்லவேண்டும். கட்சிக்குள் பிரச்சினை இருக்கலாம். அதற்காக கட்சியை பாதிக்கும் வகையிலான பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாங்கள் அனைவரும் ஒன்றாக இருந்து தோற்கடிப்போம்.

கேள்வி சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களும் நம்பிக்கையில்லா பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனரே?

பதில் சிறிலங்கா சுதந்திர கட்சியினர் கைச்சாத்திட்டுள்ளமை தொடர்பில் எனக்கு தெரியாது. பிரேரணை விவாதத்துக்கு வந்தால்அதற்குமுகம்கொடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

கேள்வி ஐக்கிய தேசிய கட்சி மறுசீரமைப்பு தொடர்பாக என்ன நினைக்கிறீர் கள்?

பதில் கட்சியில் பெரும் மறுசீரமைப்பு ஏற்படவேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். அது தொடர்பில் கட்சிக்குள் பல போராட்டங்களையும் நான் செய்துள்ளேன். எனது பதவியை துறந்தேனும் அதற்காக நான்தொடர்ந்து போராடுவேன். அத்துடன் கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். நிச்சயமாக அது நிறைவேறும்என்றநம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் பெரும் பிரச்சினை ஏற்படும் - என்றார். (ற-61)

# ரணில் மீதான பிரேரணையை தாமதப்படுத்துவதை ஏற்கோம்

## ஜே.வி.பி. கூறுகின்றது



கொழும்பு, மார்ச் 24

தலைமை அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை மக்கள் விடுதலை முன்னணி ஆதரிக்கும். ஆனால் பிரேரணையைக் காலதாமதப்படுத்தாது உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸநாயக தெரிவித்தார்.

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்கும் 20 ஆம் திருத்தத்தை தனிநபர் பிரேரணையாகப் புதுவருடத்தின் பின்னர் கொண்டுவருவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று கூறிய துடன் நேற்று முன்தினம் தமது பிரேரணையைச் சபாநாயகர் கரு ஜெயசூரிய விடம் ஒப்படைத்தனர்.

அதில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 51 பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 4 உறுப்பினர்களும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நண்பகல் கட்சித் தலைவர்கள் கூட்டம் நாடாளுமன்றத்தில் கூடிய நிலையில் அடுத்த மாதம் 4ஆம் திகதி தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு என்னவென வினவியபோதே கட்சியின் தலைவர் அனுர குமார திஸநாயக மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சியின் மீதான அதிருப்தி எம் மத்தியிலும் உள்ளது. இந்த நாட்டு மக்கள் நல்லாட்சியை ஏன் உருவாக்கினார்களோ அதன் தேவை நிறைவேற்றப்படவில்லை. ஊழல் வாதிகள், கள்வர்கள் என அனைவரும் இந்த ஆட்சியில் சுதந்திரமாகச் செயற்படும் நிலைமையே காணப்படுகின்றது. கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவோம் என்று கூறியுள்ளனர். நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உரிய காரணிகள் குறித்து நாம் ஆராய்ந்துள்ளோம்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் தொடர்பில் ஆராயப்பட்டது. கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களே பிரேரணையைப் பிற்போடும் கருத்துக்களை முன்வைத்தனர். எனினும் அவ்வாறு கால தாமதப்படுத்த முடியாது. உடனடியாகப் பிரேரணையைக் கொண்டுவர வேண்டும் என நாம் தெரிவித்துள்ளோம். அடுத்த மாதம் 4 ஆம் திகதி நம்பிக்கையில்லாப் பிரேரணை சபையில் கொண்டுவரப்படும். அதில் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாக வாக்களிக்கும்.

நிறைவேற்று அரசதலைவர் முறையை நீக்கும் 20 ஆம் திருத்தச் சட்டத்தையும் தனிநபர் பிரேரணையாக நாம் கொண்டுவரவுள்ளோம். நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் கால தாமதங்களை ஏற்படுத்த முடியாது. புதுவருடத்தின் பின்னர் நாம் 20 ஆம் திருத்தத்தைக் கொண்டுவருவோம் - என்றார். (ந31)

# பிரேரணையைத் தோற்கடிக்க வியூகம் வகுக்கிறது ஐ.தே.க.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ள நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான வியூகங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்தார். அரசியல் கட்சிகளும் பல்வேறு காய்நகர்த்தல்களை முன்னெடுக்கின்றன.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க ஐக்கிய தேசியக் கட்சி காய் நகர்த்தி வரும் நிலையில் கூட்டு எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிபெறவைப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற குழுவைச் சந்தித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நம்பிக்கையில்லாப்பிரேரணை குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார். ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சருக்கு முழுமையான ஆதரவை வழங்கியுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் அலரிமாளிகையில் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்றக்குழுவைச் சந்தித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய கட்சிகளுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்துகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் விடுதலை முன்னணி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கும் என்று கூறியுள்ள நிலையில் ஐக்கியதேசியக்கட்சி அது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எவ்வகையான தீர்மானத்தை எடுக்கப்போகின்றார்கள் என இதுவரையில் உறுதியாக அறிவிக்கப்படாத நிலையில் அவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் காய்கள் நகர்த்தப்படுகின்றன. சுதந்திரக்கட்சியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப்பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயம் தொடர்பில் எதனையும் அறிவிக்கவில்லை. தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன வெற்றியீட்டியதை அடுத்தே தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர கூட்டு எதிரணி தீர்மானித்துள்ளது. (ந-31)

# கிளைபோசேட் தடை நீக்கத்துக்கு ராஜித எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 24

கிளைபோசேட் இரசாயன வகைகள் மீதான தடை நீக்கம் தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல மாவட்டங்களில் பரவி வரும் மர்ம சிறுநீரகப் பாதிப்பு நோய்க்கு கிளைபோசேட் இரசாயன வகைகள் காரணமாக அமைந்துள்ளன என்று சந்தேகிக்கப்படுகின்றது. கூட்டு அரசு பதவிக்கு வந்த ஆரம்ப காலத்தில் கிளைபோசேட் இரசாயன வகைகளைத் தடை செய்யும் தீர்மானமொன்றை மேற்கொண்டிருந்தது தற்போது விவசாய விளைச்சல் வீழ்ச்சி மற்றும் தேயிலைச் செடிகளுக்கான பசளைத் தேவை என்பவற்றைக் கருத்திற்கொண்டு கிளைபோசேட் இரசாயனங்கள் மீதான தடையை நீக்க அரசு உத்தேசித்துள்ளது. அதற்கு அமைச்சர் ராஜித எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். (ந)

# பிரேரணைக்கு மு.காங்கிரஸ் ஒருபோதும் ஆதரவளிக்காது

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 24

தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கப்போவதில்லை.

இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உலக நீர்த் தின விழா பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சருக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எம்முடன் எந்தத் தரப்பினரும் இது வரையில் பேச்சு நடத்தவில்லை. எம்முடன் பேச்சு நடத்தாது சமர்ப்பிக்கப்பட்டுள்ளபிரேரணைக்கு எமது ஆதரவை எதிர்பார்ப்பது ஒருபோதும் வெற்றியளிக்கப்போவதுமில்லை.

நல்லாட்சி அரசை ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளும் உபாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை. மக்கள் வழங்கிய ஆணையை உரிய முறையில் செயற்படுத்துவதற்கான முறைமையொன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அது தொடர்பில் பேச்சு நடத்த வேண்டும்.

கூட்டு எதிர்க்கட்சி தொடர்ச்சியாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைச் சமர்ப்பித்து அரச இயந்திரத்தை முடக்குவதற்கே முயற்சிக்கிறது. அதில் எம்மால் பங்குதாரராக முடியாது. இந்தப் பிரேரணை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரச தரப்பிலுள்ள கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டு ஆட்சியின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்க விடாது எமக்குக் கிடைத்திருக்கும் மக்கள் ஆணையை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ந61)

# நாட்டில் நடக்கும் குற்றங்களை அரசு உடன் தடுக்கவேண்டும்

## மகிந்த கோருகின்றார்



கொழும்பு, மார்ச் 24

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களைத் தடுக்க வேண்டும் என்று முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் பெரியளவிலான குற்றச் செயல்கள் நடக்கின்றன. குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போதைப் பொருள், கொலைகள், துப்பாக்கிச் சூடுகள், கொள்ளைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாரைச் சாரும் நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்களால் நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. - என்றார். (ந)

# கையெழுத்திட்ட அமைச்சர்கள் மீது விரைவில் நடவடிக்கை

## அமைச்சர் விஜேவர்த்தன தெரிவிப்பு

தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்ட அமைச்சர்கள் தொடர்பில் ஐ.தே.கட்சி தீர்மானம் எடுக்கும். அரசில் இருந்து கொண்டு அரசின் வேலைத்திட்டங்களைக் குழப்புகின்ற வர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றநிகழ்வொன்றில்கலந்துகொண்ட அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் தெரிவித்ததாவது:

அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணைக்குஅரசின் அமைச்சர்கள் சிலரும் கைச்சாத்திட்டுள்ளனர். அவ்வாறானவர்கள் அரசில் இருந்து கொண்டே அரசின் நடவடிக்கைகளைக் குழப்பும் வகையில் செயற்பட்டிருக்கின்றனர். அவர்கள் தொடர்பில் விரைவில் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்படும். எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் ஐக்கியதேசியக்கட்சியின் பிரதானபதவிகளில் மாற்றம் ஏற்படும். இந்தக் காலப்பகுதிக்குள் ஐக்கியதேசிய கட்சியின் அதிகாரிகளது பதவிகள் உள்ளிட்ட பல்வேறு மாற்றங்களை மக்கள் காண முடியும் - என்றார். (ந)




குறைவான முதலீடு !
நிலையான இலாபம் !
ஒரு சுயதொழிழுக்கான ஆரம்பம்
உங்கள் வீட்டிலேயே!

ஆலோசனைகளுக்கு
0773626230



# 100%

பாதுகாப்பான, சுத்திகரிக்கப்பட்ட தூய நீர்

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

No.341, K.K.S Road, Jaffna. | Hp - 021 222 6888, 021 567 7567 | Hotline - 077 362 6230
Web : www.everpurehitec.com E-mail: everpurehitec@gmail.com FB: everpurehitec

---

தமிழ் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்

ABI Fashion World
# அபி பஷன் வேல்ட்

யாழ். மாநகரில்
புடைவைகளுக்கு
ஓர் அடையாளம்

தாராளமான இடம்!
ஏராளமான டிசைன்ஸ்!
உங்களுக்காகவே



SPECIAL OFFER
SALE
05% 70%
இச்சலுகை
ஏப்ரல் 13 வரை மட்டுமே

வருடத்தில் குறைந்த விலை
வருடம் முழுவதும் நிறைவான சேவை
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்ட)

ஆடவருக்கான கோட் & சூட் ரூபா 5000/= முதல்
டெனிம் ஜீன்ஸ் ரூபா 1000/=, ரீசேட் ரூபா 250/=
ஒரு சேலை வாங்கினால் இன்னும் ஒன்று இலவசம்.
சல்வார் வகைகள் 50% வரை விலைக்கழிவு
சிறுவர்களுக்கான ஆடைகள் 50% வரை விலைக்கழிவு
றொப் வகைகள் 50 % தள்ளுபடி விலையில்




என்ன வேண்டும்
உங்களுக்கு எல்லா
ஆடைகளும் இங்கு இருக்கு
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738 | 0773246503 | 0770185471 | abifashionworld

---

YARL HOSPITAL

யாழ். திருநெல்வேலியில்
முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட
# யாழ் வைத்தியசாலை

## வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள்

சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்
**Consultant Surgeon**

காது, மூக்கு தொண்டை வைத்திய நிபுணர்
**E.N.T. Surgeon**

என்பு முறிவு வைத்திய நிபுணர்
**Consultant Orthopaedic Surgeon**

இருதய வைத்திய நிபுணர்
**Consultant Cardiologist**

மகப்பேறு பெண்நோயியல் வைத்திய நிபுணர்
**Consultant Obstetrician Gynaecologist**

குழந்தை வைத்திய நிபுணர்
**Consultant Paediatrician**

முக சத்திரசிகிச்சை நிபுணர்
**Consultant O.M.F Surgeon**

சிறுநீரக நிபுணர்
**Consultant Nephrologist**

குழந்தை இருதய வைத்திய நிபுணர்
**Consultant Paediatric Cardiologist**

பொது வைத்திய நிபுணர்
**Consultant Physician**

தோல் வைத்திய நிபுணர்
**Consultant Dermatologist**

நீரிழிவு, அகம் சுரக்கும் தொகுதியல் நிபுணர்
**Endocrinologist**

குடல், இரப்பை, ஈரல் விசேட வைத்திய நிபுணர்
**Consultant Gastroenterologist And Hepatologist**

மூட்டுவாத வைத்திய நிபுணர்
**Consultant Rheumatologist**

"ஸ்கான்" வைத்திய நிபுணர்
**Consultant Radiologist**

மார்பு நோய் வைத்திய நிபுணர்
**Chest Physician**

கண் வைத்திய நிபுணர்
**Eye Surgeon**

பிசியோதெரபி
**Physiotherapy**

பேச்சு பயிற்சி
**Speech Therapy**

- வெளிநோயாளர் பிரிவு O.P.D
- மருந்தகம் Pharmacy
- ஆய்வுக்கூட சேவை Laboratory

24 மணிநேர சேவை

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

---

# பணிநிலை வெற்றிடம்

1. தாதியர் (IVA, Naita) பயிற்சி பெற்றவர்கள்
2. தாதிய பயிலுனர்
3. மருந்தாளர் அனுபவமுள்ளவர்கள்
4. மருந்தகப் பயிலுனர்
5. காசாளர்
6. சுத்திகரிப்பாளர்
7. பாதுகாவலர்
8. வரவேற்பாளர்
9. தாதியர் (SLMC)
10. மருந்தாளர் (SLMC)

சுயவிவரக் கோவையுடன்
சமூகம் தரவும்

இடம்: யாழ் வைத்தியசாலை
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி
காலம் : 25.03.2018
நேரம் : முற்பகல் 10.00 மணி

T.P:021 222 3533 / 1011, 0777 781 005

### வவுனியாவில்
# மின்சாரப் பட்டியல் வழங்கல் சீரில்லை
### பாவனையாளர்கள் சிரமம்

வவுனியா மார்ச் 24

வவுனியாவில் மாதாந்தம் மின்சாரப் பட்டியல் சீராக வழங்கப்படாமையால் பாவனைக்கு அதிகமான கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது என்று பல்வேறு மின் பாவனையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மின்மானி வாசிப்பாளர்கள் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்கிறார் வவுனியா மாவட்ட முதன்மை மின்பொறியிலாளர்.

இந்த விடயம் தொடர்பில் பாவனையாளர்கள் தெரிவித்ததாவது:

மின்சாரப் பட்டியல் சீராக மாதாந்தம் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் குறித்த மின்மானி வாசிப்பு தொகையை விட அதிகளவான நிதியை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மாதத்தின் முதலாம் திகதியில் மின்மானி வாசிப்பு எடுக்கப்பட்டு மின்சாரப் பட்டியல் வழங்கப்படும் பட்சத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி மின்மானி வாசிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு மின்மானி வாசிப்பு மேற்கொள்ளப்படுமாக இருந்தால், குறித்த பாவனையாளர் ஒரு மாத காலத்தில், தான் பயன்படுத்திய மின்மானிக்கான பணத்தினை செலுத்த முடியும் என்பதுடன் கட்டணம் குறைவாக காணப்படும் சந்தர்ப்பம் உள்ளது.

எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது இரு மாதங்கள் கழித்து மானி வாசிப்பு மேற்கொள்ளப்படுமாக இருந்தால் குறைந்த கட்டணத்துக்கான மானி வாசிப்பையும் மீறி அதிகளவான கட்டண எல்லைக்குள் மானி வாசிப்பு சென்றுவிடும். அத்துடன் இரு மாதத்துக்கு ஒரு தடவை பட்டியல் வருவதால் ஒரே தடவையில் குறித்த பெரிய தொகையை கட்டுவதும் இயலாததாகும்.

ஆகவே மாதாந்தம் மின்மானி வாசிப்பு பார்க்கப்பட்டு மின்சார பட்டியலை வழங்கி மின்பாவனைக் கட்டணத்தை செலுத்துவதற்கு இலகு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட முதன்மை மின்பொறியியலாளர் ம.தயாபரனிடம் கேட்டபோது, 'கடந்த இரு வருடமாக இந்த பிரச்சினை இருக்கின்றது. மின்மானி வாசிப்பாளர் பதவிக்கான உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையே இந்தப் பிரச்சினைக்கு காரணமாகும். எனது ஆளுகைக்குட்பட்ட வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களுக்கு மொத்தமாக 23 மானி வாசிப்பாளர்கள் தேவையாக உள்ளனர்.

இது தொடர்பாகவும் மேலும் வடக்கு மாகாண ரீதியாக மொத்தமாக 88 மின் மானி வாசிப்பு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. அவற்றுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்குமாறும் எமது மின்சார சபையின் வடக்கு மாகாண பொது முகாமையாளர் ஊடாக கொழும்பு அமைச்சுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தி உள்ளோம். உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட பின்பு மின் பட்டியலை சீராக ஒவ்வொரு மாதமும் வழங்கக் கூடியதாக இருக்கும்' என்று தெரிவித்தார். (எ-110)

# பேச்சுக்கள் தோல்வி போராட்டம் தொடரும்
### பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி சாரா ஊழியர்களின் போராட்டம் காலவரையின்றித் தொடரும். தமது கோரிக்கைகள் தொடர்பான பேச்சு வெற்றியளிக்காத நிலையில் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்தது.

கொடுப்பனவு அதிகரிப்பு உட்படச் சில கோரிக்கைகளை முன்வைத்து ஊழியர் சங்கம் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகிறது. சில நாள்களுக்கு முன்னர் தொடக்கம் கல்விசாரா நிர்வாக உத்தியோகத்தர் சங்கமும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

மார்ச் மாதச் சம்பளம் எவருக்கும் செய்யப்போவதில்லை என்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சில நாள்களுக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சர் மற்றும் செயலர்களுடன் சங்கங்கள் பேச்சு நடத்தியிருந்தன. அதிலும் சாதகமான முடிவு எட்டப்படவில்லை. பின்னர் அமைச்சரவையில் இது தொடர்பில் பேசப்படும் என்று கூறப்பட்டபோதும் அங்கும் அது தொடர்பில் பேசப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் தமது போராட்டத்தைக் காலவரையின்றித் தொடரவுள்ளோம் என்று ஊழியர் சங்கம் தெரிவித்தது. (4)

# ஒவ்வொருவரது வீட்டிலும் மழைநீர் சேகரிக்கும் தொட்டி
## வெள்ளம் கடலுக்குச் செல்வதைத் தடுக்க கட்டாயம் அமைக்கப்படல் வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

**வடக்கில் வீடுகள் ஒவ்வொன்றிலும் மழை நீர் சேகரிக்கும் தொட்டிகள் கட்டாயம் காணப்படவேண்டும். ஏற்கனவே வீடுகளில் வசிப்போர் கூரையிலிருந்து வரும் மழைநீரைச் சேகரிக்கும் தொட்டிகளை அமைக்க வேண்டும். புதிதாக வீடுகள் கட்டுவோர் கட்டாயம் குறித்த தொட்டியைக் கட்ட வேண்டும். வீடு கட்ட அனுமதி வழங்கும் பிரதேச, நகர சபைகள் இதில் கடும்பிடி பிடித்தல் வேண்டும் என சூழலியலாளர்கள் அறிவுறுத்துகின்றனர்.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கில் மழை பெய்தாலும் தண்ணீரை அதிகளவானோர் சேமிப்பதில்லை. வீட்டு வளவுக்குள் மழைநீர் தேங்கி நின்றால் ஏதாவது வழிசெய்து தண்ணீரை வெளியேற்றி விடுகின்றனர். அதனால் மழை நீர் நிலத்தில் சேகரிக்கப்படுவது – ஊடு புகவிடுவது குறைவாகவுள்ளது. அதனால் மழை நீர் அநியாயமாக கடலுக்குச் சென்றுவிடுகிறது. மழைநீரைச் சேமிக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துவருகின்றபோதும் பொதுமக்கள் அதில் எந்தளவு அக்கறை கொண்டுள்ளனர்?

இந்த விடயத்தில் பொதுமக்கள் உணர்ந்து செயற்படவேண்டும். பொதுமக்கள் விழிப்புணர்வு பெற்று செயற்படத் தொடங்கினால் மழை நீர் சேகரிப்பு இலகுவான விடயமாகிவிடும்.

புதிதாக வீடு கட்டுபவர்கள் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளைக் கட்டாயம் அமைத்தல் வேண்டும் என்று அதற்கான அனுமதியில் பிரதேச, நகர சபைகள் வலியுறுத்துவது சிறந்ததாக இருக்கும். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதற்கான அனுமதி வழங்கும் போது வீடு கட்டும் வரைபடத்தில் மழைநீர்த் தொட்டிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் குறிப்பிட்டளவானவர்களே அதனைச் செயற்படுத்துகின்றனர் என்று கூறப்படுகிறது. அதனைச் சகலரும் செயற்படுத்த நடவடிக்கைகள் இனி எடுக்கப்பட வேண்டும்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினர் இதில் அதிகளவில் பங்கு வகிக்கின்றனர். மழைநீர்த் தொட்டிகளை அமைப்பதைத் தீவிரப்படுத்துவதன் மூலமாக மழை நீரைச் சேமிக்க முடியும். அந்த நீரை ஆடைகள் துவைப்பதற்கோ, பூங்கன்றுகளுக்கோ, ஏனைய தேவைகளுக்கோ பயன்படுத்த முடியும். வீட்டுக் கூரைகளுக்கு ஓடு இருப்பின் மழையின்போது அதிலிருந்து வரும் தண்ணீரைக் குடிக்கமுடியும். சீற் போடப்பட்ட கூரை எனின் குடிக்கக்கூடாது. தவிர ஏனைய சகல தேவைகளுக்கும் பயன்படுத்தலாம். தீவகம் உட்பட தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவும் பிர தேசங்களில் சிலர் மழைநீர் சேகரிக்கும் தொட்டிகளை அமைத்துள்ளனர். அதன் மூலமாக அவர்கள் பயன்பெறுகிறார்கள். எதிர்காலத்தில் தண்ணீருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவும்- என்று நிபுணர்கள் பலரும் முன்னெச்சரிக்கை விடுத்து வருகின்றனர். மழைநீரைச் சேகரிக்கத் தவறினால் எமது எதிர்கால சந்ததியே பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-4)

# பாடசாலைக் கட்டடங்கள் தொடர்பில் நடவடிக்கை

யாழ்ப்பாணம்.மார்ச்.24

வடக்கு மாகாணத்தில் உள்ள கட்டட வசதிகள் இல்லாத பாடசாலைகளில் கட்டங்களை அமைப்பதற்கும், பயன்படுத்த முடியாத கட்டடங்களை அகற்றுவதற்கும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருவதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்கு மாகாணத்திலே பல்வேறு பாடசாலைகளில் கட்டட வசதிகள் குறைவாக காணப்படுகின்றது. இதற்குத் தீர்வாகக் அண்மையில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை செயல்திட்டத்தில் குறித்த பிரச்சினையுள்ள பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர பாடசாலைச் சமூகம், மாகாண சபை உறுப்பினர்கள் போன்றவர்களால் அவர்களின் பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் கட்டட வசதிகள் மற்றும் பயன்படுத்த முடியாத இடிபாடுகள் உள்ள கட்டங்களை முறைப்படி எவ்வாறு அகற்றுதல் என்பது தொடர்பில் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட முள்ளிபுனம் பாடசாலைக்கு இரண்டு மாடிக் கட்டடம் அமைத்தல், வடகாடு பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைத்தல், யாழ்ப்பாணம் சென் அன்ரனிஸ் மகளிர் பாடசாலையில் புதிய கட்டடம் அமைத்தல் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை, தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை, முல்லைத்தீவு ஆனந்தபுரம் வித்தியாலயத்தில் இடிபாடுகளை அகற்றுதல், இடிந்து விழும் நிலையுள்ள கட்டத்தை அகற்றுதல், போன்ற நடவடிக்கைகள் அங்கத்தவர்களின் ஆலோ சனையின் பின்னர் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.மார்ச்.24

இலங்கைக்கான அவுஸ்ரேலியா வதிவிட2019ஆம் ஆண்டுக்கான அலுவலகத்தால் நடத்தப்படும் அவுஸ்ரேலியா புலமைப்பரிசில் திட்டத்தின் அனுமதி தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ்ப்பாணப் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச, அரசசார்பற்ற, தனியார் மற்றும் சமூகமட்ட அமைப்பு நிறுவனங்களில் கடமையாற்றும் ஆர்வமுள்ள அலுவலர்களை கலந்து கொள்ளுமாறும் புலமைப்பரிசு தொடர்பான விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விபரங்களை www.australiaawardssrilanka.org இணையத்தளத்தினுடாக பெற்றுக்கொள்ளுமாறு வடக்கு மாகாண முதன்மைச் செயலாளர் எ.சிவபாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (எ-113)

# வெளிச்சவீடு அமைக்கும் பணி கிடப்பில்
### நிதி கிடைக்காமையே காரணம் என்கிறார் யாழ்ப்பாணப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம்.மார்ச்.24

யாழ்ப்பாண குடாக் கடற்பரப்பில் வெளிச்சவீடு அமைப்பதற்கான நிதி கிடையாமையால் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று யாழ்ப்பாண பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தன் தெரிவித்தார்.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண குடாக் கடற் பரப்புக்கான வெளிச்ச வீடு மற்றும் இடிதாங்கியின் தேவை தொடர்பில் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடா கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் அநேகர் அதிகாலை மீன்பிடிக்க செல்வார்கள். அத்துடன் இரண்டு மூன்று நாள்கள் தங்கியிருந்து மீன் பிடியில் ஈடுபட்டு கரைக்குத் திரும்புவர்களுக்கு வழிகாட்டும் வெளிச்ச வீடு அவசியம். அத்துடன் மழைக் காலங்களில் இடி மின்னல் நேரங்களில் அதன் மூலம் ஆபத்துக்கு இலக்காகி இறப்புகளும் நிகழ்ந்துள்ளன. எனவே வெளிச்ச வீட்டின் அவசியம் பற்றி மாகாண சபை உறுப்பினர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்திருந்தார். ஆகவே குடாக்கடலில் இடிதாங்கி யுடன் கூடிய வெளிச்ச வீடு அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. அதன்படி 20 மில்லியன் பெறுமதியான வெளிச்ச வீடு அமைப்பதற்கான செயற்திட்ட முன் மொழிவு உரிய வர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் நிதி இன்னமும் கிடைக்க வில்லை. நிதி கிடைத்தால் பாசையூர் பகுதியில் ஏற்கனவே அழிவடைந்துள்ள வெளிச்ச வீட்டினை சீரமைத்துக் கொடுக்க முடியும் என்றார். (எ-7)

# சட்டவிரோதமாக பனை தறிப்போருக்கு சிறையுடன் தண்டமும் விதிக்கப்படும்

## வடக்கில் சட்ட நடைமுறையை இறுக்குகிறது பனை அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம்,மார்ச் 24

**சட்டவிரோதமாக பனைமரங்கள் தறிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பொதுமக்களுக்கு பனை அபிவிருத்திச் சபை எச்சரித்துள்ளது. அதனையும் மீறி பனை தறித்தாலோ அல்லது அதற்கு உடந்தையாக இருந்தாலோ எவராக இருந்தாலும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படுவது மட்டுமன்றி சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்றும் சபை எச்சரித்துள்ளது.**

இது தொடர்பான எச்சரிக்கை ஒன்றை யாழ்ப்பாணப் பனை அபிவிருத்திச் சபை நேற்று விடுத்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழர் பாரம்பரியத்தின் சின்னமாகவும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் மதிப்பிட முடியாத பொக்கிஷமாகவும் விளங்கும் கற்பக விருட்சமான பனை வளத்தை அழியவிடக்கூடாது. அதனைப் பாதுகாக்க வேண்டிய தார்மிகக் கடமை சமூக அக்கறையுள்ள அனைவரையும் சார்ந்துள்ளது. இந்த வளத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

பனை வளத்தை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிவரும் பனை வளத்தினை வருடாந்தம் பல்வேறு காரணங்களைக்காட்டி அழிக்கின்றமை மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.



கோப்புப் படம்

பனை வள அழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கிலும், பனை வளத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதற்காகவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு 1993ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 452ஆம் அத்தியாயமான மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் பனை தறித்தலானது தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளில் பனை மரங்கள் சட்டவிரோதமாக தறிக்கப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்தும் கடமையைப் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து கிராம அலவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மேற்கொண்டு வருகின்றன. சமூக அக்கறை கொண்டவர்களும் சட்டவிரோத பனை தறித்தல் தொடர்பான தகவல்களை வழங்கி எமக்கு சிறப்பான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

சட்டவிரோதமாக பனை தறித்தலுக்கு உடந்தையானவர்களுக்கும், சட்டவிரோதமாக பனை தறித்தலில் ஈடுபடுபவர்களுக்கும் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் சார்பாக சகல சட்ட நடைமுறைகளும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையால் இந்த விடயம் தொடர்பாக பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் இந்தச் சட்ட நடைமுறைகளால் பனை வளம் பாதுகாக்கப்படுவதோடு, இந்த வளத்தை நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நன்மை அடைவார்கள். இவர்களின் வாழ்வும் வளம் பெறும்.

சட்ட விரோத பனை தறித்தல் தொடர்பான முறைப்பாடுகளை 021 222 2034 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தகவல்களை வழங்க முடியும் என்று சபை மேலும் தெரிவித்தது. (எ-4-17)

# யாழில் திராட்சைச் செய்கையை நவீனமயப்படுத்த வேலைத்திட்டம்



யாழ்ப்பாணம்.மார்ச்.24

யாழ்ப்பாண மாவட்டத்தில் திராட்சைச் செய்கை மற்றும் பனைசார்ந்த உற்பத்திகளை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டம் படிப்படியாக முன்னெடுக்கப்படவுள்ளது என்று மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மாகாண விவசாய அமைச்சில் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு மற்றும் மாவட்ட திராட்சை செய்கையாளர்கள், பனை சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளுபவர்களுக்கு இடையே நடைபெற்ற கலந்துரையாடல் பற்றி வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு மற்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சு சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும், நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. இதன் அடிப்படையில் நாம் தற்போது திராட்சை செய்கையாளர்களையும், பனை சார் உற்பத்திகளை மேற்கொள்ளுபவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினோம். திராட்சையின் இறக்குமதி காரணமாக உள்ளூர்உற்பத்திகள் பாதிக்கப்படுவதாக தெரிவித்திருந்தனர்.

நமது உள்ளூர் திராட்சை செய்கையாளர்கள் பாரம்பரிய முறையினை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இலகுவாக நோய்த் தாக்கம் அடைகின்றது. அத்துடன் காலநிலை மாற்றத்துக்கு தயாராக அவர்களின் உற்பத்திகள் அமைவதில்லை. இதனால் இவர்களின் உற்பத்தியில் வீழ்ச்சியும் மாறுபட்ட சுவையை உடையதாகவும் காணப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் பழங்கள் விதை அற்றதாகவும் சுவையானதாகவும் இருப்பதால் மக்கள் அதனை அதிகமாக வாங்குகின்றனர். ஆகவே படிப்படியாக நவீன முறைகளுக்கு அவர்களின் உற்பத்தியை நகர்த்திச் செல்லுமாறு கூறியுள்ளோம். இதற்காக இரண்டு பரப்புக்கு குறையாத பச்சை வீட்டு முறையிலான திராட்சை செய்கையை மேற்கொள்ளுவதற்கான ஆலோசனைகள் உதவிகள் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இதனை மேற்கொள்ளுவதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும்.இதேபோன்று பனை சார்ந்த உற்பத்தியலாளர்களுக்கான நவீன இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு உற்பத்தி நிலையங்களின் தேவைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் நேரில் சென்று ஆராயப்படவுள்ளது-என்றார். (எ-7)

## 83 பனைமரங்களை தறித்தவர் மறியலில்

கிளிநொச்சி மார் 24

அனுமதிப்பத்திரம் இன்றி கிளாலிப் பகுதியில் 83 பனை மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை 14 நாள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியில் பனை மரங்கள் அனுமதி இன்றி தறிக்கப்படுவதாக பொலிசாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் அனுமதிப்பத்திரம் இன்றி தறித்து துண்டங்கள் ஆக்கப்பட்ட 83 பனை மரக்குற்றிகளையும் அதனை தறித்தவர் என்ற சந்தேகத்தில் நபர் ஒருவரையும் கைது செய்து பளை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அதன் பெறுமதி சுமார் 2 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டதாக இருக்கும் என்று பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் சந்தேக நபரை பொலிசார் முற்படுத்தியபோது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

# இலுப்பையடியிலிருந்து சேவை நடத்தலாம் எனில் பழைய பஸ் நிலையத்திலிருந்து ஏன் நடத்தமுடியாது?

வவுனியா மார்ச் 24

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து சேவைகள் நிறுத்தப்பட்ட நிலையில் இலுப்பையடிச் சந்தியிலிருந்து தனியான பேருந்து சேவை ஒன்று இடம்பெறுகின்றது எனவும் அதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் பழைய பேருந்து நிலைய வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். இதற்குரிய தீர்வை மாகாண முதலமைச்சர் பெற்றுத்தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியிலிருந்து இந்த வருடம் முதல் பேருந்துச் சேவைகள் வடக்கு மாகாண முதலமைச்சரால் நிறுத்தப்பட்டு புதிய பேருந்து நிலையத்தில் தற்போது சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

இருந்தபோதும் வவுனியா புதிய பேருந்து நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட 150 மீற்றர் தூரத்தில் உள்ள இலுப்பையடியில் தனியான பேருந்துச் சேவை ஒன்று இடம்பெற்று வருகின்றது. இதனால் பழைய பேருந்து நிலையத்துக்கு வரும் பொதுமக்கள் இலுப்பையடிப் பகுதிக்குச் சென்று தமது தேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் பழைய பேருந்து நிலையத்திலுள்ள வியாபாரிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட பேருந்துச் சேவைகளை நிறுத்திய வடக்கு மாகாண முதலமைச்சரால் இலுப்பையடியில் இடம்பெற்றுவரும் பேருந்துச் சேவைகளை ஏன் நிறுத்த முடியவில்லை? அனைத்து பேருந்துச் சேவைகளும் புதிய பேருந்து நிலையத்தில் இடம்பெறவே 195மில்லியன் ரூபா செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. இருந்தபோதிலும் உள்ளூர் வெளியூர் பேருந்துகள் இலுப்பையடிப் பகுதியிலிருந்து தனியாக ஒரு பேருந்துச் சேவைகளை மேற்கொண்டு வருகின்றன.



இலுப்பையடிப் பகுதியிலிருந்து பேருந்துச் சேவைகள் மேற்கொள்ளப்படும்போது எமது பகுதியான பழைய பேருந்து நிலையப் பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்கள் பெரும் நஷ்டத்தினை எதிர்கொண்டுள்ளதுடன் வியாபார நிலையங்களை இழுத்து மூடவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தபோது 30 வருடகாலமாக இருந்த வியாபார நிலையங்களின் பாதிப்புக்களை கருத்திற்கொள்ளவில்லை. இலுப்பையடிப் பகுதியில் இவ்வாறு பேருந்துச் சேவைகள் மேற்கொள்வது எந்த விதத்தில் நியாயமாகும்? முதலமைச்சர் இந்த விடயத்தில் சரியான முடிவினை மேற்கொண்டு பழைய பேருந்து நிலையத்தில் உள்ளூர் பேருந்துச் சேவைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் அல்லது இலுப்பையடியில் இடம்பெறும் பேருந்துச் சேவைகளை பழைய பேருந்து நிலையத்திலிருந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்-என்றனர். (எ-110)



விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவால் மட்டக்களப்பு மாவட்ட நெருப்பிட்டான்வெளி கண்டத்தில் காலபோக வேளாண்மை செய்கைக்கு இயந்திரத்தால் நாற்று நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
இதில் விவசாய விரிவாக்கல் அதிகாரிகள், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர், வி. சிவப்பிரியா, உதவிப் பிரதேச செயலாளர் சத்திய கௌரி ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# ரணில் விலகவேண்டும் இல்லையேல் போராட்டம்

## ஐ.தே.கவைப் பாதுகாக்கும் அமைப்பு எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 24
"இளைஞர்களுக்கு இடங்கொடுத்துவிட்டு தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைமையிலிருந்து விலகவேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு விடுத்திருக்கிறது என அமைப்பின் செயலாளர் எஸ்.ஆர்.எம்.விக்கிரம சிங்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
"ரணில் விக்கிரமசிங்க கடந்த 25 வருடகாலமாக கட்சியின் தலைமைப் பதவியை வகித்து வருகிறார். இரண்டு தடவைகள் அரசதலைவர் தேர்தலில் படுதோல்வியடைந்த தலைவராக தென்னாசிய வலயத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரபல்யம் அடைந்திருந்தார்.
யார் என்னதான் தெரிவித்தாலும் ஒருசிலர் ரணில் விக்கிரமசிங்கவை இன்னும் பாதுகாத்து வருகின்றனர்.
கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சி முகங்கொடுத்த தோல்விக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணிலேகாரணம். தொடர்ந்தும்தலைவர் பதவியில் அவர் நீடித்தால் அதற்கெதிராக மாபெரும் போராட்டத்தை நடத்த உத்தேசித்தேசித்துள்ளோம்" என்றார். (ற-ரி5)

### காலி மாநகர சபையின் புதிய முதல்வர் தெரிவு

காலி,மார்ச் 24
காலி மாநகர சபையின் புதிய மேயராக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பிரியந்த சகாபந்து கொடகே இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.
இந்த இரகசிய வாக்கெடுப்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பிரியந்த சகாபந்துவுக்கு ஆதரவாக 20 வாக்குகளும் ஐக்கிய தேசிய கட்சியின் ஜிலித் நிஷாந்தவுக்கு 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன. நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் காலி மாநகர சபைக்கு ஐக்கிய தேசிய கட்சி சார்பாக 14 உறுப்பினர்களும் சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் 13 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-ரி4)


### தங்க நகைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 24
ஒரு கோடி 30 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளுடன் சிங்கப்பூரில் இருந்து வந்த நபரொருவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.
இவர் தனது பயணப்பொதியில் தங்க நகைகளை மறைத்து கொண்டுவந்திருந்த நிலையிலேயே சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.
இவரிடம் இருந்து 2 கிலோ 366 கிராம் தங்க நகை கைப்பற்றப்பட்டுள்ளது.
சந்தேகநபர் மட்டக்களப்பு நகரை சேர்ந்த 35 வயதுடையவர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## தொழிற்சாலையிலிருந்து இருவரது சடலங்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 24
தம்புள்ளை - பன்னம்பிட்டி பிரதேசத்தில் தனியார் தொழிற்சாலை ஒன்றில் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து பணியாளர்கள் இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.
32 வயதான பெண் ஒருவரும், 19 வயதான ஆண் ஒருவருமே சடலங்களாக மீட்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்கள் விச வாயு வெளியேறியதால் பாதிக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## சுதாகரனின் விடுதலைக்காக கிழக்கிலும் கையெழுத்து சேகரிப்பு



மட்டக்களப்பு,மார்ச் 24
அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுவிக்கக் கோரி அரசதலைவருக்கு அனுப்பவுள்ள மனுவுக்காக கையெழுத்துக்கள் சேகரிக்கும் நடவடிக்கைகள் நேற்று மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் நடைபெற்றன.
2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகசின் சிறையில் ஆயுள் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் இரு பிள்ளைகளின் தந்தையை மனிதாபிமான அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று இதில் வலியுறுத்தப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கையெழுத்துச் சேகரிப்பில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அருட் கலாநிதி ஜோசப் பொன்னையா உள்ளிட்ட மதத் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி4,46)

## ராமநாயக்கவின் கருத்தை ஆராயுமாறு மன்று உத்தரவு

கொழும்பு, மார்ச் 24
பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான கருத்தை வெளியிட்டாரா என்பது தொடர்பில் ஆராயுமாறு சட்ட மா அதிபருக்கு உயர் நீதிமன்ற உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.
பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
கடந்த 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்டிருந்த கருத்துக்கள் தொடர்பாகவே இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.
கடந்த வருடம் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிமன்ற வளாகத்தில் வைத்தே மீண்டும் ரஞ்சன் ராமநாயக்க நீதிபதிகளை அவமதிக்கும் வகையிலான கருத்தை வெளியிட்டார் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (ற-ரி5)


## மாடு கொண்டு சென்றோரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள்

மட்டக்களப்பு, மார்ச் 24
மட்டக்களப்பு, வெல்லாவெளியில் அனுமதிப் பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றிச் சென்றவர்கள் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. சிறிய ரக கன்ரர் வாகனங்களில் 7 மாடுகள் அடைக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சின்னவத்தை பகுதியூடாக இந்த மாடுகளை கொண்டுசென்றபோது அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்கள் குறித்த கன்ரர் வாகனத்தை சுற்றிவளைத்தனர். மாடுகள் தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து வாகனத்தில் இருந்தவர்கள் வெல்லாவெளி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.
மாடுகள் மருதமுனைப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டன என்றும், இந்த மாடுகள் மிருக சட்டத்துக்கு முரணாக கொண்டுசெல்லப்பட்டுள்ளன என்றும், அனுமதி பத்திரம் இல்லாமல் கொண்டு செல்லப்பட்டது என்றும் வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், மாடுகளும் மாடுகள் கொண்டுவந்த வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி4)



# இன்று உலக காசநோய் தினம்

அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது. காசமில்லா உலகத்துக்காக தலைவர்கள் தேவை என்ற தொனிப் பொருளில் இந்த ஆண்டுக்கான காசநோய் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.



## காசநோயில்லா உலகத்தை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோ

சி.யமுனானந்தா

*காசநோய் என்றால் என்ன?*
காசநோய் மைக்கோபக்றீரியம் ரியூபக்குளே பசிஸ் எனப்படும் ஒருவகை பற்றீரியாவினால் ஏற்படுகின்றது. இது காற்றினால் பரவக்கூடிய தொற்றுநோய். உலகில் 2.4 பில்லியன் மக்களுக்கு காசநோய் தொற்று உள்ளது. உலகசனத்தொகையில் மூன்றிலொருபங்கினர். வருடம்தோறும் 9.6மில்லியன் காசநோயாளிகள் இனம் காணப்படுகின்றனர். வருடம் தோறும் 1.7மில்லியன் மக்கள் காசநோயினால் இறக்கின்றனர். தினமும் 26ஆயிரம் புதிய காசநோயாளர்கள் கண்டறியப்படுகின்றனர். தினமும் 4ஆயிரத்து 100 காசநோயாளிகள் இறக்கின்றனர்.

*காசநோய் எவ்வாறு உருவாகின்றது?*
ஒருவரின் உடலில் காசநோய்க்கிருமிகள் செல்லும்போது குருதியில் உள்ள தின்குழியங்கள், நிணநீர்க்குழியங்கள் என்பவற்றின் செயற்பாட்டினால் சிறைப்பிடிக்கப்பட்டு செயலற்ற நிலைக்கு மாற்றப்படும். ஒருவரின் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி குறையும்போது சிறைப்பிடிக்கப்பட்ட கிருமிகள் சிறையினின்று விடுபட்டு நோயினை ஏற்படுத்துகின்றன. காசநோய் பொதுவாக நுரையீரலைத் தாக்குகின்றது. பின்னர் குருதி மூலம் உடலின் ஏனைய பகுதிகளைச்சென்றடைகின்றது. அவையாவன: மூளை மென்சவ்வு, சிறுநீரகம், பலோப்பியன்குழாய், விதை, என்பு, மூட்டு, நுரையீரல், சுற்றுச்சவ்வு, இருதயம், நிணநீர் மூலம் நிணநீர் முடிச்சினைச் சென்றடையும்.

*காசநோய் எவ்வாறு பரவும்?*
காசநோயினால்பாதிக்கப்பட்டஒருவர்இருமம்போதுதும்மும்போது, கதைக்கும் போது எச்சில் சளியினைத் துப்பும்போது காச நோய்க்கிருமிகள்காற்றினைஅடைகின்றன.காசநோய்க்கிருமிகள் உள்ள காற்றினை ஒருவர் சுவாசிக்கும்போது அது அவரின் நுரையீரலை அடைகின்றது. காசநோய் தொற்றுவது என்பது அவர் எவ்வளவு நேரம் நோய்க்கிருமியுள்ள காற்றினைச் சுவாசித்தார் என்பதிலும் நோய்க்கிருமியின் செறிவிலும் தங்கியுள்ளது.

*காசநோய் யாருக்கு வரும்?*
எவருக்கும்காசநோய்ஏற்படலாம். எனினும்கூடுதலான ஆபத்தை எதிர்பார்க்கக் கூடியவர்கள் பின்வருமாறு.

- காசநோயாளியுடன் நெருங்கிய தொடர்புடையவர்.
- காசநோயாளியுடன் ஒன்றாக வசிப்பவர் அல்லது வேலை செய்பவர். போசாக்கு குறைபாடு உடையவர்
- வறுமை காரணமாக நெருங்கி வாழ்பவர்கள், தகுந்த வீட்டு வசதி இல்லாதவர்கள்.
- காற்றோட்டம், சூரியஒளிகுறைந்த இடங்களில் வாழ்பவர்கள்.
- புற்றுநோய்எயிட்ஸ்., சலரோகம்போன்றநோய்உள்ளவர்கள்.
- மதுபானம், போதைப்பொருள் பாவிப்பவர்கள்.
- புகை பிடிப்பவர்கள்
- சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணிபுரிபவர்கள்

*காசநோய்க்கான அறிகுறிகள் எவை?*
தொடர்ச்சியான இருமல் (2வாரங்களுக்குமேலாகக்காணப்படல்), மாலை நேரங்களில் மெல்லிய காய்ச்சல், சளியுடன் குருதி வெளியேறல், நிறைகுறைவடைதல், உணவில் விருப்பமின்மை, ஏனையஅறிகுறிகள், நிணநீர்க்கணுக்கள்வீங்குதல்(பொதுவாகக் கழுத்துப்பகுதி), இருமும்போதுவலிஏற்படல், காசநோய் உடலின் வெவ்வேறு பகுதிகளைத் தாக்கும்போது பாதிப்படைந்த பகுதிகளுக்கு ஏற்ப அறிகுறிகள் ஏற்படும்.

**காசநோய் ஏற்பட்டுள்ளது என்பதற்கான பண்பறிசுட்டிகளும் அவற்றின் புள்ளிகளும்**

| | | |
|---|---|---|
| 01 | 3 கிழமைக்கு மேல் தொடர்ச்சியான இருமல் | 20 |
| 02 | மாலை நேரக் காய்ச்சல் | 20 |
| 03 | உடல் நிறையிழப்பு | 15 |
| 04 | இருமருடன் குருதி வெளியேறல் | 10 |
| 05 | உணவில் விருப்பமின்மை | 10 |
| 06 | உறவினர் யாருக்காவது ஒருவருக்கு காசநோய் காணப்படல் | 05 |
| 07 | நண்பர்களுக்கு காசநோய் காணப்பட்டால் | 05 |
| 08 | சுவாசிப்பதில் சிரமம் | 03 |
| 09 | இரவில் வியர்த்தல் | 03 |
| 10 | நெஞ்சில் நோ | 03 |
| 11 | உடல் களைப்பு | 03 |
| 12 | சலரோக நோய் காணப்டப்டால் | 03 |
| | மொத்தம் | 100 |

பண்பறிச்சுட்டிகளின்மொத்தப்பெறுமதி50க்குமேல்காணப்படின் மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்திற்குக் கட்டாயம் சளிப் பரிசோதனைக்கு வரல் வேண்டும். இவர்களுக்கு காசநோய் ஏற்பட்டுள்ளமைக்கான சாத்தியம் அதிகம். 3 கிழமைகளிற்குமேல் இருமல் இருப்பின் சளிப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

*காசநோய்கள் சிகிச்சையின் அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன?*

**பாதிக்கும் உடலங்கத்தின் அடிப்படையில்**

- நுரையீரல் காசம்
- நுரையீரல் அல்லாத ஏனைய பகுதியில் காசம்
- பக்றீரியா பரிசோதனையின் அடிப்படையில்:
- நோய்க்கிருமிகள் உறுதிப்படுத்தப்பட்ட காசநோய்
- நோய்அறிகுறிகளின்அடிப்படையில்அடையாளம்காணப்பட்ட காசநோய்.

**நோய்க்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகளின் அடிப்படையில்;**

- முன்னர் சிகிச்சை அளிக்கப்படாத நிலை அல்லது ஒரு மாதத்திற்கு குறைவாக காசநோய்ச்சிகிச்சையினை எடுத்த நிலை
- ஒரு மாதத்திற்கு மேலாக சிகிச்சை பெற்ற நிலை
- முன்னைய சிகிச்சை பற்றிய முழுமையான தகவல் தெரியாத நிலை
- ஒரு மாதத்திற்கு மேலாக முன்னால் சிகிச்சை பெற்ற நிலை பின்வருமாறு அமையலாம்.
- முன்னர்முற்றாகச்சிகிச்சைபெற்றுதற்போதுமீளவும்நோய்நிலை
- முன்னைய சிகிச்சையில் வெற்றியின்மை.
- முன்னைய சிகிச்சையை முழுமையாக பின்தொடர முடியாத நிலை



வேறு வகையிலான சிகிச்சைக்கான நிலை

*காசநோய்யை எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?*
உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட (WHO RecommendedDiagnosticWRD)விரைவான ஆய்வுச்சோதனைகளின் மூலம் கண்டறியலாம். சளி மாதிரியினைப் பரிசோதனை செய்வதன் மூலமும் அவதானிக்கலாம்.

*காசநோய் கிருமியினையும் இறைபம்பிசின் ஐசோறியசைட் மருந்துகளுக்கு எதிர்ப்பான காசநோய் கிருமிகளையும் கண்டறியும் பரம்பரை மூலக்கூற்றுக்கான வரிசையிலானபரீட்சிப்பின்(LineProbeAssay) பயன்பாடு யாது?*
பல மருந்துக்கு எதிர்ப்புத்தன்மையுடைய காசநோய்க் கிருமியினைக்(MDRTB)பயன்படும். இறைபம்பிசினிற்குஎதிர்ப்புத் தன்மையைக் காட்டும் மாதிரிகளை இப்பரிசோதனைக்கு உட்படுத்தலாம். சளிப்படல மாதிரியில் இருந்தும் வளர்பூடக மாதிரியில் இருந்தும் மாதிரியினைப் பெற்று இப்பரிசோதனையைச் செய்யலாம். 5 மணித்தியாலங்களில் விடையினைப் பெறலாம்.

*காசநோய்க்கான சிகிச்சையின் நோக்கம் யாது?*
- காசநோயாளியைப் பூரண குணமாக்கல்
- காசநோயாளியைஇறப்பிலிருந்தும், பின்விளைவுகளிலிருந்தும் தடுத்தல்.
- சமூகத்திற்கு நோய் பரவுதலைத் தடுத்தல்.
- காசநோய் மீளவருதலைத் தடுத்தல்.
- காசநோய்க்கிருமிகள்மருந்துக்குஎதிர்ப்புத்தன்மைபெறுவதைத் தடுத்தல்.

*காசநோய்க்கான சிகிச்சைக்கான கூட்டு வில்லைகள் யாவை?*

| | | |
|---|---|---|
| றைபம்சின் | (Rifampicin) | R |
| ஐசொனியாசிட் | (Isoniazide) | H |
| பைறசினமைட் | (Pyrazinamiid) | Z |
| எதம்பியூட்டோல் | (Ethambutol) | E |

இந்த மருந்துகளின் தசேர்மானநிலை, நான்கு மருந்து களும்; ஒன்றாக சேர்ந்த கூட்டுவில்லைகள் FDC4 (RHZE), இரண்டு மருந்துகள் ஒன்றாக சேர்ந்த கூட்டுவில்லைகள் FDC2 (RH), மூன்று மருந்துகள் ஒன்றாக சேர்ந்த கூட்டுவில்லைகள் FDC3 (RHE).

*காசநோய்க்கான சிகிச்சை முறைகள்*
வகை சிகிச்சை. இந்தச் சிகிச்சைமுறை புதிதாகக் காச நோய் இணங்காணப்பட்ட நோயாளிக்குவழங்கப்படும்.
ஆரம்ப அவத்தை (Intensive Phase)
இக்காலப்பகுதியில்நோய்க்கிருமிகள்விரைவாகக்கொல்லப்படும். நோயாளிஏறத்தாழ இரண்டுவாரங்களில்தொற்றல்அற்றநிலைக்கு மாற்றப்படுவதுடன், நோய்க்கான அறிகுறிகளும்குணமடையும்.

| மருந்து | அளவு நிறை | | | காலங்கள் |
|---|---|---|---|---|
| | < 35 | 35–50 | >50 | |
| முதல் மூன்று மாதங்கள் FDC4 | 2 | 3 | 4 | 3 மாதங்கள் |
| இறைபம்பிசினிக்கு எதிர்ப்பிருப்பின் முதல் இரு மாதங்கள் Streptomycin | 0.5 | 0.75 | 1g | 2 மாதங்கள் |
| பின் ஐந்து மாதங்களில் | | | | - |
| FDC 3 | 2 | 3 | 4 | - |

பின்வரும் மருந்துகள் இரண்டு வாரங்களுக்கு வழங்கப்படும். இந்தச் சிகிச்சைமுறை மீண்டும் காசநோய் ஏற்பட்டவருக்கும், சிகிச்சையை முறையாகப் பெறாதவர்க்கும் ஆரம்பச் சிகிச்சை வெற்றியளிக்காதவர்களுக் கும் வழங்கப்படும்.

இதன்போது ஆரம்ப அவத்தையின்; (FDC 4) 3 மாதங்களுக்கு வழங்கப்படும். இறைபம்பிசினிக்கு எதிர்ப்பு தன்மை உடையவர்களுக்கு மட்டும் ஸ்ரெப்ரோமைசின் ஊசி மருந்து முதல் இரு மாதங்களுக்கு வழங்கப்படும். இறுதி 5மாதங்களுக்குFDC3;வழங்கப்படும். கர்ப்பிணித்தாய்மாராக இருந்தாலும், பாலூட்டும் தாய்மாராக இருந்தாலும்

வகை I சிகிச்சையில்

| மருந்து | அளவு நிறை | | |
|---|---|---|---|
| | < 35 | 35–50 | >50 |
| முதல் இரு மாதங்கள் FDC 4 | 2 | 3 | 4 |
| பின் நான்கு மாதங்கள் FDC 2 | 2 | 3 | 4 |

காசநோய்த்தடுப்புமருந்தினைநோய் ஏற்படின்எடுக்கவேண்டும். அத்துடன் பாலூட்டும்தாய்மார்குழந்தைகளுக்கு தொடர்ந்து தாய்ப்பாலூட்டல் அவசியம்.

*குழந்தைகளில் காசநோய் வராது தடுக்க யாது செய்தல் வேண்டும்?*

குழந்தை பிறந்து 24 மணித்தியாலங்களிற்குள் BCG (பீ.சி.ஜீ) காசநோய்த்தடுப்புஊசியினைபெற்றுக்கொள்ளவேண்டும். இது குழந்தைகளின் சிறு வயதில் மூளைக்காசம், மிலியறில் காசம் ஏற்படுவதைத்தடுக்கும். BCGதடுப்புஏற்படாதகுழந்தைகளுக்கு 6மாதங்களின்பின்பும்5வயதுவரைBCGயினைமீளவும்ஏற்றல் வேண்டும். மேலும் காசநோய், குழந்தைகளில் சுவாசம் மூலம் தொற்றும். எனவே காசநோயாளிகளுடன் நெருங்கிப் பழகிய குழந்தைகள் வைத்தியப்பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

*காசநோய்க் கட்டுப்பாட்டில் காசநோயினை முற்றாக இல்லாது ஒழிக்க முனைய வேண்டிய புதிய அணுகுமுறைகள் யாவை?*

பல்வேறுமட்டங்களிலானஅணுகுமுறைஅவசியம். உயிர்ப்பான சிகிச்சை முகாமைத்துவம் அவசியம். இதில் நவீன தொழில்நுட்பத்தினை முற்றாகப் பயன்படுத்தல் வேண்டும். காசநோய் ஏது நிலையுடையவர்களில்சோதனைநடத்திமுழுமையானசிகிச்சையினை வழங்கல் வேண்டும். சிகிச்சை வசதிகள் எல்லோருக்கும் இலகுவாக கிடைக்கக்கூடியதாக உருவாக்கப்படல் வேண்டும். உலகில் ஆண்டுதோறும் 90 வீத காசநோயாளிகளை இனம் கண்டு 90 வீத நோயாளிகளை குணப்படுத்தி காசநோயினால் இறப்பவர்களை 90 வீதத்தினால் குறைப்பதனால் காசநோய் அருகிச்செல்லும். 2000 ஆண்டில்உலகில்இருந்தகாசநோயாளிகளுடன் ஒப்பிடும்போது 2016ஆம் ஆண்டில் 37வீத குறைவு ஏற்பட்டுள்ளது. இதனைமேலும்குறைக்கநாம்பல்வேறுநிலைகளில்செயற்படல் வேண்டும்.

*காசநோய்க்கான முற்தடுப்புச் சிகிச்சை (Preventive) யாது?*

காசநோய்க்கிருமி தொற்றியவர்களில் நோய் அறிகுறிகள் ஏற்படுவதற்கு முன், அல்லது காசநோய்க்கிருமிகள் தொற்று ஏற்படக்கூடியவர்களிற்கு நோய் ஏற்படாது இருப்பதற்காக வழங்கப்படும் சிகிச்சை முற்தடுப்புச் சிகிச்சையாகும்.

*காசநோய் முற்தடுப்புச் சிகிச்சை வகைகள் யாவை?*

6 மாதங்கள், 9 மாதங்கள், 36 மாதங்கள் அல்லது வாழ்நாள் முழுவதும் ஐசோனியசைட் மருந்து தினமும் வழங்கல். 3 மாதங்கள்ஐசோனியசைட்டும்றிபாபென்டின்மருந்தினைக்கிழமைக்கு ஒரு தடவை வழங்கல். 34 மாதங்கள் ஐசோனியசைட் றைபம்பிலூனை, மற்றுமோர் காசநோய்த் தடுப்பு மருந்தினை வழங்கல். 3 4மாதங்கள் தினமும் றைபம்பிசின் மருந்தினை வழங்கல்.

*MDR TB இற்கு முற்தடுப்புசிகிச்சை பயனுள்ளதா?*

லிவோபுலொக்சின் அல்லது மொக்சிபுளொக்சின் சில வேளைகளில் MDR TB உள்ளோருக்கு அளிக்கப்படலாம்.

*காசநோய்த்தடுப்புமருந்தைவலிந்துகொடுக்கலாமா?*

தடுப்பு மருந்து கட்டாயம் கொடுக்கப்பட வேண்டியதல்ல. எனவே சம்மதம் கிடைத்தால் மட்டும் வழங்கப்படல் வேண்டும்.

*காசநோயாளியை பராமரிக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கான அறிவுரைகள்.*

- காசநோய் காற்றால் பரவும் நோயாகும். காசநோயாளி, இருமும் போதும், துப்பும் சளியில் கிருமியுள்ள போதும், பாடும் போதும் சத்தமிடும் போதும் பரவும்.
- காசநோய்தொடுகையினாலோ, குருதியினாலோ உடலுறவினாலோ பரவாது.
- ஒரே உணவுகளைப் பகிர்வதாலோ, கோப்பைகளை, கிண்ணங்களை பரிமாறுவதனாலோ பரவாது.
- காசநோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கி இரண்டு கிழமைகளிற்குப் பின் அந்த நோயாளியில் இருந்து ஏனையவர்களுக்கு காசநோய் தொற்றாது.
- பொதுவாக காசநோயாளியில் இருந்து அவருடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கு சிகிச்சை தொடங்குவதற்கு முன்பே தொற்றுதல்ஏற்படுகின்றது. சிகிச்சைஆரம்பித்தபின்நோய் தொற்றும் தன்மை சடுதியாகக் குறைவடைகின்றது.
- காசநோய் பரவுவதனைத் தடுப்பதற்கு விரைவாக நோயினைக் கண்டறிதலும் உரிய சிகிச்சையினை வழங்கலும் சிகிச்சையினைப் பூரணப்படுத்த உதவுதலும் மிகவும் இன்றியமையாதவையாகின்றன.
- நீங்கள் காசநோயாளியுடன் நெருக்கமாக இருக்க வேண்டியிருப்பின் போதிய காற்றோட்டமுள்ள இடத்தில் இருத்தல் வேண்டும்.
- சூரியஒளிஅல்லதுருஏவெளிச்சம்அப்பகுதியில் இருந்தால் நல்லது.

*காசநோய் எவ்வாறு உறுதிப்படுத்தப் படல் வேண்டும்?*

GeneXpertMTB/RIFஅல்லதுGeneXpertMTB/RIFUltra. இதுவே விரைவானதும் மிகவும்; துல்லியமான பரிசோதனையாகும். இதற்கு அடுத்ததாக சளிப்படலப் பரிசோதனை (AFB) செய்யப்படும். இவற்றினால்கண்டறியப்படாதநிலையில்நோயாளிகடுமையாக பாதிக்கப்பட்டு இருப்பின் TB Culture மேற்கொள்ளப்படும்.

*சிறுவர்கள் காசநோயிற்கான பரிசோதனையை எவ்வாறு மேற்கொள்ளலாம்?*

சிறுவர்களில் நோயினைக் கண்டறிதல் கடினம். ஏனெனில் வளர்ந்தவர்களை விட சிறுவர்களில்குறைந்தளவுபக்ரீரியாக்களே நோயினை ஏற்படுத்தும்.
இரப்பைவச் சாற்றின் மாதிரியில்பு (Gastric aspirate) ene Xpert பரிசோதனை மற்றும் CXR (நெஞ்சுப்படம்) பரிசோதனை

*மருந்திற்கு எதிர்ப்புத்தன்மை உடைய காசநோயினை எவ்வாறு கண்டறியலாம்?*

GeneXpert இறைப்பிசின்எதிர்ப்புத்தன்மை கண்டறியும்
அதனை அடுத்து Line Probe Assay சில நாள்கள் செல்லும்.
இல்லாவிடின் Liquid Culture - சில கிழமைகள் செல்லும்.

*எய்ட்ஸ் நோயுடன் உள்ளபோது காசநோய்ப் பரிசோதனையை எவ்வாறு மேற்கொள்ளலாம்?*

எய்ட்ஸ் உடையோரில் காசநோய் நுரையீரலில் பல்வேறு நிலைகளின் பாதிப்பை ஏற்படுத்துவதனை உடலின் ஏனைய பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். புதிய MTB/RIF Ultra Catridgeமிகவும்சிறப்பாககாசநோளைஎய்ட்ஸ்நோயாளிகளில் கண்டறிய உதவும். மேலும

*கர்பிணித்தாய்மார்கள் காசநோய் பரிசோதனையை எவ்வாறு மேற்கொள்ளலாம்?*

தாய்மை அடையும்போது சுகநல வசதிகள் அதிகம் அளிக்கப்படுகின்றன. காசநோய் அதிகம் உள்ள சூழலில் வாழும் தாய்மார்கள் காசநோய் அறிகுறிகள் தென்படின் Gene Xpert - பரிசோதனையை நாட வேண்டும். எக்ஸ்கதிர் பரிசோதனைகள் கர்ப்பிணிகளில் தவிர்க்கப்படல் வேண்டும்.

*எங்கே காசநோயான சிகிச்சையினை பெறமுடியும்?*

இலங்கையில் மார்புநோய்ச்சிகிச்சை நிலையங்களில் காசநோய்க்கான சிக்சிசைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் நோயாளியின் வசதிக்கு ஏற்றபடி சிகிச்சையினை எவ்விடத்திலும் அளிக்ககூடியதாக அமைதல் வேண்டும்.

*காசநோயாளர்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை செய்ய வேண்டிய நிலை யாது?*

மிகவும் கடுமையான நோயாளிகள், காசநோயுடன் நீரிழிவு, இதயநோய்கள் உடையவர்கள், தூர இடங்களில் வசிப்பவர்கள், வறுமையானவர்கள், மனநோய் உடையவர்கள், மதுபானம், போதைப்பொருட்கள் பாவிப்போர்.

*தாய்மையடைந்தாலோ அன்றேல்பாலூட்டுவதாக இருந்தாலோ, கர்ப்பமடையும்ஏதுநிலையிலோகாசநோய்க்கானசிகிச்சையாது?*

தாய்மையடைந்தால் காசநோய் ஏற்படின் சிகிச்சை மிகவும் அவசியம். தாய்மையடையாத நிலையில் காசநோய் ஏற்பட்டால் சிகிச்சை நிறைவடையும்வரை தாய்மை அடைதலை தவிர்த்தலே நல்லது.

*காசநோய்க்கான சிகிச்சையில் மருந்துகளின் பக்க விளைவுகள் யாவை?*

ஒவ்வொரு மருந்திற்கும் சில பக்கவிளைவுகள் ஏற்படலாம். ஆபத்தான நிலைகளை முற்கூட்டியே தவிர்க்க வேண்டும். பெரும்பாலான மருந்துகள் ஈரலில் தொழிற்படுவதால் ஈரலில் உள்ள அனுசேப மாற்றங்களால் வாந்திக்குணம், வாந்தி, கண் மஞ்சளாதல் ஏற்படலாம். இதன்போது குருதிப்பரிசோதனை அவசியம். இறப்பம்பிசின் மருந்து சிறுநீரினை இளம் சிவப்பு நீலநிறமாக மாற்றும். இது பக்கவிளைவு அல்ல. ஆனால் இது குறித்து நோயாளிகளுக்கு கூறுவதனால் அவர்கள் வேண்டாத பயம் கொள்ளத் தேவையில்லை.

*காசநோய்க்கான மருந்துகளை எடுக்கும்போது வேலைக்குச் செல்லலாமா? பாடசாலைக்குச் செல்லலாமா?*

காசநோயாளிகள் மருந்துகளை உபயோகிக்கத் தொடங்கி இரு கிழமைகளில் தங்கள் கடமைகளை வழமை போல் செய்யலாம் வேலைக்குச்செல்லலாம். பாடசாலைக்குச்செல்லலாம். ஏனையவர்களுக்கு தமது நோய்நிலை பற்றிக் கூறவேண்டிய அவசியமில்லை.


*காசநோய்க்கான சிகிச்சையில் உளவளத்துணையின் முக்கியத்துவம் யாது?*

உளவளத்துணை என்பது நோயாளிக்கு ஆதரவு வழங்குவதும், தகவல்களை வழங்குவதும், சிகிச்சையினை தொடர்ச்சியாக எடுப்போர்க்கு உதவும்.

*காசநோயாளி சிகிச்சையை மறுத்தால் யாது செய்ய வேண்டும்?*

ஒருவருக்குகட்டாயமாகச்சிகிச்சைஅளிக்கமுடியாது. இயலுமான வரை விளங்கப்படுத்தி சிக்சிசைக்கு ஒத்துழைக்க முனைய வேண்டும். சிகிச்சை பெறாத நோயாளியாக ஒருவர் இருந்தால், அவரிடம் இருந்து ஏனையவர்களுக்கு நோய் பரவாது இருக்க, தடுப்பு முறைகளை உபயோகிக்கவேண்டும்.

*காசநோயாளருக்கான விசேட வைத்தியசாலை*



*யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டியது அவசியமா?*

காசநோயாளருக்கான வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் மயிலிட்டியில் மீளவும் அமைக்கப்படுதல் அவசியமானதாகும்.

*காசநோய்க் கட்டுப்பாட்டில் தற்போதைய முன்னேற்ற நிலை யாது?*

காசநோயினால் பாதிக்கப்படுபவர்கள் தற்போது வருடந்தோறும் 3 வீதத்தினால் குறைவடைகின்றது. உலகில் காசநோய் சிகிச்ஸ்சையினால் குணமடையும் வீதம் 83 வீதமாக உள்ளது. உலக சுகாதார நிறுவனம் 2018ஆம் ஆண்டு உலக காசநோய் தினத்தின் தொனிப்பொருளாக இதனை முன்வைத்துள்ளது. காசமில்லா உலகத்துக்காக தலைவர்கள் தேவை' என்பதே இந்த ஆண்டுக்கான தொனிப்பொருள். இதற்குரிய தலைமைத்துவம் அரசியலில் உள்ளூராட்சி, மாகாணசபை, பாராளுமன்றம் என்பவற்றில் இருத்தல் வேண்டும். மற்றும் சமூக அமைப்புகள் சுகாதார சேவைகள் என்பவற்றிலும் இருத்தல் அவசியமாகும்.

*உலக காசநோய் தினத்தின் முக்கியத்துவம் யாது?*

இந்தத்தினத்திலேயே1882ஆம்ஆண்டுமருத்துவறெபேட்கொக் காசநோய்கிருமிகளைக்கண்டறிந்துஉலகிற்குவெளிப்படுத்தினார். இந்தத் தினத்தை இன்று உலகினில் ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி காசநலனில் சமூகப் பங்களிப்பினையும் அரசியல் பங்களிப்பினையும் அதிகரிக்கலாம்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மாற்று நடவடிக்கையை உடன் எடுக்கவேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மீண்டும் ஒருதடவை இலங்கை தொடர்பானவிடயம் பலமாக ஒலித்திருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை இன்னும் ஒரு வருட காலத்திற்குள் கொழும்பு நடைமுறைப்படுத்தும் என்கிற நம்பிக்கை தனக்கு இல்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார்.

இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கொழும்புக்கு முதலில் 2 வருட கால அவகாசம் வழங்கப்பட்டது, அந்தக் காலப் பகுதிக்குள் செயற்படத் தவறியதை அடுத்து மேலும் இரண்டு வருட காலப் பகுதி வழங்கப்பட்டது. அதிலும் ஒரு வருட காலம் கடந்துவிட்ட நிலையிலேயே தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தும் என்கிற நம்பிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் இழந்துள்ளார். ஆனால், ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் எண்ணம் கொழும்புக்கு இல்லை என்றும் , அதனால் கொழும்பு மீது இறுக்கமான நடவடிக்கை அவசியம் என்றும் தமிழர்கள் தரப்பில் இருந்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. அதுவே உண்மை என்பதைக் காலம் நிரூபித்திருக் கிறது.

கடந்த புதனன்று ஜெனிவாவில் நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தின்போதும் 2015இல்தான் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை முழுமையாகச் செயற்படுத்தப்போவதில்லை என்பதைக் கொழும்பு தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறது. ''இலங்கையில் காணப்படும் நீதி மற்றும் சட்ட நடைமுறைப் பொறிமுறைகள் முழுமையாக இயலுமானதாகவும், ஈடுபாடானதாகவும் உள்ளன. இவற்றுக்கு நீண்டகால நேர்மையும் தொழில் வாண்மையும் காணப்படுவதுடன், அவற்றின் சுதந்திரத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் 2015ஆம் ஆண்டு தை மாதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன, நல்லிணக்கப் பொறிமுறைகள் எமது அரசமைப்புக்கு இயைபாகவே நடைமுறைப்படுத்தப்படும்'' என்று கொழும்பின் சார்பில் உரையாற்றிய அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

அவரது இந்தக் கூற்று 2015ஆம் ஆண்டு கொழும்பு ஏற்றுக்கொண்ட தீர்மானத்திற்கு மாறானது. அந்தத் தீர்மானத்தின்படி மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், சட்ட ஏற்பாட்டாளர்களை உள்ளடக்கிய தனி நீதிமன்றம் உருவாக்கப்படும் என்று ஏற்றுக்கொண்டிருந்தது. பல பன்னாட்டுச் சட்டங்கள் தற்போதைய இலங்கை அரசமைப்புச் சட்டங்களுக்குள் உள்ளடக்கப்படாத நிலையில், அவற்றைத் திருத்தியும் புதியவற்றை ஏற்றும் பல மாற்றங்களைச் செய்வதன் மூலமே இத்தகைய தனி நீதிமன்றங்களை உருவாக்க முடியும். ஆக, அதனை ஏற்றுக்கொண்டே தனி நீதிமன்றத்தை உருவாக்குவதாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை வாக்குறுதியளித்தது. ஆனால், இப்போது இலங்கையின் அரசமைப்புக்கு இயைபாக நடைமுறைப்படுத்தப்படும் என்கிறார் அமைச்சர்.

இலங்கையில் தற்போதுள்ள அரசமைப்பு மற்றும் சட்டங்களின் ஊடாக தன்னிச்சையான, நீதியான, பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட முடியாது என்று பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்கள் கருதியதன் அடிப்படையிலேயே, வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய தனி நீதிமன்றத்துக்கு ஐ.நா. தீர்மானம் வழிகோலியது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது முதலே தனி நீதிமன்றங்களுக்கு மறுப்புத் தெரிவித்து வந்த அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் நிலைப்பாடு, தற்போது மனித உரிமைகள் சபையிலும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் தீர்மானத்தை கொழும்பு நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பது என்பது கானல் நீர் போன்றதுதான். மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் மாற்று வழிகளை ஆராயுமாறு, உறுப்பு நாடுகளைத் தாம் கோருவார் என்று தெரிவித்திருந்தார். தீர்மானத்தை கொழும்பு முழுமையாக நடைமுறைப்படுத்தாது என்பது தெரியவந்துவிட்ட நிலையில், மேலும் ஒரு வருட காலம் காத்திருக்காமல் இப்போதே அந்தப் பணியை ஐ.நா. ஆணையர் ஆரம்பிக்க வேண்டும்.



# மக்கள் நலச் சிந்தனையில் அயர்ச்சியற்ற உணர்திறன் அவசியம்




செ.உமாசுதன்

ஆளுகை தொடர்பான எண்ணக்கருவாக, பொருண்மையுடைய கருவியாகப் பேசப்படுகின்ற 'நல்லாட்சி' எனும் பதம் மக்களுக்குப் புதிதானதொன்றல்ல. அது நாகரிகம் என்ற பொதுமைக்கு உட்பட்ட பழமைச் சிறப்புடையது என்று சொல்லப்படுகிறது. இதற்கென தனித்துவமான வரையறை எதுவும் குறிப்பிடப்படாதபோதிலும், உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க, பொருத்தமுறு குறியிலக்கு வழக்கில் இருந்து வருகிறது. இதனை, சூழ்நிலைக்கு ஏற்ப, நெகிழ்ச்சித் தன்மையின் ஊடுகடத்தியாக பலரும் பயன்படுத்தி வருகின்றனர்.

### 'நல்லாட்சி' எனும் தொனிப்பு

அந்தவகையிலே, இலங்கையின் பொது நிர்வாக சொற்றொகுதியில், கடந்த 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசதலைவர் தேர்தலைத் தொடர்ந்து பேசு பொருளாகிப்போன புதிய அவதாரமாக, தீராத நிர்ப்பந்தமாக 'நல்லாட்சி' எனும் தொனிப்பு, ஒழுங்கமைவின்றி இழையோடிப் போயுள்ளது. இது அபிவிருத்தியினதும், சமத்துவத்தினதும் இலக்கை அடைவதற்கு அவசியப்பாடுடைய அரசியல் மற்றும் நிறுவன ரீதியான நடைமுறைகள், அது சார்ந்து வெளிப்பாடுகளுடன் தொடர்புறுகிறது என்ற வெளிப்படுத்தல் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகிறது.

### தமிழ் மக்களின் எதிர்காலச் சிந்தனை நயம்

இந்தச் சந்தர்ப்பத்திலே, தமிழ் மக்கள் தங்களுடைய எதிர்காலம் குறித்து சிந்தனைவயப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். அன்றாட வாழ்வியலில் எதிர்வினைகளிடம் இருந்து தப்பிப்பிழைத்து தம்மை நிலைநிறுத்திக் கொள்ளப் பாடுபட வேண்டியவர்களாக அசைவுறுகின்றனர்.

குறிப்பாக அரசியல், பொருளாதார சித்தாந் தங்களை அறிவுடமை கொண்டு சீர்ப்படுத்தி, தமக்குரித்தான அதிகாரப் பொறிமுறையாக அதனை வடிவமைத்து, இயங்குநிலை பெறச் செய்யவேண்டிய தேவையை உணர்ந்து கொள்ள வேண்டும். அதனைச் செயல்வடிவம் பெறச் செய்ய முயற்சிக்க வேண்டியவர்களாக இயங்குநிலை பெறவேண்டும்.

உரிமை என்ற உயர் படிநிலையை தம்வயப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வும், அதிகார வர்க்கத்தோடு நியாயங்களைத் தர்க்கிக்கவும், முரண்டு பிடித்தால் உறை வாளாய் உண்மைகளை இடித்துரைத்து, தீர்வு பெற 'அறை' கொடுக்கவும் தயங்கக்கூடாது.

### 2009 ஆம் ஆண்டுகளின் முன்பான பயணவெளி

உண்மையில் இவை சாத்தியமா என்ற கேள்வி நிலைகள் 2009 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு முன்பான பயணவெளியில் தமிழர்களிடத்தில் இருந்ததில்லை. அகிம்சை, ஆயுதம் என்ற தோற்றுவாய்கள் தந்த ஆத்மபலம் என்பது, விடுதலையையும் அதன்பால் முன்நகர்ந்த உரிமைவேட்கையையும் ஒழுங்குறக் கட்டமைத்து வழிநடத்தின. ஆனால், பன்னாடுகளின் அனுசரணையோடு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட மன்னிக்கமுடியாத 'தமிழர் தாயக இனப்படுகொலை' மீள முடியாத சோக இடுகுறியின் முற்றுகையாக, அத்தனை விடயங்களையும் கேள்விநிலைக்கு உட்படுத்தியுள்ளது. இதில் வாக்குரிமையின் பலம் எம்முன்னாய் ஒப்புவிக்கின்ற 'ஜனநாயகம்' என்ற உய்வற்ற அயர்நிலைத் தாற்பரியம், பொருத்தமற்ற பிரசவமாக மீள் சுழற்சி பெறுகிறது. பிரதிநிதித்து வங்களாக அந்தரிக்கிறது.

### ஜனநாயகத்தின் கோலம்

கட்சி, கொள்கை, கொள்கைப் பரப்புரை, தேர்தல் விஞ்ஞாபனம், உறுப்புரிமை, உறுப்பினர் தெரிவு, அதிகாரப் பரம்பல், நிதிப்பரம்பல், மக்கள் பணத்தில் கொழுத்த சம்பளம், பொது நிகழ்வுகளில் வரவேற்புக் கம்பளம் எனக் காட்சி பெறும் இவர்கள் வாழ்வு செந்தளிக்கிறது. வரையறுக்கப்பட்ட நியதிச் சட்டங்களின்பின், ஜனநாயக செயல்வெளியாக அங்கத்துவம் பெற்று நாடாளுமன்றம் செல்கின்றபோதும், அங்கு பேச்சுரிமை என்பது ஆக்கவுரிமையாக மாற்றம் பெறுவதில்லை. ஓர் பொது நிகழ்வின் ஒன்றுகூடல் போன்று, ஒருவருடன் ஒருவர் அளவளாவுவதும், சந்தர்ப்பங்களில் முரண்நிலை பெறுவதும், கடமைக்காக விடயதானங்களைப் பேசி அவற்றைப் பதிவாக்கிவிட்டு உறங்குநிலை பெறுவதும், கால அவகாசம் முடிவடைந்ததும் மீண்டும் மக்களை நாடி மண்டியிடுவதும் என்ற, பற்றற்ற அலங்கார உற்சவ மூர்த்திகளின் எழுந்தருள்கையாக இவர்களின் புரிதலற்ற ஆளுமை, அரசியல் சம்பிரதாயமாக பரம்பலடைகிறது. ஒருபோதும் மக்களின் பொதுநலன் கருதிய சேவை என்பது முழுமைபெறுவதில்லை; நிரம்பல் அடைவதில்லை.

### மக்கள் நலச் சிந்தனையில் அயர்ச்சி நிலை நிலவுகிறது

இலங்கையைப் பொறுத்தவரையில் மக்கள் நலச்சிந்தனையில் அயர்ச்சி நிலையே ஆழ வேரூன்றியுள்ளது. குறிப்பாக 'நல்லாட்சி' என்ற சொல்லாட்சியின் அதிகார வரன்முறைகள், தமிழ்மக்கள் சார்ந்த உணர்திறன் தொடர்பில் கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. அதன் இயங்குநிலையும், செயல் வீரியமும் ஒழுங்குமுறைக்குட்படவில்லை. இனவாதமுலாம்பூசிய, துருப்பிடித்த அழிவின் கூர்முனையாக, தமிழர்களை அவர்களின் உரி

மையின்பால் உய்யவிடாது துன்ப வினையாக நச்சரித்துக் கொண்டுள்ளன. திட்ட மிட்ட போர்வலயங்களின் உருவாக்கம், நில அபகரிப்பு, அதிகரித்த இராணுவப் பிரசன்னம், சுற்றிவளைப்பு, தமிழ் இளைஞர்கள் மீதான பலவந்தமான கைது நடவடிக்கை, காணாமல் போகச்செய்தல், தமிழ்பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமை, தமிழர்பொருண்மியத்தின் கட்டமிடப்பட்ட, திட்ட மிட்ட சுரண்டல், மிக நீண்ட போர், இனப் படுகொலை என அவை ஆதரவற்ற ,அநாதரவான துன்பியல் அடைமொழியாக விடியலை வேண்டி நிற்கின்றன. இதுவே யதார்த்தம்..!



### தமிழர்கள் குறித்தான மனித உரிமை

இந்த நிலையிலே, மனித உரிமைகள் கூட்டத்தொடரின் 37 ஆவது அமர்வு ஜெனீவாவில் இடம்பெற்று முடிந்திருக்கிறது. அந்தக் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்பாகவே இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வெளிப்படுத்தல்கள் பல முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, "ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு நீதி வழங்குவதில் இலங்கை அரசு கொண்டுள்ள செயலற்ற தன்மை கவனிக்கத்தக்கது. இந்தக் குற்றங்களுக்கு எதிராக பன்னாட்டளவிலான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்." என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சைட் அல் குசைன் தெரிவித்தமை கவனிப்புக்கு உரியது.

கடந்த பத்து மாதங்களில் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு கண்டு கொண்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் சிறப்பு அறிக்கையை வெளியிட்ட அவர், போர்க் காலத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலில் அரசு தோல்விகண்டுள்ளதையும், வெளிப்படுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர், மனித உரிமைகள் ஆணையம், இந்தவிடயங்களில் உலகளாவிய அதிகார வரம்பின் பயன்பாடு குறித்துச் சிந்திக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இதனூடே மனித உரிமை மீறல்கள் மற்றும் தவறான மீறல்களுக்கு தண்டனையை வழங்குவதற்கான திறனை அல்லது விருப்பத்தை இலங்கை அரசும், அதில் அங்கம் வகிக்கின்ற அதிகாரிகளும் இன்னமும் நிரூபிக்கவில்லை என்பதனையும் இடித்துரைத்துள்ளார்.

தவிர, இலங்கையில் நீதி முறைமை ஒன்றை அரசு அல்லது இராணுவ அதிகாரிகளுடன் கையாளும் போது, பிரதானமாக நீதித் துறையின் ஒட்டுமொத்த குணாம்சமானது, அரச அதிகாரிகள் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றஞ்சாட்டப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்பாக நீதித்துறை நிர்வாகத்தில் 'இரட்டைநிலைப்பாடு' தலைதூக்கும் எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

### பயனுறுதியற்ற செவிவழிச்செய்திகள்

இதனிடையே ஐ.நா மனித உரிமைகள் சபையின் 37 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சைட் அல் ஹுசைன், இலங்கை அரசின் செயற்போக்கு தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள, குறிப்பாக உலகளாவிய சட்ட நடைமுறைகளை போர்க் குற்றம் தொடர்பில் நடைமுறைப்படுத்த வேண்டும். நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற கருத்துக்களும், அண்மையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்களை சந்தித்த சுவிஸ் தூதுவரின், 'அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்' என்ற ஆறுதல் வார்த்தைகளும் செவி வழிச் செய்தியாகவே நகர்கின்றன. செயலற்ற அதன் பயனுறுதி என்பது பூச்சியமாகவே இருக்கும். ஏனெனில் போர் மற்றும் அதன் பின்விளைவுகளின் இறுதிக் கட்டங்களில், பல்லாயிரக் கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளமை தொடர்பில் ஐ.நாவும், மற்றும் பல மனித உரிமைகள் அமைப்புக்களும் நம்பகமான ஆதாரங்களை பதிவு செய்துள்ளன. ஆனால் அவை காணாமற்போன நபர்கள் பற்றிய தகவலைச் சேகரித்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இதற்கு இணையான கட்டியங்கூறலாக, புதிய அரசமைப்பின் செயல் வேகமும் ஆர்வமற்ற வேண்டா வெறுப்பான போக்கிலேயே பயணம் கொள்கிறது. இதனைத் தமிழர் பிரதிநிதித்துவங்கள் கூட ஏற்றுக் கொண்டுள்ளன. இதனை ஐ.நா உதவிச் செயலரிடம் பட்டவர்த்தனமாக, காலத்துக்கேற்ற 'திருவாசகமுற்றோதலாக' எடுத்தும் கூறித் தங்கள் வேலைகளில் ஒய்யாரம் கொள்கின்றனர்.

இத்தனைக்கும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஐ.நாவுக்கு தகவல் வழங்கியவர்களை 'தமிழ்ப் புலி ஆதரவாளர்கள்' எனச் சுட்டி, நல்லாட்சியின் நாயகனாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கண்டனம் தெரிவித்திருந்தமையும் இங்கு நோக்குதற்குரியது.

### தமிழர்களுக்கான தீர்வு தான் எப்போது ?

ஆக, நல்லாட்சி என்ற தற்கால நகர்வின் செயல்முறையில் பொதுவிவகாரங்கள், வளங்களின் மீது கட்டுப்பாடு, குறிப்பாக முறைகேடு மற்றும் ஊழலற்ற தன்மையில் மனித உரிமைகளின் உணர்வுகளுக்கு உத்தரவாதமளித்தல், உரிய கவனத்துடன் கூடிய சட்ட ஆளுகை, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மை போன்றவற்றுக்கு உரித்தான தொடர்புறலைக் கண்டுகொள்ள முடியவில்லை. நல்லாட்சியின் உண்மையான அளவீடு என்பது, நியாயமான சட்ட உரிமை, தனிப்பட்ட பாதுகாப்பு, குடியியல், கலாசார, பொருண்மிய மற்றும் சமூக உரிமைகள் போன்ற 'மனித உரிமைகளின்' வாக்குறுதிகள் மீதான வெளிப்படுத்தல்களின் அளவாக இருக்க வேண்டும்.

ஆனாலும், இந்தவிடயங்கள் இன்னமும் தேடல் நிலையிலேயே உள்ளதாகவே தோன்றுகிறது. இதிலிருந்து முயற்சியின் விளிம்பை அடைவது என்பது கடினம். எனவே தமிழர்களுக்கான தீர்வு என்பது, இன்றைய நிலையில் கேள்விக்கு உரிய தொன்றே. சுதந்திரமான விடுதலை என்பதும் பகல் கனவை ஒத்ததே. மொத்தத்தில், நல்லாட்சி என்பது வெறும் வெத்து வேட்டு நாடகமே.

“ நல்லாட்சி என்ற தற்கால நகர்வின் செயல்முறையில் பொதுவிவகாரங்கள், வளங்களின் மீது கட்டுப்பாடு, குறிப்பாக முறைகேடு மற்றும் ஊழலற்ற தன்மையில் மனித உரிமைகளின் உணர்வுகளுக்கு உத்தரவாதமளித்தல், உரிய கவனத்துடன் கூடிய சட்ட ஆளுகை, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை போன்றவற்றுக்கு உரித்தான தொடர்புறலைக் கண்டு கொள்ள முடியவில்லை. நல்லாட்சியின் உண்மையான அள வீடு என்பது, நியாயமான சட்ட உரிமை, தனிப்பட்ட பாதுகாப்பு, குடியியல், கலாசார, பொருண்மிய மற்றும் சமூக உரிமைகள் போன்ற 'மனித உரிமைகளின்' வாக்குறுதிகள் மீதான வெளிப்படுத்தல்களின் அளவாக இருக்க வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

### அரசுக்கு முண்டு கொடுப்பதை கூட்டமைப்பு நிறுத்த வேண்டும்

இனஅழிப்புப்போர் முடிவடைந்து 9 வருடங்கள் முடிவடையவுள்ள நிலையிலும், தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வேதும் எட்டப்படவில்லை. நிலைமை இவ்வாறு இருக்க, சென்ற வருடக் கூட்டத் தொடரில் அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. ஒரு வருடம் கடந்த நிலையிலும் இலங்கை அரசு ஆக்கபூர்வமான செயற்பாடு எதையும் மேற்கொண்டதாக இல்லை. இந்தக் கால அவகாசத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தலையாட்டியது. கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடுத்தெருவில் இருந்து போராடி வருகிறார்கள். காணிகளை இழந்தோர், வருடக் கணக்காகச் சிறைகளில் வாடுவோர் தரப்புகளுக்கு நல்லாட்சி அரசு எதுவும் செய்யவில்லை. குற்றம் இழைத்தவர்களைப் பாதுகாக்கும் நிலையிலே அரசு செயற்பட்டு வருகிறது. தற்போதைய ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? கூட்டமைப்பு அதற்கான நடவடிக்கைகளுக்காக அழுத்தங்களை மேற்கொள்ளுமா? இனியும் கூட்டமைப்பினர் மைத்திரி - ரணில் அரசுக்கு முண்டு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளுவார்களானால், பிரதேச சபைத் தேர்தலில் மக்கள் விடுத்துள்ள எச்சரிக்கையை உதாசீனம் செய்வார்களேயானால் மாகாண சபைத் தேர்தலின் போது அதன் பலனை நிச்சயம் அனுபவிப்பார்கள்.

ப.யேசுபாதம், வட்டக்கச்சி.

### வலி.கிழக்குப் பிரதேச சபையின் புதிய நிர்வாகமாவது மனம் கொள்ளுமா?

அச்சுவேலி பிரதேசம், விவசாயிகள் பெருமளவில் வாழும் வளம் கொழிக்கும் பூமியாகும். புகழ்பெற்ற இந்த விவசாய பிரதேசத்திலுள்ள பத்தைமேனி பாரதி வீதிக்கும், காட்டுவேம்பு ஒழுங்கைக்கும் இடைப்பட்ட வீதி, கடந்த பல வருடங்கள் காலமாக சீரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக கல்லுகள் சிதைவடைந்து பாதசாரிகள், வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையில், மழைக் காலத்தில் நீர் தேங்கி நின்று சுகாதாரத்துக்கும் கேடுவிளைவிக்கும் வகையில் உள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் வேதனையும் விரக்தியும் அடைந்துள்ளனர். அந்தக் கிராம மக்கள், வயோதிபர்கள், பாதசாரிகள், வாகனதாரிகள், பாடசாலை மாணவ மாணவிகள் ஆகியோர் தினமும் பயன்படுத்தும் மேற்படி பாதையை சீரமைத்து இலகுவாகவும் சிரமின்றியும் பயணிக்க உரிய திருத்தங்களைச் செய்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை நிர்வாகமும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் ஏற்பாடு செய்து தரமாட்டார்களா? என எதிர்பார்க்கின்றனர் இந்தப் பகுதி மக்கள். வலி. கிழக்குப் பிரதேச சபையின் புதிய நிர்வாகமாவது மேற்குறிப்பிட்ட பகுதி மக்களின் நலனில் அக்கறை காட்டி மேற்படி பாதையை சீரமைத்து உதவுமாறு அப்பகுதி மக்கள் சார்பில் கோருகிறேன்.

வ.க.ஜெயபாலன், யாழ்ப்பாணம்.

# சீனப் பொருள்களுக்கு 10 லட்சம் கோடி வரி

## அதிபர் ட்ரம்ப் அதிரடி



உலக தண்ணீர் தினம் உலக நாடுகள் பலவற்றில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரம் தண்ணீரை முதலாவதாக இழக்கும் நகரமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் கேப்டவுனில் உள்ள குளமொன்றின் ஒளிப்படத்தை வெளியிட்டுள்ளது பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ். (ம)

வொஷிங்டன், மார்ச் 24



சீனப் பொருள்களுக்கு வருடத்துக்கு 10 லட்சம் கோடி ரூபா அளவுக்கு வரி விதிக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தது சீனா.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்றது முதல் அமெரிக்க உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறார். இதற்காக அவர் கடும் பொருளாதாரத் திட்டங்களையும் வரி விதிப்புக்களையும் மேற்கொண்டு வருகிறார். இத்தகைய பின்னணியில் சீனாவில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு வரியை அதிகரிக்க அவர் தீர்மானித்துள்ளார்.

"அமெரிக்க பொருள்களுக்கு சீனாவில் 25 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. ஆனால் சீன பொருள்களுக்கு அமெரிக்காவில் 2.5 வீத வரி விதிக்கப்படுகிறது. இது நியாமான வர்த்தகம் அல்ல" என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

இதற்குப் பதிலடி அளிக்கும் வகையில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி ஆகும் பல்வேறு பொருள்களுக்கு 3 பில்லியன் டொலர்கள் வரை வரி விதிக்கப் போவதாக சீனா கூறியுள்ளது. மேலும் அமெரிக்காவுடன் வர்த்தக ரீதியாக இறுதிவரை போராடத் தயார் என்றும் அது அறிவித்தது. (ம)




## மிரட்டும் தனித்துவம்!

போலந்து நாட்டைச் சேர்ந்த 32 வயது அடம் கர்லிகேலின் என்பவர் தனது சமூக வலைத்தளங்களில் பதிவேற்றும் ஒளிப்படங்களைப் பார்ப்பவர்கள் ஆச்சரியமடைகிறார்கள். படங்களை 'நெகடிவ் பில்டர்' போட்டு எடுத்திருக்கலாம் என்று நினைப்பார்கள். ஆனால் அடம், படங்களில் மட்டுமல்ல, நிஜத்திலும் அப்படியேதான் இருக்கிறார்.

முகம், உடல், கண் உட்பட அனைத்து இடங்களிலும் அடர் சாம்பல் வண்ணத்தில் 'டாட்டூ' குத்தியுள்ளார். தலை, புருவம், இமை முடிகளுக்கு டை அடித்து வெள்ளையாக மாற்றி விட்டார். "நான் இருபது ஆண்டுகளாக 'டாட்டூ' குத்தி வருகிறேன். ஆரம்பத்தில் சில எழுத்துகளைத்தான் எழுதி வைத்திருந்தேன். காலம் செல்லச் செல்ல 'டாட்டூ' மீது ஆர்வம் அதிகரித்துவிட்டது. இன்று என் உடலில் 90 வீதமானவை டாட்டுவால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் அடம். (ம)



# அன்னை முத்துமாரி பஸ் சேவை

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

## கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்

காலை நேர பஸ் சேவையை ஆரம்பித்துள்ளோம்

Online Booking : www.annaimuthumari.com

கொழும்பில் இருந்து
காலை - 9.00 மணிக்கும்
பருத்தித்துறையில் இருந்து
காலை - 7.00 மணிக்கு புறப்பட்டு
யாழ்ப்பாணம் ஊடாக
காலை - 8.00 மணிக்கும்



தொண்டமனாறு, பருத்தித்துறை, கோப்பாய், சுன்னாகம், கொக்குவில், நல்லூர், யாழ்ப்பாணம்.

இதேபாதை ஊடாக பருத்தித்துறையில் இருந்து இரவு 9.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக 10.00 மணிக்கு இரவுநேர சேவை நடைமுறையில் உள்ளது.

## தொடர்புக்கு : 0775448503


விண்ணக வாழ்வில்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் எலிசபேத்

## சூசைப்பிள்ளை



மலர்வு 29.03.1935 — உதிர்வு 24.03.2017

"நீர் இன்று என்னோடு வான்வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கின்றேன்"

எங்கள் குடும்ப ஒளிவிளக்கான
எமது அன்னையின் ஆன்ம இளைப்பாற்றிக்கான
இரங்கல் திருப்பலி இன்று (24.03.2018) சனிக்
கிழமை முற்பகல் 6.15 மணிக்கு கரவெட்டி
பரலோக மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.
02.04.2018 திங்கட்கிழமை எமது இல்லத்தில்
நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறும்
அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(cs 15007 -13 17)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 14 . 11 . 1952

ஆண்டவன் அடியில் 19 . 03 . 2013

திதி:- பூர்வபக்க அட்டமி (24.03.2018)

## திருமதி அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஓயுமோ உம் நினைவு
அன்பின் ஒளியாக அகத்தின் உயிராக - அவனியிலே
பவனி வந்து நின்ற எம் இன்னுயிர்த் தாயே!
மதிப்பான உங்கள் உருவம் நீறாகிப் போனதென்று
நினைக்க மனம் விரும்பவில்லை இப்போதும் கூட!
இமயமாய் நின்றெம்மை உயரத்தில் ஏற்றி வைத்தீர்!
நிறைவான வாழ்விலே நிலைத்து நின்ற நீங்கள்
எம் நெஞ்சைக் கனமாக்கி நீண்ட தூரம் சென்றதும் ஏனோ?
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் தவிக்கின்றோம்
மீண்டும் ஓர் பிறப்பு உண்டெனில் வந்திடுவீர் - எமைத்தேடி
எம்முன்னே நீங்கள் நடமாடி அகமகிழ்ந்த காலமதை
பின்னே நாம் மறையும் காலம் வரை என்றும் மறவோம்.


என்றும் உங்கள் நினைவுகளுடன்...

இல.14, கோவிலாக்கண்டி,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(IN/6235)(11,17)

# மரண அறிவித்தல்



பிறப்பு 26 . 11 . 1930 — இறப்பு 20 . 03 . 2018

## இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை 20.03.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - அமராவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மங்கையர்கரசியின் பாசமிகு கணவரும், பிறேமராணி (கனடா), கலாராணி (கொழும்பு இந்துக் கல்லூரி), மிதிலாராணி (கனடா), காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் முரளிகரன் (சமுநல சேவைகள் நிலையம், கைதடி/ சாவகச்சேரி), அனுராகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயகுமார் (கனடா), சுரேஷ்குமார் (தொழில்திணைக்களம், கொழும்பு), இரவீந்திரன் (கனடா), மதிவதனி (யாழ்.கோண்டாவில் இந்துக்கல்லூரி), நளினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வைதினி, வஸ்னவி, கிஷாயினி, துஷாயினி, சாயுகன், அபிஷேக் சௌமியா, அகிசன், அரண்யா, சரண்யா, வைநிலா, ஆரன், சபரி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, தம்பிப்பிள்ளை (ஆசிரியர்), மயில்வாகனம், முத்துசாமி ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வரராஜசிங்கம், மனோன்மணி, கனகாம்பிகை, கார்த்திகேசு, நாகம்மா, சிவக்கொழுந்து மற்றும் தனபாலசுந்தரம் (கனடா), திருஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானம்மா, திருநாவுக்கரசு, சண்முகநாதன், ஞானவல்லி, சந்திரகுமாரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுவிசுத்ரராமவீதி டபிள்யு சில்வாமாவத்தை, கொழும்பு 6 இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, சுவிசுத்ரராம வீதி,
டபிள்யு சில்வா மாவத்தை, கொழும்பு - 6

(CS/15024)(11,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திருமதி மகேஸ்வரி ஆறுமுகசாமி

புங்கடி வீதி, கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சோலையம்மன் கோயிலடி டச்சு வீதி, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆறுமுகசாமி 22.03.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசித்தம்பி - தெய்வனைப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா ஆறுமுகசாமியின் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) மற்றும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன உத்தியோகத்தர்), சிவராசா, கந்தசாமி (அதிபர் - யா / மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானேஸ்வரி, மனோன்மணி, ஞானகலை, அரியமலர் ஆகியோரின் மைத்துனியும், தங்கராஜா, முத்துலிங்கம் (டென்மார்க்), கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், புஸ்பவதி, றூபராணி, நீலாவதி ஆகியோரின் மைத்துனியும், சிவகுமாரன் (ஜேர்மனி), சிவராணி, சிவநாதன் (UK), சிவதாசன் (UK), சிவறஞ்சி, சிவறஞ்சன், (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயமலர் (ஜேர்மனி), விஜயகுமார் (பிரதேச செயலகம் - பூநகரி), வாகினி, அஜந்தினி, கருணாமூர்த்தி (அருள்விநாயகர்), சாரு (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் கரிஸ் (ஜேர்மனி), ராகுல் (ஜேர்மனி), லோஜிதன், அஜிதன், சிம்மையி (UK), ஷாண் (UK), ஷைலி (UK), தனுஷ்காந், சாருஸ்காந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: **குடும்பத்தினர்.**

(akn.397)(13,17) 077 414 6425, 077 529 2962

# நினைவலைகள்

**31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**





பிறப்பு 14.11.1939
இறப்பு 11.10.1987
திதி: சதுர்த்தசி

பிறப்பு 04.05.1942
இறப்பு 27.03.2015
திதி: அட்டமி

## சின்னத்தம்பி தியாகராஜா

(நயினாதீவு - 5ஆம் வட்டாரம்)

நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள் காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
முப்பத்தொரு ஆண்டுகள் சென்ற பின்னும் என்றும் அழியா நினைவுகள்.

**அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

## தியாகராஜா அம்பிகையம்மா

(கண்ணகி)

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்
பாசதீபம் - உங்கள் நினைவுகள்
என்றும் அழியாது கண்ணின் இமைபோல எமைக் காத்த அம்மா
உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும்.

**குடும்பத்தினர்.**

(CS/25026)(11.17)

# மரண அறிவித்தல்



## தர்மலிங்கம் விஜயேந்திரன்

**மலர்வு 23.11.1958** **உதிர்வு 20.03.2018**

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், லண்டன் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் விஜயேந்திரன் 20.03.2018 செவ்வாய்க்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்) - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தர லிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பிரமிளா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆரபி மற்றும் சுரபி பைரவி, அனுசன் ஆரணன் ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், காலஞ்சென்றவர்களான திலகேந்திரன், தர்மேந்திரன் (பாபு) மற்றும் ஶ்ரீயமுனாதேவி, வசந்தி, யுவனேந்திரன், ரேணுகா, இலகேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கமலராணி, யோகராணி, கணேசானந்தன், கிரிதரமோகன், உஷாயினி, உருத்தி ரேஸ்வரன், ருக்ஷா மற்றும் பிரதாபன், பிரபாங்கன், பிரேமினி, பிரேமா, பிரபாலினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வேலரசி, கவியரசி, மகாலயன், தர்சன், பரன், கோகுலன், பிரியசி ஆகி யோரின் மாமனும் சுஜேந்தர், துஷாந்தர், கஜராவ் (தஜி), பிரணவராவ் (யோஜி) ஆகியோரின் சித்தப்பாவும், நதினி, தவின், இஷானி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.11, கதிரவேலு ஒழுங்கை,**
**கனகரட்ணம் வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 15033) (13.17)

மதக் கலவரங்களில்
கலந்து
கொள்வதேயில்லை
கடவுள்

ஒவ்வொரு முறையும் ஏமாற்றமோ
தோல்வியையோ சந்திக்கும் போது
ஏதோ ஒரு சினிமா வசனம்
தேவைப்படுவது இன்றைய
இளைஞர்களுக்கு...!





# பெண் வேடத்தில் அனிருத்

தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளராக வலம் வருபவர் அனிருத். இவர் ஏற்கனவே சில படங்களில் தலைகாட்டிருக்கிறார். இவ்வாறிருக்க மற்றொரு படத்தில் பெண்வேடத்தில் நடிக்கவுள்ளராம் அனிருத். தற்போது அது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளன.

வேலை கிடைக்கிற வரைக்கும்
வேலை கிடைக்கலயேன்னு
கஷ்டமா இருந்திச்சு




வேலை கிடைச்ச பிறகு வேலைக்குப்
போறதுக்கே கஷ்டமா இருக்குது...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுயநலத்துடன் சிலர் உதவி செய்ய முன் வருவர். தொழில்வியாபாரத்தில்எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். நிலுவைப் பணம் வசூலாகும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில் வியாபாரம் சீர் பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** வாக்குறுதி நிறைவேற தாமதமாகலாம். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** வாழ்வில் குறுக்கிடுகிற சிரமத்தை சரி செய்ய முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும்.

**துலாம்:** நண்பர்களின் செயலால் அதிருப்தி உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பிள்ளையைக் கண்டிப்பதில் நிதானம் தேவை.

**விருச்சிகம்:** சொந்தப்பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலக்கை அடைய விடாமுயற்சி தேவைப்படும். வருமானம் சுமார்.

**தனுசு:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பரும் அன்பு பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** கடந்தகால உழைப்பின் பலனைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். நண்பரால் உதவி உண்டு.

**மீனம்:** பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு எகிறும்.

# எது அழகு?

தத்துவ ஞானி சோக்ரடீஸிடம் ஒரு முறை, "எது அழகு?" என்று கேட்கப்பட்டது. இந்தக் கேள்விக்கு சோக்ரடீஸ் "பானையில் உணவு இருக்கிறது. அதை எடுக்க உதவுவது எது? தங்கக் கரண்டியா... மர அகப்பையா? எது பயனுள்ளதாக இருக்கிறதோ, அதுவே அழகு!"– என்றாராம்.







# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 8 | | 6 | | 4 | |
| 5 | | | | | | | | 7 |
| | | 3 | | | | 6 | | |
| 2 | | | 6 | | 7 | | | 1 |
| | 3 | | | 9 | | | 5 | |
| 9 | | | 5 | | 8 | | | 4 |
| | | 2 | | | | 3 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 5 | | 2 | | 9 | | 1 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 3 |
| 1 | 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 9 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 |

நேற்றைய விடை


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

வருசா வருசம் குளிர்காலம்
வருது, வெயில் காலம் வருது
மழைக்காலம் வருது....



ஆனா எமக்கு மட்டும் ஒரு விடிவு காலம்
வரமாட்டேங்குது....

# பழைய புத்தகம்



நான் இப்போது ஒரு பழைய புத்தகம். எனது இன்றைய நிலை மிகவும் வேதனைக்குரியது. இன்று என்னைத் தேடுவார் எவருமே இல்லை. யாருக்குச் சொல்லி எனது துன்பத்தைத் தீர்த்துக் கொள்வது என்று எனக்குப் புலப்படவில்லை. மாணவர்களே! உங்களோடு நான் மிக நெருங்கி இருந்தவன். அதாவது உங்கள் புத்தகப் பைகளில் என் போன்றவர்களைச் சிரமம் பாராது நாளிலும் பொழுதிலும் சுமந்தவர்கள் நான் உங்கள் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டவள் ஆகையால் என் கதையை நான் உங்களிடமே கூறுகிறேன்.

தற்போதைய எனது வசிப்பிடம் உடைந்த ஒரு பெட்டி இங்கு எனக்கு உறக்கம் இல்லை. ஆறுதல் இல்லை. அமைதி இல்லை. தினமும் எலிகள் தத்தம் கூரிய பற்களால் அங்கம் அங்கமாக என்னைக் கொறிக்கின்றன. செல்கள் என்னுடன் ஒட்டி இருந்தே எனது குருதியை உறிஞ்சுகின்றன. என்னுடன் வேறு பல நண்பர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் இதே நிலைதான்.

என் எஜமானி மிகவும் இரக்கமுள்ளவள். இடையிடையே எங்கள் இருப்பிடத்தைச் சுத்தம் செய்வார். அவ்வேளை எனது அங்கங்களில் உள்ள தசைகளும் கழன்று விழும். அவற்றை ஒதுக்கிச் சுத்தம் செய்த பின்னர் அந்தப் புண்ணியவதி என்னை மெல்லத் தூக்கிப் பக்குவமாக இருந்த இடத்தில் வைத்து விடுவாள். அது அவளது மாதாந்தக் கடமையில் ஒன்றாகி விட்டது.

எனது எஜமானர் "பழைய புத்தகங்களை எல்லாம் எரித்து விடுங்கள்" என்று கூறி தம் மனைவியை நச்சரிப்பதும் "புத்தகங்களை எரிக்கக் கூடாது"என அவர் மனைவி தடுப்பதும் இப்பொழுது வழக்கமாகியுள்ளது. எனது எஜமானிக்குத் தெரியாமல் எஜமானர் ஏதும் தீங்கு செய்து விடுவாரோ என்ற ஏக்கம் ஒரு புறமும். வெளியுலகிற்கு வந்து உங்கள் கைகளில் மீண்டும் தவழ மாட்டேனோ என்ற ஆவல் மறுபுறமாக நான் தவிக்கிறேன்.

வெளியுலகில் நான் கண்ட காட்சிகளில் ஒன்று எனது சகாக்களிற் சிலர் எரிக்கப்படுவதாகும். அந்தப் பயம் என்னை வாட்டி வருகின்றது. உங்களைப் போன்ற மாணவர்கள் என்னைப் பற்றி அள்ளிச் சொரிந்த புகழுரைகள் இப்போது எனக்கு நினைவுக்கு வருகின்றன. "புத்தகம் என்பது ஓர் அறிவு பெட்டகம். புதிய புதிய கருத்துக்களை நிறையத்தரும் வற்றாத சுரங்கம்"என்று இன்னும் பலர் கூறி மகிழ்வார்கள். ஆனால் இப்போது அந்த அறிவுப் பெட்டகத்தின் நிலையைப் பாருங்கள். மக்களுக்கு உயர்ந்த சேவையை வழங்கும் யாவருக்கும் இப்படியான நிலைதான் வருமா? இதுதான் உலக நியதியா?

இன்று எனக்கு 35வயது. நான் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள யோகி யார் அச்சகத்தில் பிறந்தேன். இலங்கை எழுத்தாளர் ஒருவர் குறைந்த செலவில் ஒரு புத்தகத்தை உருவாக்க விரும்பி தனது கை எழுதுப் பிரதியில் இருந்த விடயங்களை பிழைகள் நீக்கி செம்மைப்படுத்தி அச்சுவாகனம் ஏற்றினார். நான் அழகிய மேலட்டையுடன் உருவாக்கப்பட்டேன். "கதைப்பூங்கா"என்னும் பெயரை மேலுறையில் பொறித்தார்கள். என்னுடன் பலநூறு சகோதரர்கள் அங்கே பிறந்து இருந்தனர். வண்ண மலர்கள் நிறைந்த உறையாகிய உடையை அணிந்த நாங்கள் அழகாகக் காட்சியளித்தோம்.


எங்களை உருவாக்கிய எழுத்தாளர் உதவியுடன் விமானம் ஏறி இலங்கைக்கு வந்தேன். நான் விற்பனைக்காக கடையில் கண்ணாடி அலுமாரியில் இருந்தேன். அதிஷ்டவசமாக அதிக நாள்கள் காட்சிப் பொருளாக நான் இருக்கவில்லை. ஆசிரியப் பெருமகன் ஒருவர் என்னை விலை கொடுத்து வாங்கினார். முப்பது வருடங்கள் அவருடன் சௌக்கியமாக வாழ்ந்தேன். அவர் எனக்கு மேலுறை போட்டு பாதுகாப்பாக பாதுகாத்து வைத்திருந்தார். என்னைப் பாராட்டிச் சீராட்டுவார். என்னை வாசிக்குமாறு பல நண்பர்களுக்கு கொடுப்பார். என்னைப் புரட்டிப்பார்க்காத அவரது மாணவர்கள் இல்லை என்றே கூறவேண்டும். இனிய பல கவிதை கதைகளைச் சுமந்திருந்த நான் கிடைத்தற்கரிய பொருளாக மதிக்கப்பட்டேன். என்னை வாசிக்க விரும்புவோர் என் எஜமானைத் தேடி வருவார்கள்.

இப்படியாக நான் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் நண்பர்களில் ஒருவருக்கு அவர் என்னை இரவலாகக் கொடுத்தார். என்னை இரவல் கொடுத்த எஜமான் சில நாள்களில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

இரவல் வாங்கியவர் ஒருநாள் என்னைப் படித்து விட்டு அவரது சிறு பிள்ளைகள் இருவர் கைக்கெட்டும் உயரத்தில் வைத்துவிட்டார். என்னை அந்தச் சிறுவர்கள் இருவரும் தமது சின்னக் கைகளால் கிழித்து விளையாடினர். பேனை, பென்சில் நிறங்களால் கிறுக்கி விளையாடினர். நான் படும்பாட்டை பார்த்த அந்தப் பிள்ளைகளின் தாய் ஓடிவந்து என்னை அள்ளி அணைத்தாள். கிழிந்த புத்தகங்கள் இருந்த பெட்டியில் வைத்து மூடினாள். நாளடைவில் பழைய புத்தகம் என்ற பெயரைப் பெற்றுவிட்டேன் என்னை இப்பொழுது ஒருவரும் வாசிப்பதில்லை.

இந்தப் புத்தகப் பெட்டியில் இருந்து புலம்பிக்கொண்டிருக்கிறேன். தோன்றிற் புகழோடு தோன்ற வேண்டும் அது இல்லாவிடில் தோன்றாமல் இருக்க வேண்டும் என்பார்கள்.

நானும் இந்தப் பெட்டியில் பாதிறைந்து போன நிலையில் என்னை யாராவது எடுத்து பக்குவப்படுத்தி பயன்படுத்த மாட்டார்களா என ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.



## நவீன கால உலக அதிசயங்கள்

பெர்னார்ட் வெப்பர் என்பவரால் நிறுவப்பட்ட New seven wonders society என்று சுவிற்சர்லாந்து அமைப்பு பன்னாட்டு வாக்கெடுப்பை 2007ஆம் ஆண்டில் நடத்திய தன் மூலம் நவீன கால உலக அதிசயங்கள் தெரிவு செய்யப்பட்டன.

**எகிப்து பிரமிட் (சி சென் இட்ஸா)**
மாயன் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் மெக்ஸிக்கோ நாட்டில் உள்ள பிரமிட் இதுவாகும்.

**சீனப் பெருஞ்சுவர்**
சீனாவின் பாதுகாப்புக்காக கி.மு.200ஆம் ஆண்டில் கிழக்கு ஷங்காய் கணவாய் முதல் மேற்கே லொட்னர் வரை 6350 கி.மீ.நீளத்தில் கட்டப்பட்டதாகும் (15000 மைல்கள்)

**தாஜ்மகால்**
டெல்லியை அடுத்து ஆக்ராவின் ஜமுனை நதிக்கரையில் மொகாலய மன்னர் ஷாஜகான் தன்காதல் மனைவியான மும்தாஜ்க்கு கட்டிய பளிங்கு மாளிகை.

**மாச்சு பிச்சு**
இதன் பொருள் மலையுச்சியில் அதிசய நகரம் என்பதாகும். பெருநாட்டில் உருபாம்பா சமவெளியில் உச்சியில் கடல் மட்டத்தில் இருந்து 2350 கி.மீ.உயரத்தில் அமைந்துள்ள இந்த நகரம் 1911ஆம் ஆண்டில் அமெரிக்க புதைபொருள் ஆய்வாளர் ஹிரம்"பிங்காம் என்பவரே the last cily of in cosஎன்னும் இந்த நகரை உலகிற்கு அடையாளம் காட்டினார்.

**இரட்சகன் இயேசு சிலை**
பிரேசில் நாட்டின் றியோடிஜெனிரோ நகரில் உள்ளது. டிஜ்ஜிக தேசியப் பூங்காவில் கோர் வோடோ மலையுச்சியில் உள்ள இந்தச் சிலை 38 மீ.உயரமும் 700தொன் எடையும் உள்ளது.இது ஹெய்ட்டர் சில்வா தலைமையில் உருவாக்கபட்டு 1932ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.

**ரோமின் கொலோசியம்**
புரதான உரோமாபுரி நகரத்தின் பொது அரங்கம் இது. இத்தாலியின் தலைநகரான உரோமின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இதன் கட்டுமானப்பணிகள ஆரம்பித்தவர் வெஸ்மாஸியன் சக்கரவர்த்தி

**பெட்ரோ**
ஜோர்தான் நாட்டின் சாக்கடலுக்கு அருகேயுள்ள மலைத்தொடரில் செதுக்கி உருவாக்கப்பட்ட ஒரு மாளிகை. இங்கே கோவில்கள் வளைவுகள், கோபுரங்கள் என 800இற்கும் அதிகமான நினைவிடங்கள் உள்ளன. இது 1812இல் ஜொஹான் லூட்விக் பார்க் எனும் சுவிற்சலாந்துக் காரரால் கண்டறியப்பட்டது.

**சுதந்திர தேவி சிலை**
அமெரிக்க நாட்டின் தேசிய நினைவுச் சின்னமான சுதந்திரதேவி சிலை பிரான்ஸ் நாட்டினால் 1886.10.28இல் நியூயோர்க்கில் நிறுவப்பட்டதுடன் 2011ஒக்ரோபரில் 125 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

**அழும் சுவர்**
யூதர்களின் புனித இடமான the wailing wall அல்லது Westen hallஐக் குறிக்கும்.







## பனிப்போர்

பன்னாட்டு அரசியலில் அரை நூற்றாண்டுக்கு மேலாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டதும் உலக மக்களை அடிக்கடி திகில் கொள்ளச் செய்ததுமான ஒரு பதமாக 'பனிப்போர்'காணப்படுகிறது. உலக அரசியலில் தனித்துவம் பெற்றிருந்த வல்லரசுகள் நேரடியாக முட்டி மோதி தமது முரண்பாடுகளை வெளிப்படுத்தாது மறைமுகமாகத் தமக்குள் நடத்தி வந்த போர் முறையே பனிப்போர் எனக் கருதப்படுகிறது.

தமது நலனைப் பலப்படுத்தவும் எதிரியின் அல்லது எதிரணியின் நலனைப் பலவீனப்படுத்தவும் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் வகுத்து தாமாகவும் ஏனைய நாடுகளின் ஊடாகவும் நடத்தி வந்த ஒரு மறைமுகமான போராக பனிப்போர் கொள்ளப்படுகிறது. போருக்கும் போர் அற்ற நிலைக்கும் இடையில் ஊசலாடி நின்றது. இந்தப் பதம். இரண்டாம் உலக போரின் பின் பன்னாட்டு விடயங்களின் நடத்தையை நிர்ணயிக்கும் ஒன்றாக இந்தப் பனிப்போர் அமைகின்றது. தெற்கு கரோலினா சட்ட சபையில் அமெரிக்க அரசியல்வாதியான பேனாட்பாருச் 1947ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இந்தப் பதத்தை முதல் தடவையாகப் பயன்படுத்தினார் எனக் கருதப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் பின்பே இந்தப் பனிப்போர் ஆரம்பமானது எனப் பெரும்பாலும் கூறப்படுகிறது.

(தொடரும்)

## புலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சோரம் போகும் அரசியல்வாதிகளுடன் அவர் நட்புப் பேணி வருகிறார் என்றும் எழுதப்பட்டுள்ளது. ஈழ விடுதலைப் புலிகள் என்று துண்டுப் பிரசுரத்துக்கு உரிமை கோரப்பட்டுள்ளது. இது தொடர் பில் விசாரணை நடத்தப்படுகி றது. பருத்தித்துறை நீதிமன்றுக்கும் அறிக் கையிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-4.26)

## களவாகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபை எச்சரித்துள்ளது. அதனையும் மீறி பனை தறித்தாலோ அல்லது அதற்கு உடந்தை யாக இருந்தாலோ எவராக இருந்தாலும் நீதிமன்றில் முற்படுத்தப்படு வர் என்றும் கூறியுள்ளது. அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படுவது மட்டுமன்றி சிறைத் தண் டனையும் விதிக்கப்படும் என்றும் சபை எச்சரித்துள்ளது.

சட்ட விரோத பனை தறித்தல் தொடர்பான முறைப்பாடுகளை 021 222 2034 என்ற இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் என்றும் சபைமேலும்தெரிவித்தது. (தொடர்புடைய செய்தி பக். 12) (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களின் ஆளுநர்களையும் அதிரடி யாக இடமாற்றம் செய்துள்ளது அரசு. வர லாற்றில் முதல் தடவையாக தமிழர் ஒரு வரை வடக்கு மாகாண ஆளுநராக நியமிக் கத் தீர்மானித் துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ் தானுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை ஆரம்பிக்க முன்னர் அனைத்து மாகா ணங்களின் ஆளுநர்களையும் கொழும் பில் சந்தித்துப் பேசினார். ஆளுநர் ஒருவ ரின் சேவைக்காலம் ஒரே இடத்தில் மூன்று வருடங்கள் என வரையறுக்கப்பட்டுள்ள தால் தற்போது சேவையில் உள்ள அனைத்து ஆளு நர்களும் இடமாற் றப்படவுள்ளனர் என்று அப்போது அறிவித்தார்.

இதன்படி சப்ரகமுவ மாகாண ஆளுநர் மார்ஷல் பெரேரா தென் மாகாண ஆளுந ராகவும், மத்திய மாகாண ஆளு நர் நிலுக்கா ஏக்க நாயக்க சப்ரகமுவ மாகாண ஆளுநராகவும், தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார மேல்மாகாண ஆளுநராகவும், மேல்மாகாண ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநராகவும், வடமேல் மாகாண ஆளு நர் அமரா பியசீலி ரத்நாயக்க வடமத் திய மாகாண ஆளுநராகவும், வடமத்திய மாகாண ஆளு நர் பி.பீ. திசாநாயக்க வட மேல் மாகாண ஆளுநராகவும் இடமாற்றப்பட்டு நியமிக்கப்பட வுள்ளனர்.

அதேவேளை, ஊவா மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் இட மாற்றம் செய்யப்படமாட்டார்கள் என்று அறியமுடிந்தது. இதுவரை மேல் மாகாண ஆளுநர்களாக தமிழர்களே நியமிக்கப்பட்டு வந்தனர். அதேபோல் வடக்கு மாகாண ஆளுநர்களாக சிங்களவர்களே நியமனம் பெற்று வந்த னர். இப்போது அந்தப் பாரம்பரியம் மாறுகின்றது. (உ-சி)


### பொருள்கள் தேவை

தெல்லிப்பழையில் இயங்கிவரும் பிரபல அலுமினியம் உற்பத்தி தொழிற்சாலைக்கு (Elephant Metal and Aluminum Works pvt ltd) பின்வரும் பொருள்கள் தேவை.

1. அனைத்துவிதமான அலுமினியங்களும் கொள்வனவு செய்யப்படும். (பழைய அலுமினிய பாத்திரம், லித்தோ சீட், இயந்திர உதிரிப்பாகங்கள், வார்ப்பு அலுமினியம், பீர் டின்)
2. பழைய பேப்பர், காட்போட் பெட்டி
3. ஈயம், பித்தளை, செப்பு

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
Elephant Metal and Aluminum works pvt ltd
Ampanai, Tellipalai, Jaffna.
075 977 9851, 075 672 7907, 021 224 3338

சிவன்ஸிக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் : 654 வர்ணம் : நீலம்
திகதி : 2018.03.23
வெற்றி இலக்கங்கள் 39 25 48 08
ஆங்கில எழுத்து Z
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 12,864,220/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 270
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.03.23
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 88,428,160/-
B 28 37 49 50
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 205
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.03.23
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,037,560/-
வெற்றி இலக்கங்கள் 21 31 34 39
ஆங்கில எழுத்து V
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# VACANCIES

We are a dominant water and waste water works Consultancy Company in the region operating from our headquarters in Colombo, Sri Lanka. We have successfully executed projects across the island spanning water infrastructure, roads and bridges, storm water drainage, sewerage, rural and urban development projects.

We are currently seeking prospective candidates for the following vacancies that exists in our projects in Jaffna

| Position | Qualification | Experience |
|---|---|---|
| Financial Management and Reporting Officer | Degree in Accounting (Accounting, Business or Commerce) | 5 years working on the financial management of a major project 5 years practicing management, accounting and financial reporting |
| Environmental and Social Compliance Officer | Degree in Science (environment related) or Engineering (Environmental) | 10 years conducting environmental assessments 5 years auditing environmental impacts |
| Project Coordinator 1 (Civil) | Higher National Diploma in Engineering or Equivalent. | 10 years constructing works of water retaining structures, buildings, road works |
| Project Coordinator 2 (Mechanical and Electrical) | Higher National Diploma in Engineering or Equivalent. | 5 years supervising the construction of works, 5 years constructing works in water sector |
| Occupational Health and Safety Officer | Certificate in Occupational Safety and Health | 10 years practicing occupational safety and health. 7 years preparing safety plans, safety procedures and other safety documentation |
| Project Administration Officer | Qualification in Business Management, Business Administration or similar | 10 years' experience in administration preferably in a project related area. High level of proficiency in MS Word and MS Excel. |

Applicants should send a detailed CV within 7 days of this advertisement to **hr@ceywater.com** and specify the post that you are applying in the subject line.

**CEYWATER CONSULTANTS (PVT) LTD.**
No.54, Maharagama Road, Nikape, Dehiwala.
TEL: 0112727380/2727387

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.03.2018 வெற்றி வாரம் 2269 வர்ணம் சிவப்பு
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 34 36 55 59
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 25, 33, 104/=
2018.03.25ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919




### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த (22.02.2018) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த

**அமரர் சின்னத்தம்பி ஜெயராஜா**

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் 24.03.2018 (சனிக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து இந் நிகழ்வில் பங்கேற்று தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

"தெய்வநிழல்", மல்வம், உடுவில். குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்

தோற்றம் 13 11 1944

மறைவு 22 02 2018



கடந்த 22.02.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் துரைராஜா சிவராஜா**


அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.03.2018) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு தொலை பேசி மூலமும் நேரிலும் ஆறுதல் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இணுவில் தெற்கு, இணுவில். குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

## தம்பிராசா தில்லைநாதன்



தோற்றம் 16.07.1932 மறைவு 23.03.2018

அராலி மேற்கு, வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் டச்வீதி, மூளாயை வசிப் பிடமாகவும் கொண்ட தம்பிராசா தில்லைநாதன் நேற்று (23.03.2018)வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் வயிர முத்து - வள்ளியம்மை தம்பதி களின் மருமகனும் சர்வேஸ்வரி யின் அன்புக் கணவரும் தம்பி ராசா (சங்கானை ப.நோ.கூ.சங்கம்), கந்தராசா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற தினகராசா , நடனசபை (ஆசிரியர் - உடையார் கட்டு ம.வி.) ஆகியோரின் தந்தையும் ஜெயநந்தினி (கௌரி), ஸ்ரீகவிதா (ஆஸ்திரேலியா), மதிவதனா (ஆசிரியர் - யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான நடராஜா, தையல்முத்து, தையல்நாயகி, வள்ளிநாயகி, அருமருந்து அம்மை, வைத்தியநாதன் ஆகியோரின் சகோதரனும் கலாதரன், நேசபரன், பிரணவி, லோக்ஷியா, கஜானன், யக்ஷ்மிகா, சங்கீதன், பவன்ஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பித்தனை மயானத்தில் எரியூட்டப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச் வீதி, மூளாய், சுழிபுரம். 077 910 3377

தகவல்: குடும்பத்தினர்.

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை



26.03.2018 பங்குனித் திங்களன்று இல.440, கொரவப்பொத்தான வீதி சின்னப்புதுக்குளம், வவுனியாவில் எமது காரியாலயம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதால் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் சமுகமளித்து ஆதரவு நல்குமாறு வேண்டுகின்றோம். எல்லா இன, மதம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு :- 077 973 3183


## சேவை நலன் பாராட்டு



திரு.
மதியாபரணம்
அம்பிகைபாகன்

நிர்வாக கிராம அலுவலர் - பிரதேச செயலகம், வேலணை

24.03.2018 வரை சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் திரு. மதியாபரணம் அம்பிகைபாகன்

அவர்களைப் பாராட்டி எல்லா சிறப்பும் பெற இறை ஆசியினை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்
நலன்புரிச் சங்கம், பிரதேசசெயலகம், வேலணை


## விற்பனைக்கு

சிறப்புத் தேவையுடையோர்க்கான
**கழிப்பறைக் கட்டில்** விற்பனைக்குண்டு



தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்
077 030 2734

(ak. 407) (13)


## அகில இலங்கை பரஸ்பரசகாய நிதிச்சங்கம் (வ-து) வட்டுக்கோட்டை

ஆரம்பம்:- 1957 பதிவு இல: S154

மக்கள் சேவையில் நீண்ட காலமாகப் பணிபுரிந்த எமது நிறுவனம் தனது 62 ஆவது சேவை வருடத்தில் தமது அங்கத்துவப் புத்தகங்களை மற்றும் ஆதாரங்களை இழந்து தவிக்கும் எமது நிறுவன அங்கத்தவர்களுக்கு உதவும் வகையில் விசேட கொடுப்பனவுத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

எவ்வித ஆதாரங்களும் இன்றி அல்லலுறும் அங்கத்தவர்கள் துயர்போக்க அவர்கள் அங்கத்துவம் பெற்ற வருடம், அங்கத்துவப் பணம் கட்டிய காலம் போன்ற விவரங்களைக் கூடுமானவரை சேகரித்து எம்மிடம் கோரிக்கை விடும் பட்சத்தில் கட்டிய பணத்தை மேலதிகக் கொடுப்பனவுடன் வழங்க எண்ணியுள்ளோம்.

கோரிக்கைவிடும் பத்திரம் ரூபா ஐம்பது முத்திரை ஒட்டப்பட்டு சமாதான நீதவான் முன்பு கையொப்பமிட்டு அவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பத்திரத்தில் உங்களைப் பற்றிய விவரம், சேர்த்து பணம் கட்டிய காலம் ஏறக்குறைய கட்டிய பணம் என்பன குறித்து சத்தியப் பத்திரத்தை எம்மிடம் சமர்ப்பித்தால் அவற்றில் காணும் சாதக பாதகங்களை சீர்தூக்கி ஆராய்ந்து உண்மை நிலையை வெளிக் கொணர்ந்து சங்க சட்ட ரீதியாகவும் மனிதநேய அடிப்படையிலும் செயற்பட ஆலோசிக்கின்றோம்.

போர் முதலான இடப்பெயர்ச்சிகளால் அங்கத்து வப் புத்தகங்களைத் தவறவிட்ட அங்கத்தவர்களின் வழி காட்டலிற்காகவே இவ்விளம்பர ஏற்பாடு.

இந்துக்கல்லூரியடி
சித்தங்கேணி,
வட்டுக்கோட்டை.
077 149 5631

(CS/14917) (11,17)

இ.ஆனந்தராசா
நிர்வாக செயலாளர்.


SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 783
சீட்டிழுப்பு திகதி 2018.03.22 வியாழக்கிழமை

B 14 24 31 49

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 58,896,668/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்


## தாதியர் ஒன்றுகூடல் நிகழ்வு

**இடம்** - தாதியர் பயிற்சிக் கல்லூரி


**காலம்** - இன்று 24.03.2018 பிற்பகல் 4.30 மணி

மேற்படி நிகழ்விற்கு யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வில் சென்றிருக்கும் தாதிய உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் பெற்று சென்றிருக்கும் உத்தியோகத்தர்களையும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 . 04 . 1942



மறைவு 22 . 02 . 2018

### அமரர் சின்னத்தம்பி இராசம்மா

கடந்த 22.02.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் சின்னத்தம்பி இராசம்மா அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (24.03.2018) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

(AKN 403) (13.17)

## மரண அறிவித்தல்

மலர்வு 14 . 03 . 1941



உதிர்வு 21 . 03 . 2018

### சுவாம்பிள்ளை அல்பிரட் (திரவியம்)

*(ஓய்வுநிலை கிளை முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு)*

யாழ். சில்லாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை அல்பிரட் கடந்த (21.03.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை - அக்னேஸ் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சிப்பிரியாம்பிள்ளை - அமிர்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மரியம்மாவின் (கமலம்) பாசமிகு கணவரும் றிச்சாட் டீனோ, ஜெயநிர்மலா (நிம்மி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பத்திநாதர் மற்றும் கென்றி, யேசுதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீகாந்தன், அனிற்றா ஆகியோரின் அன்பு மாமனாரும், அருளம்மா, றூபி அன்னமேரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யொணத்தன், அஸ்மிதா, றிஷி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் (28.03.2018) புதன் கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர் - சு.கென்றி - 077 876 8621
சு.யேசுதாசன் - 077 071 0940

(CS 15046/15/17)


இது புதுசு



பெண்களுக்கான காலணி வகைகள் சில சந்தைக்கு அறி முகமாகி யுள்ளன. இவை 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குழி, ஈச்சமோட்டையில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

077 614 6434 (CS/15027) (11,17)

IELTS KU Education

- IELTS Coaching
- English for IELTS
- Spoken English
- ESOL Courses

Call: 0777302882
MBA-UK qualified lecturer
Authorized IELTS Centre

Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

No 788/4,Chemmani Rd,Nallur,Jaffna. 0777-302882

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை.

| | | |
|---|---|---|
| மேசன் | - 1400/- | - 1500/- |
| மேசன் உதவியாளர் | - 1200/- | |
| தச்சுத் தொழிலாளி | - 1400/ | - 1500 |

தினசரி சம்பளம் வழங்கப்படும். (CS/15036) (11,17)

075 918 3940
8.30 AM - 5.00 PM தொடர்பு கொள்ளவும்

## காணி விற்பனைக்கு

இல.72, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

077 518 5460
shivakums@live.no (CS/15037) (11,17)

## வீடு வளவு விற்பனைக்கு

இராச பாதை கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப் போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3 பரப்புக்காணி புதிய வீட்டுடன் மின்சார வசதி, குழாய்க் கிணறு, பங்காக உரிய வெட்டுக் கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உறுத்துடன் விற்பனைக்குண்டு.

077 978 3206, 076 978 9016


## பெயர் மாற்றம்

மாவடி வீதி, அச்சுவேலி தெற்கில் வசிக்கும் பகவதி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை யோகேஸ்வரி எனப் பெயர்மாற்றிக் கொள்வதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் யோகேஸ்வரி எனவே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**து.யோகேஸ்வரி**

(CS 15042/15/17)


## பைக்கோ வாடகைக்கு விடப்படும்

கிணறு வெட்ட, குழி வெட்ட, கல்லுடைக்கின்ற வேலைகள் செய்து தரப்படும். **லைரா கொம் நெற், ஆவரங்கால்.**

**தொடர்பு - 077 526 2620**

## விற்பனை முகவர் தேவை

ரேஸ்ரா இன்டஸ்ரி நிறுவனத்தின் உற்பத்திகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விற்பனை செய்யக்கூடிய ஆர்வமுள்ளவர்கள் தேவை. **தொடர்பு - 077 978 9223**


## பெயர்மாற்றம்

சாவகச்சேரியைச் சேர்ந்த **சொக்கலிங்கம் சிந்டல்நாதன்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **சொக்கலிங்கம் செந்தில்நாதன்** என மாற்றம் செய்வதோடு இது தொடர்பான சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதையும் அறியத்தருகிறேன்.

**செந்தில்நாதன்**

# அறிவித்தல்

**நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம்**


**ஆதனப்பெயர்மாற்றம்**

**ஆதன இல- 86/39 அரியாலை வீதி, வட்டாரம் - 11**

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம்-11 இல 86/39, அரியாலை வீதி, எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் சொ. உ. கோ S. இரத்தினசிங்கம் எனும் பெயரில் காணப்படுகின்றது. வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சிவியாதெரு இறை தற்போது அரியாலை இறை புல்லாந்தித்தாழ்வு அல்லது கிலுகிலுப்பைத்தாழ்வு நிலப்பரப்பு 26குளி 11.36 இது நில அளவையாளர் P.தனராஜா என்பவரால் வரையப்பட்ட 3541A/ 2014.05.10 ஆம் இலக்க நில அளவை படத்தில் துண்டுகள் ஒன்று இரண்டு மற்றும் மூன்று துண்டுகளாக காட்டப்பட்டுள்ளது. இவ் ஆதனமானது சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான தியாகலிங்கம் கணதீபன் என்பவரால் வரையப்பட்ட 873/03.07.2017ம் இலக்க உரித்துப் பிரகடனப்படுத்தல் உறுதி மூலம் இரத்தி-னசிங்கம் அன்ரனி சஞ்ஜீவ் என்பவர் இவ் ஆதனத்திற்கான உறுதி யுத்தகாலத்தின்பே-ாது பழுதடைந்து விட்டதாலும் காணிப் பதிவு அலுவலகத்தில் தேடுதல்போட்டு பெற்றுக்கெ-ாள்ள முடியவில்லை எனவும் தனது தந்தையாரான ஸ்ரீமுருகா இரத்தினசிங்கத்தின் கொள்வனவும் ஆட்சியுமானது என வெளிப்படுத்தி தனக்கு உரித்தானது என எழுத்துப் பிரகடனம் செய்து இரத்தினசிங்கம் அன்ரனி சஞ்ஜீவ் என்னும் தனது பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார் இவ் ஆதனப்பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங் களுடன் **30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இரத்தினசிங்கம் அன்ரனி சஞ்ஜீவ் என்பவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப் பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி
24.03.2018

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**




# மரண அறிவித்தல்

## திருமதி சீதாதேவி செல்லையா



குரும்பைகட்டி, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாதேவி செல்லையா நேற்றுமுன்தினம் (22.03.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னரத்தினம், சிவமணி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுபேந்திரன் (ஆசிரியர் - யா / கரணவாய் மகா வித்தியாலயம்), தவேந்திரன், நாகேந்திரம் (SPHI - கரவெட்டி), சிவனேஸ்வரி, இரவிந்திரன் (பிரான்ஸ்), பாலேந்திரன், புவேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவனேஸ்வரி, ஜெயந்தி (ஆசிரியை - யா/ மணற்காடு றோ.க.த.க. பாடசாலை), வனிதா (ஆசிரியை - கிளி/சாந்தபுரம் கலைமகள்வித்தியாலயம்), ஸ்ரீஸ்கந்தராசா(LiftOperator-யாழ்.போதனா வைத்தியசாலை), பிரசாந்தி ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயந்தினி (மாணவி விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்), நதிலாசன் (PHI - பயிலுனர் பொதுச் சுகாதாரப் பிராந்திய பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம்), நதிருசன், பிரணவன், கஜானகன், தேனுசன், ஜீவனா, நிதுசன், அபிஷன், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2018) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குரும்பைகட்டி,**
**புலோலி வடமேற்கு, புலோலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 490 6658, 072 699 6445**

# பிற்போடப்பட்டுள்ளது



**அமரர்**

**தம்பிராசா தவராசா**

நாளை (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் 31 ஆம் நாள் மதிய போசன நிகழ்வு சிவகாமிமஹால் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**இல. 35/25, கலாசாலை வீதி,**
**4ஆம் ஒழுங்கை திருநெல்வேலி.**

**குடும்பத்தினர்.**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**தோற்றம்**
**14 . 07 . 1926**

**மறைவு**
**22 . 02 . 2018**

கடந்த 22.02.2018 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இராமலிங்கம் வைத்திலிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (24.03.2018) சனிக் கிழமை முற்பகல 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

(In.6234) (13.17)

**சங்கம் வீதி,**
**சங்கத்தானை.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**14 . 10 . 1921**

**மறைவு**
**23 . 03 . 2018**


## திருமதி நாகம்மா இராசையா

குப்பிளான் வடக்கு, சமாதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா (தாயார்) இராசையா நேற்று (23.03.2018) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அனன்ார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து பொன்னாத்தை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் கமலா, பவளம்மா, கணேசலிங்கம், திருச்செல்வம் (சாரதி) .இந்திராணி, கந்தசாமி (கந்தோ), சந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் வசந்தா தேவி, பஞ்சலிங்கம் காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, வியாகேஸ்வரி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் நவமணி, சர்மினி ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# கேலப் முன்னேற்றம்

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான தயார்ப்படுத்தல் தொடர்களில் ஒன்றாகக் கருதப்படும், மியாமி ரென்னிஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்.

நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் கேலப்பை எதிர்த்து பிரான்ஸ் வீராங்கனை டுடின் மோதினார். மூன்று செற்களைக் கொண்டாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் கேலப். எனினும் சரிவில் இருந்து மீண்ட அவர் அடுத்த இரண்டு செற்களையும் முறையே 6:3, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)

## ஞானமுருகன் அணி இறுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 24

கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதல் பாதியின் கலைவாணியின் கோலைப் பதிவுசெய்தார் ஆனந்தராசா.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியின் முதலாவது கோல் பவளவேலினாலும் இரண்டவது கோல் சதீஸினாலும் பதியப்பட்டது. முடிவில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# நியூசிலாந்து அணி மேலும் முன்னிலை




இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் நேற்றைய இரண்டாம் நாள் நிலவரத்தின்படி நியூசிலாந்து அணி 171 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. மழை காரணமாக நேற்று வெறும் 23 பந்துப்பரிமாற்றங்களே வீசப்பட்டன. இதனால் நியூசிலாந்து அணி இமாலயப் பலம் பெறுவதற்கு இருந்த வாய்ப்பு நேற்றுத் தவறியது.

இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் பகலிரவு ஆட்டமாக நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி வெறும் 58 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பின்வரிசை வீரரான ஓவர்டன் பெற்ற 33 ஓட்டங்களே அதிகபட்சம். ரூட், ஸ்ரோக்ஸ், பரிஸ்ரௌவ், மொயின் அலி, புரோட் ஐவரும் ஓட்டமெதையும் பெற்றாமல் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் போல்ட் 6 இலக்குகளையும், சவுத்தி 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அணித் தலைவர் வில்லியம்சன் 91 ஓட்டங்களுடனும், நிக்கொல்ஸ் 24 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். சதம் கடந்தார் வில்லியம்சன். அவர் 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நிக்கொல்ஸ் மற்றும் வற்லிங் இருவரும் தாக்குப்பிடித்தனர். நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றுள்ளது நியூசிலாந்து அணி. நிக்கொல்ஸ் 49 ஓட்டங்களுடனும், வற்லிங் 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## கிரிக்கெட்டில் முழுக்கவனம்

### சமி தெரிவிப்பு

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான சமி, தன்மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபட்டுள்ள நிலையில், "இனிவரும் காலங்களில் கிரிக்கெட்டில் அதிக கவனம் செலுத்துவேன் என்று தெரிவித்தார்.


சமி மீது அண்மைக் காலமாக தொடர்ந்து பல்வேறு குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி வந்தார் அவரது மனைவி ஹசின். டுபாய் சென்று அங்கு பாகிஸ்தான் பெண் ஒருவரைத் தொடர்புகொண்டு சமி ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று அவர் தெரிவித்திருந்தார். ஹசினின் முறைப்பாடு தொடர்பில் ஊழல் தடுப்புக் குழு விசாரணை நடத்தியது. இதனால் ஐ.பி.எல். தொடரில் களமிறங்கும் வாய்ப்பு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒப்பந்தம் ஆகியவை சமிக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. விசாரணையின் முடிவில் சமி குற்றமற்றவர் என்று நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சமி இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த 15 நாள்களில் எனது கிரிக்கெட் வாழ்வில் நிறைய விடயங்கள் நடந்து விட்டன. என்மீதான சூதாட்ட புகாரால் மிகுந்த நெருக்கடியில் இருந்தேன். தற்போது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, நான் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை என்று அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு எனக்கு நிம்மதியை அளித்திருக்கிறது. எனது தேசப்பற்று மீது கேள்வி எழுப்பியபோது நான் மிகவும் காயம் அடைந்தேன். ஆனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விசாரணை மீது முழு நம்பிக்கை இருந்தது. மீண்டும் களத்தில் சிறப்பாக செயற்படக் காத்திருக்கிறேன். கிரிக்கெட்டில் முழுக் கவனம் செலுத்துவேன். எனது வேட்கையை சரியான பாதையில் செலுத்தி செயற்படுவேன்" என சமி மேலும் தெரிவித்தார். (ம)

# உலகக்கிண்ணத் தொடரில் வாய்ப்புக் கிடைக்கும் தீவுகளின் சகலதுறை வீரர் பிராவோ நம்பிக்கை

"இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்" என்று தனது நம்பிக்கையை வெளிப் படுத்தினார் மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான டுவைன் பிராவோ. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக விளையாடுவதற்காக அந்த அணியுடன் நேற்றுமுன்தினம் இணைந் தார் பிராவோ. நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகக்கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இல்லாதது என்பது பிபா உலகக்கிண்ணத் தொடரில் இத்தாலி இல்லாமல் இருப்பது போன்றே இருக்கும். எந்த ஒரு அணிக்கும், அல்லது ஒரு நாட்டுக்கும் எதுவும் உத்தரவாதம் இல்லை. தற்போதைய அணி இளம் அணி. கிரிக்கெட் உலகம் மேற்கிந்தியத் தீவுகள் அணியை பார்க்க விரும்புவதுடன், சிறந்த போட்டியையும் காண விரும்புகிறது. அவர்கள் சிறப்பாக செயற்பட நான் வாழ்த்துகிறேன். உலகக்கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பை நான் பெறுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு திரும்பியிருப்பது என்னை பொறுத்தவரையில் வீட்டுக்கு திரும்பியிருப்பது போன்றதாகும். கடந்த இரு வருடங்களாக நாங்கள் ஐபிஎல் தொடரை தவறவிட்டோம். ஐபிஎல் ஏலத்தை ஆஸ்திரேலியாவில் இருந்தபடி தொடர்ந்து கவனித்தேன். சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக நான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என வேண்டிக் கொண்டிருந்தேன். என் மீது நம்பிக்கை




வைத்துள்ள அணி நிர்வாகத்துக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

எங்கள் அணியானது உலகிலேயே சிறந்த தலைவரால் வழிநடத்தப்படுகிறது. தனிப்பட்ட முறையில் என்னைப் பொறுத்தவரையில் சென்னை அணி அதிகம் சாதித்துள்ளது. மஞ்சள் ஆர்மியை மகிழ்விக்க விரும்புகிறேன். இந்தத் தொடரில் எனக்கு எந்தவித நெருக்கடியும் இல்லை. அதிக அனுபவம் வாய்ந்த அணியையே நாங்கள் கொண்டுள்ளோம். வற்சன், ஜடேயா, டோனி போன்ற அனுபவம் வாய்ந்த வீரர்கள் உள்ளனர்" என்று பிராவோ மேலும் தெரிவித்தார். (ம)

# உலக ரி-20 அணிக்கு மோர்கன் தலைவர்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ரி-20 காட்சி கிரிக்கெட் ஆட்டத்துக்கான உலக லெவன் அணிக்கு இங்கிலாந்து அணியின் தலைவரான மோர்கன் தலைவராக நியமிக்கப்பட்டார். கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இர்மா, மரியா என்று இரண்டு புயல்கள் மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்கின. இந்தப் புயல்களால் மேற்கிந்தியத் தீவுகள் பெரியளவில் பாதிக்கப்பட்டன. இதையடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக நிதி திரட்டுவதற்கான காட்சியாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை. மேற்கிந்தியத் தீவுகள் அணியை எதிர்த்து உலக லெவன் அணி இந்த ஆட்டத்தில் மோதவுள்ளது. புகழ்பெற்ற இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் களமிறங்கும் உலக லெவன் அணிக்கு தலைவராக இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கன் நியமிக்கப்பட்டார். (ம)



# சென். நீக்கிலஸ் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 24

கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.



கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் சென். நீக்கிலஸ் அணி முன்னிலை வகித்தது. நீக்கிலஸ் அணியின் இரண்டு கோல்களையும் பதிவுசெய்தார் அமிலன். ஞானமுருகன் அணியின் கோலைப் பதிவுசெய்தார் வாகிசன்.

இரண்டாம் பாதியில் மற்றொரு கோலைப் பதிவுசெய்து கோல் கணக்கை 2:2 என்றாக்கினார் வாகிசன். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளும் சமநிலையில் முடிவடைந்ததை அடுத்து நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது நீக்கிலஸ் அணி. (ம-23)

## மன்னார் லீக்கின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கால் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானம், மன்னார் ஆண்கள் தேசிய கல்லூரி மைதானம் ஆகியவற்றில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 35 கழகங்கள் பங்குபற்றவுள்ளன. (ம-23)

## ஐக்கியம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 24

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இரண்டாம்பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் தமிழர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தமிழர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் தமிழர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## விண்மீன் கலைமதி இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான பயிற்சிமுகாமை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது சென்னை சுப்பர் கிங்ஸ். அது தொடர்பான ஒளிப்படங்களை அந்த அணி தனது சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளது. (ம)

# நவிண்டில் தொடர் இறுதியில் கொலின்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 24

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கொலின்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கலைமதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து அண்ணா சிலையடி இளைஞர் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதின. 12ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பிரதாப். முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது கொலின்ஸ்.

இரண்டாம் பாதியின் 13ஆவது நிமிடத்தில் அண்ணா சிலையடி இளைஞர் அணியின் கோலைப் பதிவுசெய்தார் சாரு. மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது கொலின்ஸ். (ம-422)



## சிங்களம்

செவிமடுத்தல் மற்றும்
வாய்மூலப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு
(அரச ஊழியர்களுக்கானது)

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 25.03.2018
ஞாயிறு நேரம் - 11.30 - 12.30

ஶ்ரீமாஸ்டர்
ஶ்ரீஇரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
இல. 72, இராமநாதன் வீதி, (மிலேனியம் அருகில்)
யாழ்ப்பாணம். 077 703 3729

## முழுநேர ஆங்கில பயிற்சி

பதிவுகள் ஆரம்பம்

பாட உள்ளடக்கங்கள்
முழுமையான இலக்கணக்கற்றல் (Complete Grammar - 48 hours)
முழுமையான பேச்சுப்பயிற்சி (Complete Spoken English - 48 hours)
முழுமையான எழுத்துப்பயிற்சி (Complete Writing - 18hours)
முழுமையான வாசிப்புப்பயிற்சி (Complete Reading - 14 hours)

Complete English

| | |
|---|---|
| பயிற்சிக்காலம் : 02 மாதங்கள் | நாட்கள் : திங்கள் முதல் வியாழன் வரை |
| | நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை |

- இக்கற்கைநெறியைத்தொடர O/L கற்றிருத்தல் போதும்.
- 60 பேருக்கான விண்ணப்பபடிவங்கள் 25.03.2018 வரை மட்டும் வழங்கப்படும்.
- விண்ணப்பிப்போர் நேரடியாக பதிவுசெய்தல் வேண்டும்.
- விண்ணப்ப இறுதி திகதி 25.03.2018 ஞாயிறு.

Admissions will be granted on first come and first serve basis

"தேசிய ஆங்கில டிப்ளோமா" சான்றிதழுடன் கூடிய கற்கைநெறி

SAAMSON
Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலை யாழ்நகர்.
☎ 021 320 3313 077 1570 486


# இளவாலை யங்ஹென்றிஸ் இறுதியில்



யாழ்ப்பாணம், மார்ச் 24
கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கலைவாணியின் மைதானத்தில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. யங்ஹென்றிஸ் கோலைப் பதிவுசெய்தார் தனேஸ். அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்திய நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.



இரண்டாம் பாதியில் யங்ஹென்றிஸின் கோலைப் பதிவுசெய்தார் ஞானரூபன். பதிலுக்கு றோயல் அணியின் சார்பாக இரண்டு கோல்களைப் பதிவுசெய்து ஆட்டத்தை 2:2 என்றாக்கினார் கஜகோபன். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளும் 5:5 என்று சமநிலையில் முடிவடைந்ததை அடுத்து நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது யங்ஹென்றிஸ்.

(ம-23)


NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

HIKVISION Authorized Dealer Partner
Jaffna CCTV Surveillance Camera

புதுவருடத்தை முன்னிட்டு

யாழில் எங்குமில்லா சலுகை
10% விசேட விலைக்கழிவு
கொள்வனவு செய்யும் அனைத்து கண்காணிப்பு கமரா பக்கேஜ்களுக்கும் 1TB Hard Disk இலவசம்

1TB Surveillance Hard Disk FREE

வடமாகாணத்தின் HIKVISION அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.(HCSA Exam)

4 CHANNEL 720P
Basic Day & Night Package

HD-TVI 720P IR Camera X 4
1080P Lite Recorder X 1
BNC & DC Connectors X 4
4 CHANNEL PSU 12VDC X 1
Co-axial & Power Cable 50 Meters

2 YEARS WARRANTY

Rs.27,300/-

இச்சலுகை இருப்புள்ள வரை அல்லது ஏப்பிரல் 15ஆம் திகதி வரை மட்டுமே.

நிறுவுதல் கட்டண விபரங்களுக்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
No.195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994


# தென்னாபிரிக்கா முன்னிலையில்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறுவதற்கு மிகவும் அதிகப்படியான வாய்ப்புக்கள் உருவாகின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நேற்றுமுன்தின முதலாவது நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எல்கர் 121 ஓட்டங்களுடனும், ரபாடா 6 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். ரபாடா 22 ஓட்டங்களுடனும், மோர்கல் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 311 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 4 இலக்குகளையும், ஹசில்வூட், லையன் இருவரும் தலா 2 இலக்குகளையும், மார்ஸ், ஸ்ராக் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நாள் முடிவில் 9 இலக்குகளை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பெய்ன் 33 ஓட்டங்களுடனும், ஹசில்வூட் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி போகீந்திரன் (சிவபாக்கியம்)



பிறப்பு 22.11.1949 இறப்பு 23.03.2018

சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், இணுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரி போகீந்திரன் நேற்று (23.03.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சித்திரவல்லி தம்பதியரின் அன்பு மருமகளும் போகீந்திரனின் (அங்கிள்) அன்புமனைவியும் ரேவதி (ஆசிரியை, யா/ தாவடி இ.த.க. பாடசாலை), கற்பகம், சித்திரா (ஆசிரியை, யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை), தனேஸ் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகனராஜ், வாசவன், பாஸ்கரன், துளசி ஆகியோரின் அன்புமாமியும் ஆயுஷன், தனுஷாளினி, துவாரகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இணுவில் வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.